Your Friends In Finance
SHABRA
நிதித்துறையில் உங்கள் நம்பிக்கையுள்ள நண்பன்
SHABRA
Unico Finance Ltd.

# சஞ்சீவி

விலை ரூ 2/-
அறிவு-ஆக்கம்-அபிவிருத்தி

Your Friends In Finance
SHABRA
நிதித்துறையில் உங்கள் நம்பிக்கையுள்ள நண்பன்
SHABRA
Unico Finance Ltd.

மலே:- 2 யாழ்ப்பாணம் பிரபவ ஹூ ஆனி மீ 06 உ சனிக்கிழமை ஹிஜ்ரி 1407 ஷவ்வா பிறை 22 (20-06 1987) SANJEAVY - REGENERATIVE TAMIL WEEKLY சிகரம்:- 21

# இந்திய மத்தியஸ்தத்தை ஸ்ரீலங்கா இப்போதும் ஏற்கத் தயார்

## யாழ். மக்களுக்கு உணவுப் பொதி உறவுகளைப் பாதிக்கவில்லை

### புதுடில்லியில் ஹமீத் பேட்டி

புதுடில்லி, ஜூன் 20

இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இந்தியாவின் மத்தியஸ்தத்தை ஏற்பதற்கு ஸ்ரீலங்கா இப்போதும் தயாராக உள்ளது.

இந்தியா யாழ்ப்பாண மக்களுக்கு உணவுப் பொதிகளை வழங்கியதனால் இந்திய — ஸ்ரீலங்கா உறவுகள் எவ்விதத்திலும் பாதிக்கப்படவில்லை.

ஸ்ரீலங்காவின் வெளியுறவு அமைச்சர் ஜனாப் சாஹுல் ஹமீத் புதுடில்லியில் செய்தியாளருக்கு அளித்த பேட்டியில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இரண்டு நாள் சார்க் அமைப்பு வெளியுறவு அமைச்சர்கள் மாநாட்டின் முடிவிலும், பிரதமர் ராஜீவ் காந்தி, வெளியுறவு மந்திரி திரு. திவாரி ஆகியோரையும் சந்தித்துப் பேசிய பின்னரும் ஜனாப் ஹமீத் செய்தியாளர்களின் கேள்விகளுக்கு நேற்றுப் பதிலளித்தார்.

எந்த நாட்டுடனும் பாதுகாப்பு உடன்படிக்கையோ அல்லது வேறு ஒப்பந்தமோ, ஸ்ரீலங்கா அரசு செய்து கொள்ள மாட்டாது.

பாகிஸ்தானுடன் பாதுகாப்பு உடன்படிக்கை ஒன்றைக் கைச்சாத்திட ஸ்ரீலங்கா முயற்சித்து வருவதாகக் கூறப்படுவது பற்றி செய்தியாளர் ஒருவர் அமைச்சரைக் கேட்டார்.

அப்போதுதான் அமைச்சர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

இந்திய விமானங்கள் (8 ஆம் பக்கம் பார்க்க)

### ஹமீத்திற்கு பலத்த பாதுகாப்பு

புதுடில்லி, ஜூன் 19

ஸ்ரீ லங்கா வெளியுறவு அமைச்சர் சாகுல் ஹமீது தங்கியுள்ள புதுடில்லி ஹோட்டலுக்கு பலத்த பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

அஷோக் ஹோட்டலில் அமைச்சர் ஹமீது தங்கியிருக்கின்றார்.

ஹோட்டலைச் சுற்றி இயந்திரத் துப்பாக்கிகளுடனை பொலீஸார் காவல் புரிகின்றனர். (உ-எ)

## பாக் - ஸ்ரீலங்கா உடன்படிக்கை

### பூர்வாங்க ஏற்பாடுகள் பூர்த்தி?

கொழும்பு, ஜூன் 20

பாகிஸ்தானுடன் நட்புறவு உடன்படிக்கை ஒன்றைச்செய்துகொள்ள ஸ்ரீலங்கா முயற்சிகள் எடுத்துவருவதாக தெரியவருகின்றது.

அமைச்சர் லலித் அத்துலத்முதலி இது பற்றிப் பேசவே அண்மையில் பாகிஸ்தானுக்கு ஜனாதிபதி ஜெயவர்த்தனாவினால் அனுப்பப்பட்டார்.

திரு. ஜெயவர்த்தனாவின் செய்தி ஒன்றையும் இது சம்பந்தமாக (8 ஆம் பக்கம் பார்க்க)

## காரைநகரில் ஹெலிக்கொப்டர் சூடு!

காரைநகர், ஜூன் 20

காரைநகர் சக்கலாவோடைப் பகுதியில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு 7-15 மணியளவில் ஹெலிக்கொப்டர் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இத்தாக்குதலில் பலரது வீடுகள் சேதமடைந்தன. சில வீடுகளில் சோற்றுப் பானைக்குள் கூட துப்பாக்கி ரவைகள் காணப்பட்டன.

இதேவேளை இப்பகுதியில் சென்றுகொண்டிருந்த பயணிகள் வாகனம் ஒன்றின்மீதும் ஹெலிக்கொப்டரில்இருந்து தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இதனால் பயணி ஒருவர் காயமடைந்தார். ஏனையவர்கள் உயிர்தப்பினர். (உ-73)

## மண்டபம் முகாம் நிரம்பி வழிகின்றது

சென்னை, ஜூன் 19

மண்டபம் முகாம் தமிழ் அகதிகளினால் நிரம்பி வழிகின்றது.

இதேவேளை மண்டபம் முகாமை வந்தடையும் யாழ் தமிழ் அகதிகளுக்கு தினமும் காலை உணவை இலவசமாக வழங்கும் பொறுப்பை ஏற்றுக் கொள்வதாக இராமகிருஷ்ண மிஷன் அறிவித்து இருக்கின்றது.

இதனிடையில் கடந்த வியாழன் 5 படகுகள் மூலம் 285 தமிழ் அகதிகள் மண்டபம் அகதி முகாமை வந்தடைந்தனர் என்று அறிவிக்கப்படுகிறது. (உ-எ)

### 1,000 பேர் விடுவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 20

வடமராட்சியில் கைது செய்யப்பட்ட பின்னர் பூஸா கொண்டு செல்லப்பட்ட 1,000 பேர் நேற்று பருத்தித்துறையில் வைத்து விடுவிக்கப்பட்டனர்.

மேலும் பல இளைஞர்கள் இவ்வார இறுதியில் விடுதலை செய்யப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. (உ-10)

## எம்.ஜி.ஆர் சுகவீனமா? நம்ப வேண்டாம் என தமிழக அரசு அறிக்கை

சென்னை, ஜூன் 19

தமிழ்நாடு முதலமைச்சர் எம். ஜி. இராமச்சந்திரன் கடுமையான சுகவீனத்துக்கு ஆளாகி இருக்கின்றார் என்பதை நம்ப வேண்டாம்.

- இப்படி தமிழ்நாடு அரசு அறிக்கை ஒன்றின் மூலம் மக்களைக் கேட்டுள்ளது.

முதலமைச்சர் சில தினங்களாக சிறிது உடல் நலம் குன்றி இருப்பது உண்மை.

கடுமையான சுகவீனத்துக்கு அவர் ஆளாகவில்லை.

அமெரிக்க வைத்திய நிபுணருடன் தொடர்பு கொண்டு அவருக்கு சிகிச்சை அளிக்கப்படுகின்றது.

ஜனாதிபதித் தேர்தல் முடிந்த பின்னர் முதலமைச்சர் இராமச்சந்திரன் அமெரிக்கா சென்று சிகிச்சை பெற்றுக்கொள்வார்.

- இப்படி அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (உ-எ)

ஈழவர் முன்னணி ஏற்பாட்டில்

## சுன்னாகத்தில் நேற்றுப் பேரணி

யாழ்ப்பாணம், ஜூன் 20

★ ஈழப் போராட்டத்தை இந்தியாவும், மற்றைய உலக நாடுகளும் அங்கீகரிக்கவேண்டும்.

★ ஈழப்போராளிகளுக்கு இந்தியா பொருளாதார மற்றும் ஆயுத உதவிகளை வழங்கவேண்டும்.

இந்தக் கோரிக்கைகளை முன்வைத்து நேற்று இணுவிலிலிருந்து சுன்னாகத்திற்கு ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று நடத்தப்பட்டது.

ஈழவர் முன்னணியின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்தப் பேரணியில் பெரும் எண்ணிக்கையானோர் பங்குபற்றினர்.

பேரணி நடைபெற்ற வேளையில் ஹெலி ஒன்று இப்பகுதியில் தாழப் பறந்து நோட்டமிட்டதை அடுத்து பேரணியில் சிறிது பரபரப்பு ஏற்பட்டது. எனினும் பேரணி அசம்பாவிதம் எதுவும் இன்றி நடைபெற்றது.

பேரணி முடிவில் சுன்னாகம் சந்தைப்பகுதியில் பொதுக் கூட்டம் ஒன்றும் நடைபெற்றது.

### தமிழரே நியமனம்?

யாழ்ப்பாணம், ஜூன் 20

இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள வடமராட்சியின் சிவில் நிர்வாக அதிகாரியாக தமிழர் ஒருவரே நியமிக்கப்படுவார் எனத்தெரியவருகிறது.

தமிழ் மாவட்டம் ஒன்றில் மேலதிக அரசாங்க அதிபராகக் கடமையாற்றிய பின்னர் அண்மையில் மற்றொரு தமிழ் மாவட்டத்துக்கு அரசாங்க அதிபராக நியமிக்கப்பட்ட தமிழரே இப்புதிய பதவியில் அமர்த்தப்படுவார்.

இவர் வடமராட்சிப் பகுதியைப் பிறப்பிடமாகக் கொண்டவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (உ)

### மேலும் 142 ஆசிரியர் இடமாற்றம்

பலாலி, ஜூன் 20

வெளிமாவட்டங்களில் இருந்து, யாழ் மாவட்டத்திற்கு மாற்றம் பெற்று வரும் 142 ஆசிரியர்களின் பெயர்கள் யாழ்ப்பாணக் கல்வித் (8 ஆம் பக்கம் பார்க்க)

பயங்கரவாதம் குறித்து பொதுக்கோட்பாடு:

## ஸ்ரீலங்கா -- இந்தியா சார்க்கில் முரண்பாடு

புதுடில்லி, ஜூன் 19

பயங்கரவாதம் குறித்து பிராந்தியக் கோட்பாடு ஒன்றைத் தயாரிக்க சட்டத் துறை நிபுணர் குழுவொன்றை நியமிப்பது என சார்க்கில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

சார்க் அமைப்பின் வெளியுறவு அமைச்சர்களின் இரண்டு நாள் மாநாட்டின் முடிவில் இத்தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

என்னும் இந்தக் கோட்பாட்டை எட்டுவதில் ஸ்ரீலங்காவுக்கும் இந்தியாவிற்கும் இடையில் பெரும் முரண்பாடு காணப்படுகிறது.

பயங்கரவாதச் செயல்கள் எவை என்பது பற்றிய நிபுணத்துவ குழுவின் வியாக்கியானத்தை மாநாடு ஏற்றுக் கொண்டது.

பொதுமக்களைக் (8 ஆம் பக்கம் பார்க்க)

## தெல்லிப்பளையில் ஷெல் தாக்குதல்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 20

மாவிட்டபுரம் அலுமினியத் தொழிற்சாலையில் முகாமிட்டிருக்கும் இராணுவத்தினர் நேற்று தெல்லிப்பளை பகுதியை நோக்கி ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டனர்.

இதனால் இரண்டுபேர் காயமடைந்தனர். சில வீடுகளும் சேதமடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

புதன்கிழமை நள்ளிரவில் இருந்து இந்த ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

காயமடைந்தவர்களில் ஒருவர் கொய்யாத்தோட்டத்தைச் சேர்ந்த என். செல்வரட்ணம் (வயது 27) எனத் தெரியவந்துள்ளது.

இதேவேளை கடந்த சில தினங்களாக காங்கேசன் துறை, பலாலி இராணுவ முகாம்களிலிருந்து தொடர்ந்து "ஷெல்" தாக்குதல்கள் இடம் பெற்று வருகின்றன.

மேலும் இச் சுற்றுடலில் ஹெலிக்கொப்டர்கள் அடிக்கடி வட்டமிட்டு துப்பாக்கிப் பிரயோகம் செய்து வருகின்றன. (உ-10-68)

## வடமராட்சியில் பஸ்சேவை சீராகும்

யாழ்ப்பாணம், ஜூன் 20

வடமராட்சிப் பகுதியில் அரச பஸ்சேவைகளை மீண்டும் போதியளவில் செய்வதற்கு படையினர் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

இதற்கென மேலதிக பஸ்களும் கொழும்பில் இருந்து கொண்டு வரப் படவுள்ளன.

வடமராட்சிப் பகுதியில் இருந்து தூர இடங்களுக்கான பஸ்சேவைகளும் ஆரம்பிக்கப்படவுள்ளன.

போக்குவரத்துச் சேவையினை சீர்படுத்துவது குறித்து இராணுவ உயர்அதிகாரிகள் நேற்று வடபிராந்திய போக்குவரத்துச் சபைத் தலைவரையும் வேறு உயர் அதிகாரிகளையும் அழைத்துப் பேசியது குறிப்பிடத்தக்கது. (உ-10)

## உடன் தீர்வு காண ராஜீவ் வலியுறுத்து

புதுடில்லி, ஜூன் 19

இனப்பிரச்சினைக்கு அவசரமாகத் தீர்வு காணப்படவேண்டும்.

—இப்படி பிரதமர் ராஜீவ் காந்தி வலியுறுத்தியுள்ளார்.

ஸ்ரீலங்கா வெளியுறவு அமைச்சர் சாகுல் ஹமீத்துடன் கடந்த வியாழன் சுமார் அரை மணித்தியாலம் வரை பிரதமர் பேச்சுக்கள் நடத்தியது தெரிந்ததே.

அப்போதே பிரதமர், அமைச்சர் ஹமீதிடம் இப்படி வலியுறுத்தினார்.

நிவாரண உதவிகளை விரைவில் யாழ் அனுப்ப வேண்டியதன் அவசியம், பற்றி பிரதமர் காந்தி அமைச்சர் ஹமீதுவிடம் தெரிவித்தார். (உ-எ)

### அடுத்த சார்க் நேபாளத்தில்

புதுடில்லி, ஜூன் 19

சார்க் அமைப்பு நாடுகள் தலைவர்களின் மூன்றாவது உச்சி மாநாடு எதிர்வரும் நவம்பர் மாதம் 2 ஆம் திகதி தொடக்கம் 4ஆம் திகதி வரை நேபாளத்தின் தலைநகரான காட்மண்டுவில் நடைபெறும். (உ-எ)

## ஸ்ரீலங்காவின் பொறுப்பற்ற போக்கே இன்றைய மோச நிலைமைக்குக் காரணம்

### ராஜீவ் காந்தி சாடல்


ராஜீவ்

புதுடில்லி, ஜூன் 20

ஸ்ரீலங்காவின் பொறுப்பற்ற, விளையாட்டுப் போக்கினால்தான் இரு நாட்டு உறவுகளும் மோசமடைந்துள்ளன.

— இப்படி பிரதமர் ராஜீவ் காந்தி தெரிவித்தார்.

'இன்டியா ருடே' சஞ்சிகைக்கு அளித்த பேட்டியில் பிரதமர் காந்தி இதனைத் தெரிவித்தார்.

பேட்டியில் பிரதமர் காந்தி மேலும் தெரிவித்ததாவது;

தன்னுடைய இராணுவ நடவடிக்கை, வேலை செய்யும் என்று ஸ்ரீலங்கா நினைத்தது.

இராணுவத் தீர்வு காணுவதற்கான காலம் கடத்தும் தந்திரமாக பேச்சுக்கள் நடத்துவதை ஸ்ரீலங்கா பயன்படுத்துகின்றது என்று கூட [illegible] இதுதான் பிரச்சினையை ஏற்படுத்தியது.

சிலவற்றை அவர்கள் ஏற்பார்கள். பின்னர் எண்ணத்தை மாற்றிக் கொள்வர்.

ராஜீவ் காந்தியின் இந்தப் பேட்டி குறித்து ஸ்ரீலங்கா அரசு இந்தியாவிடம் நேற்று உத்தியோகபூர்வமாக ஆட்சேபம் தெரிவித்திருக்கிறது.

மீண்டும் அரைகுறையாக சம்மதிப்பர். பின்னர் மீண்டும் மனதை மாற்றிக்கொண்டு விடுவர்.

இன்று ஏற்பட்டுள்ள பதறறநிலைக்குக் காரணம் ஸ்ரீலங்காவின் இந்த பொறுப்பற்ற, விளையாட்டுப் போக்குத்தான்.

அவர்கள் பக்கத்தில் நிறைய ஊசலாட்டம் இருக்கின்றது.

இராணுவத் தீர்வு பலனளிக்கப்போவது இல்லை என்பதை உணர்ந்து மீண்டும் பேச்சுக்கள் நடத்த ஸ்ரீலங்கா அரசு முன்வரும் என்று நம்பு (8 ஆம் பக்கம் பார்க்க)

## ராஜீவின் கேள்வியும் ஜே. ஆரின் பதிலும்

புதுடில்லி, ஜூன் 19

இந்தியாவில் இருந்து வெளிவரும் 'சண்டே' ஆங்கில வாரஇதழ் பிரதமர் காந்தியையும் ஜனாதிபதி ஜெயவர்த்தனாவையும் பேட்டி கண்டு வெளியிட்டுள்ளது.

பேட்டியில் இடம் பெற்ற சில அம்சங்கள்:

★பிரதமர்ராஜீவ் காந்தி. பெரும் எண்ணிக்கையில் நிராயுதபாணிகளான பொதுமக்களைக் கொல்வதை எப்படி ஸ்ரீலங்கா நியாயப் படுத்தப் போகின்றது?

★ ஜனாதிபதி ஜெயவர்த்தனா: பஞ்சாபில் இந்திய அரசாங்கம் செய்வதைத்தான் யாழ்ப்பாணத்தில் நாம் செய்கின்றோம்.

கருத்துக் கலசம்

## மனநிம்மதி

மன நிம்மதி. அது இல்லையேல் வாழ்க்கையும் நிம்மதி அற்றதாகவே இருக்கும்.

நிம்மதி இல்லையேல் மனச் சஞ்சலம் உருவாகி விடும். மனச் சஞ்சலம் இருப்பின் வாழ்க்கையில் எந்த வகையிலும், வழியிலும் முன்னேற இயலாது.

நினைத்தது கைகூடாத போதும் மன நிம்மதி குறைந்து விடுகிறது. நாளாக நாளாக அது மனக் கவலையை உண்டாக்குகிறது. கவலை மனதை மட்டுமன்றி, உடலையும் நலிவடையச் செய்யும்.

நிம்மதியான வாழ்க்கை ஒருவரின் திருப்தியைப் பொறுத்தது. ஒருவருக்கு திருப்தியைத் தரும் அதே விவகாரம் மற்றவருக்குத் திருப்தியைக் கொடுக்காமல் இருக்கலாம்.

திருப்தி என்பது அவரவர் மனநிலையைப் பொறுத்தது.

அதிக ஆசை உள்ளவர்கள் எவ்வளவு வசதி கிடைத்தாலும் இலகுவில் திருப்திப்படமாட்டார்கள். போதும் என்ற மனம் உள்ளவர்கள் இலகுவில் திருப்தி அடைந்து விடுவார்கள். அவர்களுக்கு மனச் சஞ்சலம் குறைவு. நிம்மதியும் அதிகம்.

எல்லோரும் நிம்மதியுடன் வாழவே விரும்புகிறார்கள்.

ஆனால் இன்றைய சூழ்நிலையில் இப்பிரதேசத்தில் எவருமே நிம்மதியுடன் வாழ்வதாகச் சொல்ல முடியாது. எல்லோரும் மனச் சஞ்சலத்துடன், நிம்மதி அற்றவர்களாகவே காணப்படுகின்றனர்.

சாதாரண காலத்தில் நிம்மதி அற்ற வாழ்க்கைக்கு ஒவ்வொருவருக்கும் வெவ்வேறு காரண, காரியங்கள் அடிப்படையாக இருக்கும். ஆனால் இப்போது தமிழ் மக்களின் வாழ்க்கை நிம்மதியற்றுப் போனதற்குக் காரணம் பொதுவானது. அரசியல் சூழ்நிலையால் ஏற்பட்டது. இப்போதுள்ள நிம்மதியின்மை பெரும் எண்ணிக்கையான தமிழர்களின் வாழ்க்கையையே வேரறுத்துவிட்டது. அதிலிருந்து தப்புவதும் பெரும் கஷ்டமான காரியமாகிவிட்டது.

மன நிம்மதியின்மைக்குப் பல காரணிகள் இருப்பதுண்டு. ஆனால் இப்போதைய பொதுவான மன நிம்மதியின்மைக்குப் பதற்றமே முக்கிய காரணம் ஆகும்.

மனப் பதற்றத்தை நீக்கி மன உறுதியைத் தர வல்லது பிரார்த்தனை. குறிப்பாக குழந்தைகள் நெஞ்சில் பீதி ஏற்படாமல் பாதுகாக்கப் பிரார்த்தனை மிக நல்ல மார்க்கமாகும்.

மனப் பதற்றமும், பீதியும் ஏற்படும் வேளைகளில் வீடுகளிலேயே பிரார்த்தனை செய்வது மன நிம்மதியைத் தரும்.

### சுபநேரம்

20-06-1987
சனிக்கிழமை
சுபநேரம்:-
2.54 முதல் 4.24 வரை
ராகுகாலம்:-
8.54 முதல் 10.24 வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்
நவமி முற்பகல் 8.19வரை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

புதுமையும் எழிலும் ...

சின்னஞ் சிறு விளம்பரம்

**சேவை**

சேலைகள் அச்சிடுதல்-தையல்வேலைகள் புதிய பழைய கிளைஸ்தாபனங்கள் விளம்பரப்படுத்தும் அறிவித்தல்களை, எழுதவும், பழைய சேலைகளுக்கு புதுப்பொலிவுடன் தேவையான டிசைன்களில் அச்சிடுவதற்கும் நவீன தையல் வேலைகளைச் செய்யவும், சோயில் திரைச் சீலை-விளம்பரச் சீலைகளை தேவையான விதத்தில் எழுதவும் பாதுகாப்பான சூழலில் அமைந்த இடம்.

வசந்தா ரெக்ஸ்ரைல்ஸ்
42, கல்லூரி வீதி,
யாழ்ப்பாணம்.
(1434)


# எமது உயிரைக் காப்பாற்றவே தமிழகம் வந்தோம்

# தீர்வு வந்ததும் நாம் திரும்பிப் போய் விடுவோம்

## குடாநாட்டிலிருந்து அகதிகளாகச் சென்றவர்கள் நிலைப்பாடு இது

**யாழ்** நகரில் பிள்ளைகளை வெட்டுறது. சுடுறது. பெரிய பையன்களைக் கண்டால் விட மாட்டான்கள். பிள்ளைகளின் உயிரைக் காப்பாற்றுவதற்காக ஓடி வந்தோம்.

உங்களுக்கு எத்தனை குழந்தைகள்?

மூன்று குழந்தைகள். மூன்று பிள்ளைகளையும் கூட்டி வந்தோம். வீட்டுக்காரரர் வீட்டுச் சாமான்களைப் பாதுகாப்பான இடத்தில் வைத்து விட்டு பின்னாலை வாறன் எண்டவர். எங்கள் படகு திசைமாறி இராமநாதபுரம் கரைக்கு சனிக்கிழமை 11 மணிபோல வந்து சேர்ந்தது. அங்கை எங்களுக்குப் பசி. குழந்தைகள் எல்லாம் அழுதது. ஒரு குடும்பம் சாப்பாடெல்லாம் தந்தது. பிறகு படகுக்கு டீசல் இல்லை. செட்டி போய் வாங்கி வந்து பிறகு இராமேஸ்வரத்தில் சேர்ப்பதென்று சொன்னார்.

அப்போது பிறகும் இராமேஸ்வரம் போக முடியாமல் போயிற்று. ஏனென்டால் அலை ஓடுவது சரியில்லை எண்டு பிறகு மண்டபம் கரையில் கொண்டு வந்து விட்டுது. கரைக்குக் கிட்ட வர ஏலாமல் போக இன்னொரு மீனவப் படகு வந்து எங்கள் படகைக் கட்டி இழுத்து வந்து கரையில் சேர்த்தது. உங்கடை நேவிக்காரர் எங்களை ஆதரித்து சாப்பாடெல்லாம் தந்து அடுத்தநாள் இலவசப்படகு மூலம் இராமேஸ்வரம் கூட்டிப் போய்சாப்பாடெல்லாம் தந்து இரவு சத்திரத்திலை தங்கவைச்சினம்.

கே: இங்கு என்ன செய்வதாக உத்தேசம்?

ஒண்டுமில்லை. உயிர்களைக் காப்பாற்றத் தான் வந்தோம். பிரச்சினை தீர்ந்தால் இலங்கைக்குப் போவோம்.

**ஆனைக்கோட்டை வாசி**

யாழ்ப்பாணத்திலுள்ள ஆனைக்கோட்டை ஆறுகால்மடத்திலிருந்து சென்ற கந்தசாமி மனோகரன் தன் கதையைச் சொல்கிறார்.

நிலைமை மோசமாக இருப்பதால் தான் நாம் இங்கு வந்தோம்.

கே: இந்தியாவிலிருந்து வந்து பொருள் எல்லாம் போட்டாங்களே. உங்களுக்குத் தெரியுமா?

தெரியும். நாங்களும் எடுத்தனுங்கள். பாலும் சர்க்கரையும் எடுத்தனுங்கள்.

கே: அந்தப் பொருளை எடுத்து மற்ற நண்பர்களுக்கும் கொடுத்தாங்களா? அல்லது ஒரு சில குடும்பங்கள் தான் எடுத்தாங்களா?

ஒருவர் எடுத்து சொந்தக்காரருக்குக் கொஞ்சம் கொஞ்சமாகக் கொடுத்தது.

கே: பொருளைக் கொண்டு வந்தபோது விமானம் வந்ததை நீங்கள் பார்த்தீங்களா?

விமானம் வரும்போது பார்த்தனுங்கள். நாங்கள் எல்லாம் பயத்திலை பதுங்கு குழிக்குள்ளை இருந்து வெளியேறினனுங்கள். பிறகு கொஞ்சத்தாலை இந்தியா சாப்பாடு கொண்டு வந்ததென அறிந்து எல்லோரும் வெளியில் நிண்டனுங்கள்.

கே:அந்தச் செய்தி யார் சொன்னது?செய்தி உடனே தெரிஞ்சிட்டுது. ஆட்கள் எல்லாம் சொன்னனுங்கள். அப்பா அம்மா ஆறுகால் மடத்தில் இருக்கினம். நான் படம் எடுக்கும் தொழில் செய்வதால் கமிராவைமட்டும் இங்கு கொண்டு வந்து விட்டேன். எங்களைத் தான் பிடிப்பார்கள் என்று பயந்துதான் வந்து விட்டேன்.

**அச்சுவேலி வாசி**

அச்சுவேலியைச் சேர்ந்த தயாளினி பின்வருமாறு சொன்னார்.

பதின்மூன்றும் திகதி போட்டியிலை இரவிலை தான் அம்மாவும் நானும் தமிழகம் வந்தனுங்கள். அங்கே இருக்கேலாது. பொம்மர் தாக்குதல், ஆமியின்ரை கொடுமை, வீடுகள் புகுந்து வெட்டுகின்றுங்கள். அதனால் தான் நாம் வந்தோம்.

பெண்களைப்பொறுத்த மட்டில் அங்கு என்ன செய்யிறுங்கள்?

சொத்துகள் பறிபோகிறது. தாய்க்கு முன்னால் வைத்து பிள்ளையை வெட்டுறுங்கள். அதாலை தான் வந்தனுங்கள்.

திரு. நரேந்திரன் இப்படிச் சொன்னார். பதின்னன்காம் திகதி காலையிலை வந்தோம். மீன்பிடி வள்ளமொன்றிலை தான் வந்தோம். நாற்பது ஐம்பது அகதிகள் காசு கொடுத்து இங்கே வந்தோம். ஒவ்வொருவரும் ஆயிரத்து இருநூறு ரூபாய் வரை வள்ளச் சொந்தக்காரனுக்குக் கொடுத்தோம். அங்கிருந்து 12 மணித்தியாலத்தில் வந்தோம்.

கே: இந்தியா பொட்டலம் போட்டது தெரியுமா?

ஆமாம்.அந்த அரசாங்கம் தமிழ் மக்களைப் பொறுத்தளவில் மோட்டரசாங்கம். நாங்கள் எல்லோரும் முதலில் குண்டு வீச்சு விமானம் எண்டிருந்தோம். பின் உணவுப் பொருள் வீசியதும் சந்தோஷப்பட்டோம்.

கே: அங்கெல்லாம் என்னென்ன பாப்பீங்கள்?

காலையிலை எழுவதற்கு முதல் இரவில் நித்திரை வந்தால்தானே! எப்போதும் நாம் முழிச்சுத்தான் இருக்கிறது. ஹெலியிருந்து சுடுவது பொம்மர் குண்டு போடுவது. இதெல்லாம் இப்போ பழகிப் போச்சு. உணவுக் கஷ்டத்திற்காக கடைகளைத் திறந்து வைத்து உணவுகொடுக்கிறுங்கள். ஆனால் கொழும்பிலிருந்து ரான்ஸ்போட் எப்ப வரும் என்று காத்துக்கிட்டிருக்கிறுங்கள். பெடியங்களைக் கண்டால் பிடிச்சுக் கொண்டு போறுங்கள். அல்லது அதிலேயே சுட்டுவிடுகிறுங்கள்.

**அனுரா பேச்சு**

பிடிச்சிட்டுப் போனால் 10 வருஷம் பூசாவில் வைத்திருப்பாங்கள். விட்டால் விடுதலைப்புலிகளுடன் சேர்ந்து தாக்குவார்களென உள்ளுக்குள் வைத்திருப்பாங்கள். அதே நேரத்தில் அங்கே உள்ள எதிர்க்கட்சித் தலைவர் சொல்லியிருக்கிறார் பிடிக்கிற பெடியங்களை அங்கேயே சுட்டுக்கொல்ல வேண்டுமாம். அதனாலை எங்கள் அப்பா அம்மாவெல்லாம் பயந்திட்டாங்கள். அதாலை தான் எங்களை இங்கு அனுப்புறுங்கள். அவர்கள் வயதுபோனவர்கள், சிறிது சமாளிக்கலாம். இப்பவும் இந்தியாவைத் தான் முழுமையாக நம்பிக்கொண்டிருக்கிறுங்கள். பொட்டலம் போட்டதிலிருந்து அவங்கள் நம்பிக்கை மேலும்

> வடமராட்சித் தாக்குதலின் பின்னர் யாழ்ப்பாணக் குடாநாட்டில் இருந்து அகதிகளாகத் தமிழகம் சென்றவர்கள் சிலர் அங்கு வைத்து அளித்த பேட்டிகள் இங்கு தரப்படுகின்றன.
>
> திருச்சி வானொலி ஒலிபரப்பிய இப்பேட்டிகளைக் கேட்டு எழுதியவர்:
>
> **சித்ரா**

மேலும் வளர்ச்சியடைந்திருக்கிறது.

**மாணவி**

யாழ்ப்பாணத்திலுள்ள ஆனைக்கோட்டையைச் சேர்ந்த மாலினி தெரிவிக்கிறார்:-

கே:- நீங்கள் படிச்சிட்டிருக்கிறீர்களா?

அங்கு படிப்பு நடக்கவில்லை. படிப்பு நடக்கவிடுகிறுங்களில்லை. பிள்ளைகளின் கையைக்காலை வெட்டுறுங்கள். வருங்காலப்புலி எண்டு சொல்லி கையெல்லாம் வெட்டுறுங்கள். ஒண்டில் புலி எண்டு பிடிப்பாங்கள். இல்லாவிட்டால் பிள்ளைகள் படித்தால் தனிநாடு கேட்பாங்கள் எண்டு வெட்டுறுங்கள். எப்படியும் வருங்காலத்துப் புலி எண்டு துன்புறுத்துறுங்கள். குமர்ப்பிள்ளையளும் வைத்திருக்கேலாது. இருநூறு குமர்ப்பிள்ளையளைக் கொண்டுபோய் வைத்திருக்கிறுங்கள். அங்கே பிள்ளையளைக் கோயிலுக்குப் போயிருங்கோ என்று சொல்லி பின் பெம்பிளைகளைக் கூட்டிக்கொண்டு பூசாவுக்குப் போறுங்கள்.

பெம்பிளையள் புலியெண்டு சொல்லிக் கொண்டுபோறுங்கள். இந்தியா வந்து பொட்டலங்கள் போட்டபின் ஆகக் கொதிக்கிறுங்கள். அதன்பின் தான் 200 பெம்பிளையளைக்கொண்டு போனவங்கள். அச்சுவேலியில் ஒரு கர்ப்பிணிப்பெண்ணை வயிற்றுக்குள் இருப்பது வருங்காலத்துப்புலி எண்டு வயிற்றிலை வெட்டிவிட்டாங்கள். தாயுமில்லை; பிள்ளையுமில்லை.

**குரும்பசிட்டிவாசி**

திரு. கே, சிவசுந்தரமூர்த்தி குரும்பசிட்டியைச் சேர்ந்தவர். தன் அனுபவத்தைப் பின்வருமாறு சொன்னார்:

நாம் 13 ஆந்திகதி வேலணையிலிருந்து வள்ளத்தில் வந்தோம். நிலைமை மோசமாக இருக்கிறது. துன்புறுத்திக்கொண்டுதானிருக்கிறார்கள். ஆமி மூவ்பண்ணிக்கொண்டு வரயுக்கை மிகவும் பயங்கரமாக இருக்கிறது.

எங்கள் பகுதி முழுவதும் காம்ப் பண்ணியிருக்கிறுங்கள். பலாலி பெரிய காம்ப்; யாழ்ப்பாணத்தைப் பொறுத்த மட்டில் பலாலி பெரிய காம்ப். அதன் சுற்றுடலிலுள்ள பகுதிகளை ஆக்கிரமித்துக் கொண்டு வருகினம். பக்கத்திலுள்ள கிராமம்தான் எங்கள் குரும்பசிட்டிக் கிராமம். இக்கிராமத்தில் கிட்டத்தட்ட 2000 குடும்பங்கள் இருந்தன. இன்று இவர்கள் வெளியேறி விட்டார்கள். முல்லைத்திவு, வவுனியா போன்ற இடங்களுக்கு இடம் பெயர்ந்து விட்டார்கள்.

**கோப்பாய் வாசி**

கோப்பாய் செல்வி எஸ். குமாரசிங்கம் தன் கதையைச் சொல்கிறார். (பரதநாட்டியம் 2 ஆம் ஆண்டு படித்த மாணவி)

கே:-அங்கு நிலைமை எப்படியிருக்கு? நிலைமை மோசமாகத்தான் இருக்கிறது. இந்தியாவில் இப்போதைக்கு இருப்பதுதான் உத்தேசம். இப்ப அங்கே போக ஏலாதுதானே!

பெண்கள் நிலைமை எப்படி இருக்கிறது? மிக மோசம். வடமராட்சியில் ஆமி செய்ததைப் பார்த்துத்தான் நாங்கள் வெளிக்கிட்டனுங்கள். கண்டபாட்டுக்கு பிடிச்சுக்கொண்டு போறது; சித்திரவதை செய்வது மிக மோசமாகப் பெண்களை நடத்துவது.

**திருகோணமலை வாசி**

கோணமலை சந்திரசேகரம் திருகோணமலையைச் சேர்ந்தவர் சொல்கிறார்.

திருகோணமலையிலிருந்து அகதியாக யாழ் வந்து ஒன்றரை வருஷம் ஆகுது. அங்கு இருக்கும் போது எட்டாவது மாதம் எங்கள் அப்பா அம்மாவை மில்ட்டரி சுட்டு செத்துப் போனுங்கள். பிறகு அப்படியே யாழ்ப்பாணத்திலிருந்து வர்த்தகத்தில் ஈடுபட்டேன். உறவினர் நண்பர்களின் தூண்டுதலில் இப்போது வள்ளமேறி வந்த சனத்துடன் வந்துவிட்டேன்.

**வல்வெட்டித்துறை வாசி**

வடபகுதியில் அதிகம் பாதிக்கப்பட்ட வல்வெட்டித்துறை செல்வகுமார் சொல்கிறார்.

எங்கள் வீடு காம்புக்குப் பக்கத்தில் அம்மன் கோவிலடியிலிருந்தது. இப்போதைய பிரச்சினைக்கு முன்னர் எனது பெருமகன், அதாவது எனது மனைவியின் தமக்கையின் மகன் வயது ஏழுதானிருக்கும், தலையில் ஷெல் விழுந்து தலை சிதறிப் போய்ச் செத்தான். என் மனைவியின் தமக்கையின் புருஷனின் வீட்டுக்குள் ஆமிக்காரன் புகுந்து அவரைச் சுட்டு அவரது பொடியையும் (உடல்) கொண்டு போனான். எங்களிடம் பொடியைக் கூடத் தரவில்லை. அதன்பின் நடந்ததென்னவென்று அறிய முடியவில்லை.

பின்னர் அவரது உடல் வீடொன்றுக்குள் போடப்பட்டதாகவும் அவரது உடல் நாறிக் கிடப்பதாகவும் அதனை நாய் தின்றதாகவும் சிலர் சொன்னார்கள். அவர் உடலை அங்கு சென்று எடுக்க ஆமிப் பயத்தால் எடுக்காது விட்டுவிட்டோம். ★

★ சிரியுங்கள் ★



மனைவி: கல்யாணத்துக்கு முன்னால் என்னை ஓர் அழகிய தேவதை என்று கூறுவீர்களே?

கணவன்: ஆமாம்.

மனைவி: இப்பொழுது ஏன் அப்படிக் கூறுவதில்லை?

கணவன்: நான் இப்பொழுது பொய் சொல்வதை நிறுத்தி விட்டேன்

★ ★ ★

ஒரு மாடு:- என்ன இருந்தாலும் இந்த அரசுக்கு எங்களில் கொஞ்சம் இரத்த பாசம் இருக்கு.

மற்றமாடு:- எப்படிச் சொல்கிறாய்?

ஒரு மாடு:- பொதுசன ஆஸ்பத்திரியை மூடச் சொன்னவை எங்கடை மிருக வைத்தியசாலையை மூடச் சொல்லவில்லைத் தானே.

-துரை

★ சோதனை மேல் சோதனை போதுமடா சாமி! ★

# ராஜீவைத் தலைகுனிய வைத்த ஹரியானா தந்த தோல்வி!

**இ**ந்திரா காங்கிரஸின் சோதனைக் களமாகக் கருதப்பட்டு வந்த ஹரியானா மாநிலத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற தேர்தலில் இந்திரா காங்கிரஸ் படுதோல்வி அடைந்து விட்டது.

லோக்தள் (மக்கள் கட்சி) — பாரதிய ஜனதாக் கூட்டணி அமோக வெற்றியீட்டி இருக்கிறது.

1984 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் 55 சதவீத வாக்குகள் பெற்று இந்திரா காங்கிரஸ் ஹரியானாவில் ஆட்சியைக் கைப்பற்றி இருந்தது.

அதன் பின்பு இந்திரா காங்கிரஸின் செல்வாக்கு ஹரியானாவில் படிப்படியாகக்குறைந்து வந்ததை பொதுசன அபிப்பிராயக் கணிப்புகள் வெளிக்காட்டி இருந்தன.

**மக்களோடு மக்களாய்**

கடந்த சில வாரங்களாக ஹரியானாவில் நடந்த தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் லோக்தள் தலைவர் தேவிலால் பொதுமக்களோடு பொதுமக்களாய் கலந்துரையாடியதும்—

பிரதமர் ராஜீவ்காந்தி குண்டு துளைக்க முடியாத மேல் அங்கியுடன் பொதுமக்களில் இருந்து 50 மீற்றர் தொலைவில் இருக்க ஏற்பாடானதும் தேவிலாலுக்குச் சாதகமான ஒரு சூழ்நிலை தானாகவே உருவாகி வருவதை உணர்த்தி இருந்தன.

என்றாலும் இந்திரா காங்கிரஸுக்கு இவ்வளவு பெரும்தோல்வி ஏற்படும் என்று எவரும் எதிர்பார்க்கவில்லை.

ஹரியானாத் தோல்வி பிரதமர் ராஜீவ் காந்திக்கு பெரும் தலைகுனிவை ஏற்படுத்தி விட்டது.

இந்தத் தோல்வி ராஜீவின் தலைமையை நிச்சயம் தகர்க்க மாட்டாது. ஆனால் ராஜீவைத் தட்டிக் கேட்கும் நிலையை இந்திரா காங்கிரஸுக்குள் இது உருவாக்கி விட்டது.

**தெற்கில் இறுதிப் பிடியும் தளர்வு**

தமது தாயாரான திருமதி இந்திராகாந்தியின் படுகொலையை அடுத்து 1984 ஆம் ஆண்டு நடந்த பொதுத்தேர்தலில் ராஜீவ் தலைமையில் இந்திரா காங்கிரஸ் பெரும் வெற்றியீட்டி இருந்தது.

இந்திராபடுகொலையை அடுத்து மோதிய அனுதாப அலையும் இந்திரா காங்கிரஸின் பெரும் வெற்றிக்கு அப்போது வாய்ப்பாக அமைந்திருந்தது.

ஆனால் அதன் பின்னர் நடைபெற்ற தேர்தல்களில் அடுத்தடுத்து இந்திரா காங்கிரஸ் தோல்விகளையே கண்டு வந்தது.

கடைசியாக கடந்த மார்ச்மாதம், நடைபெற்ற சட்டசபைத் தேர்தல்களில், கேரளாவில் ஏற்பட்ட தோல்வி மூலம் தென் மாநிலத்தில் இருந்த தனது கடைசிப் பிடியையும் இந்திரா காங்கிரஸ் கோட்டை விட்டது.

கொந்தளிக்கும் பஞ்சாப்பையும் புதுடில்லியையும் எல்லையாகக் கொண்டது ஹரியானா.

இந்தியா சுதந்திரம் அடைந்தநாளில் இருந்து காங்கிரஸின் பாரம்பரிய செல்வாக்குள்ள மாநிலமாக இது கருதப்பட்டு வந்தது. 1984 பொதுத் தேர்தலின் பின்பு ஏழு மாநிலங்களில் தோல்வி கண்ட ஹிந்தி [illegible] பேசும் இந்த வட இந்திய மாநிலத்தில் இந்திரா காங்கிரஸ் வெற்றி பெறுவது மிக அவசியமாகக் கருதப்பட்டது. ஆனால் முழு அளவில் முயன்றும் படுதோல்வியே ஏற்பட்டிருக்கிறது.

**பஞ்சாப் பிரச்சினை மேலும் சிக்கல்**

தற்போது இந்திரா காங்கிரஸுக்கு இங்கு ஏற்பட்டுள்ள தோல்வி பஞ்சாப் பிரச்சினையை மேலும் சிக்கலாக்கிவிட்டிருக்கிறது.

1985 ஆம் ஆண்டு மிதவாத சீக்கியத் தலைவர் லோங்கோவாலுக்கும் ராஜீவ்காந்திக்கும் இடையில் செய்துகொள்ளப்பட்ட, பஞ்சாப் உடன்படிக்கையை கடுமையாக எதிர்ப்பவர் லோக்தள் தலைவர் தேவிலால் (வயது 73)

தேர்தல் பிரசாரங்களின்போது ராஜீவுக்கு எதிரான கண்டனக்கணைகளில் பஞ்சாப் ஒப்பந்தமும் ஒன்றாகும்.

சுவீடிஸ் பீரங்கிக் கொள்வனவு தொடர்பான ஊழல், பஞ்சாப் தீவிரவாதிகளால் இந்துக்கள் படுகொலை செய்யப்படுவதை தடுத்து நிறுத்தத் தவறியது ஆகியவை முன்னாள் முதலமைச்சரான தேவிலாலால் வெளிப்படுத்தப் பட்டமற்றும் சில கண்டனங்கள் ஆகும்.

பஞ்சாப்புக்கும் ஹரி[illegible] வான தலைநகராக [illegible] பஞ்சாப் ஒப்பந்தத்தின் பிரகாரமும் பஞ்சாபிடம் முழுமையாகக் கையளிக்கப்படவேண்டும்.

சண்டிகார் பஞ்சாபிடம் கைமாறுவதை பெரும்பான்மையான ஹரியானா மக்கள் ஆதரிக்கவில்லை.

ஒப்பந்தத்தை அமுல் செய்ய முடியாத நிலையில் பஞ்சாப்பில் ராஷ்டிரபதி ஆட்சியைப் பிரகடனப்படுத்தி இந்த ஒப்பந்தத்தை ராஜீவ் காந்தி செயல் இழக்க வைத்த போதிலும் பெரும்பாலான ஹரியானா மக்கள் இந்திரா காங்கிரஸில் அவநம்பிக்கை வைக்க இந்த ஒப்பந்தமும் ஒரு காரணம் ஆகும்.

**விவசாயக் கடன்**

தாம் பதவிக்கு வந்தால் விவசாயிகள் அரசுக்குத் திருப்பிச் செலுத்தவேண்டிய 150 கோடி ரூபாவை (இந்திய ரூபா) தாம் அவர்களிடம் இருந்து அறவிடப் போவதில்லை என்ற தேர்தல் வாக்குறுதி ஒன்றையும் தேவிலால் வழங்கி இருந்தார்.

பெரும்பான்மையினரான விவசாயிகளின் ஆதரவைப் பெற இதுவும் ஒரு காரணம்.

மொத்தத்தில் ஹரியானாத் தோல்வி இந்திரா காங்கிரஸுக்கு பெரும் தாக்கத்தையே ஏற்படுத்தி இருக்கிறது.

'மிஸ்டர் கிளீன்'' என்று அழைக்கப்படும் ராஜீவ் காந்திக்கு ஏற்பட்டுவரும் தலையிடிகளை இது மேலும் அதிகரித்துள்ளது.

மக்களின் அபிமானத்தைப் பெறும் விதத்தில் அடுத்த இருஆண்டுகளில் இந்திரா காங்கிரஸ் [illegible] புரியாவிடில் 1989 பொதுத் [illegible] தோல்வியையே எதிர்நோக்க வேண்டிவரும். ★

**உலக உலா**

என்.பி.சீலன்

# விளையாட்டு உலகிலும் கறுப்பினப் பிரச்சினை

**ஆ**சிய கிரிக்கெட் சங்க மாநாடு அண்மையில் இந்தியத் தலைநகரான புதுடில்லியில் நடைபெற்றது.

இந்த மாநாட்டில் ஆசியாவில் கிரிக்கெட் ஆடும் நாடுகளான இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, பங்களாதேஷ் ஆகியன கலந்து கொண்டன. இதில் பரபரப்பாக ஆராயப்பட்ட விடயம் தென்னாபிரிக்காவுடன் விளையாட்டுத் தொடர்புகள் கொண்ட கிரிக்கெட் வீரர் சம்பந்தப்பட்டது.

தென்னாபிரிக்காவுடன் விளையாட்டுத் தொடர்பு கொண்ட வீரர்கள் இந்தியாவிலும், பாகிஸ்தானிலும் நடைபெறவுள்ள உலக கிண்ணப் போட்டிகளில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள் என்று இந்தியா அறிவித்தது வாசகர்கள் அறிந்ததே.

யூன் மாதம் 26 ஆம் திகதி லண்டனில் நடைபெறவுள்ள உலக கிரிக்கெட் சங்க மாநாட்டில் இந்தியாவின் அறிவிப்புக்கு ஆதரவான பிரேரணை கொண்டு வர மேற்கிந்தியாவும் சிம்பாப்வேயும் இப்போதே முன்னறிவித்தல் கொடுத்துள்ளன.

ஆசிய கிரிக்கெட் மாநாட்டில் இந்த விவகாரம் ஆரம்பமான போது தென்னாபிரிக்காவில் கிரிக்கெட் ஆடியவர்கள் டெஸ்ட் கிரிக்கெட்டில் இருந்தே நீக்கப்பட வேண்டும் என்பதை அமோகமாக வலியுறுத்தியவர் இலங்கை அமைச்சர் காமினி திஸநாயக்கா. மாநாட்டுக்கு இலங்கையின் பிரதிநிதியாக அனுப்பப்பட்டவர் இவர்.

இவர் மேற்கிந்தியாவில் பிரேரணையை ஆமோதித்ததன் காரணம் இன ஒதுக்கல் நாடுகளின் வரிசையில் இலங்கையையும் உலக கிண்ணப் போட்டிகளில் இருந்து ஒதுக்குவதற்கு வேறு நாடுகள் முயலுவதற்கு முன்னர் தான் முந்திவிட வேண்டும் என்று எண்ணினாரோ என்னவோ தெரியவில்லை.

மாநாட்டு இறுதியில் நான்கு நாடுகளும் சேர்ந்து உலக கிரிக்கெட் சங்க மாநாட்டின்போது மேற்கிந்தியாவின் பிரேரணைக்கு ஒருமுகமாக ஆதரவு வழங்குவது என்று தீர்மானித்துள்ளன.

இங்கிலாந்து, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகள் ஏற்கனவே இந்த முடிவுக்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளன. இந்த முடிவுகள் தொடருமாயின் கிரிக்கெட் ஆடும் வெள்ளைத்தோல் நாடுகள் ஓரணியிலும், கறுப்புத்தோல் நாடுகள் இன்னோர் அணியிலும் பிளவுபடலாம்.

இந்தப் போட்டிகளுக்கான மொத்தப் பரிசுப் பணம் 41,000 டொலர்களாகும். வெற்றிபெறும் கோஷ்டிக்கு 20,000 டொலர்களும், இரண்டாவது இடத்தைப் பெறும் கோஷ்டிக்கு 10,000 டொலர்களும் வழங்கப்படும். மிகுதி 11,000 டொலர் இறுதி ஆட்டத்தின் நாயகருக்கும், தொடரின் நாயகருக்கும் பகிர்ந்தளிக்கப்படும். ★

- ஈசன் -

**புதிய திருப்பம்**

தொழில் ரீதியாக விளையாடும் டென்னிஸ் வீரர்கள் 1988 ஒலிம்பிக்கில் விளையாடும் வாய்ப்பு உருவாகியுள்ளது.

இதுவரை காலமும் தொழில்ரீதி வீரர்கள் ஒலிம்பிக்கில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படாமல் இருந்துவந்தனர்.

முதன்முறையாக 1988இல் அவர்களும் விளையாடலாம்.

**பாயும் பெண் புலி**

'பாயும் பெண் புலி' என்று பெயர் பெற்றவர் பிரபல இந்திய ஓட்டப்பந்தய வீராங்கனையான பி. ரி. உஷா.

ஓட்டப்பந்தயத்தில் பயிற்சி பெறுவதற்காக இவர் லண்டன் சென்றிருக்கிறார். நான்கு மாதப் பயிற்சிக்கான செலவுகளை இந்திய அரசே பொறுப்பேற்றுள்ளது.

உஷா அடுத்த மாதம் சிங்கப்பூரில் நடைபெறவுள்ள ஆசிய சம்பியன் போட்டியிலும் பங்குபற்ற இருக்கின்றார். ★

**விளையாட்டுத் துறை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அண்மைக்கால இராணுவ நடவடிக்கைகளும் தமிழ் மக்களின் கல்விப் பாதிப்புக்களும்

1956 ஆம் ஆண்டு களைத் தொடர்ந்து இலங்கையில் ஏற்பட்ட இனக் கலவரங்கள் தமிழ்ப் பேசும் மக்களைப் படிப் படியாக விரக்தி நிலைக்குக் கொண்டு வந்தன.

1971ஆம் ஆண்டு இலங்கையில் ஏற்பட்ட கிளர்ச்சியின் பின்பு இலங்கையின் பொதுப் பொருளாதாரப் பிரச்சினையினின்றும் இளைஞர்களையும் மக்களையும் திசைதிருப்ப அக்காலத்து அரசு முனைந்தது. வாழ்க்கைச் செலவு உயர்வு, வேலையின்மை, குறைநிலை வேலையின்மை போன்ற பிரச்சினைகள் மக்கள் மத்தியில் குறிப்பாக இளைஞர் மத்தியில் பூதாகாரமாகத் தெரிந்தது.

இவற்றை நீக்க அரசியல் புரட்சியொன்று தவிர்க்கமுடியாததென்ற உணர்வால் தென்பகுதி இளைஞர்கள் ஆயுதம் ஏந்த முயன்றனர்.

ஆயுதப் போராட்டம் ஒருவாறு அடக்கப்பட்டது. ஆயினும் ஆயுதப் போராட்டம் ஏற்பட்டமைக்கான காரணத்தினை அரசு ஆராய்ந்தது மறைமுக முதலாளித்துவ அமைப்பினுள் அப்பிரச்சினைகள் உடனடியாகத் தீர்க்க முடியாததாகின.

உடனடியாக மக்களைத் திசை திருப்பவேண்டிய அவசியம் அரசுக்கு ஏற்பட்டது.

ஆயுதப் போராட்டம் ''பயங்கர வாத''மென அரசினால் வர்ணிக்கப்பட்டதுடன் அதனை அடக்கும் முயற்சி துரிதமாகியது. கரையோரப்பகுதிகளில் பல இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டன. கரையோரப் பகுதிகளில் அமைந்திருந்த பல பாடசாலைகள் முகாமினால், இயங்க முடியாது போயின. பல பாடசாலைகள் இடம் மாறின. இன்னும் சில பாடசாலைகள் இராணுவ முகாம்களாகின.

யாழ்ப்பாணப் பகுதிகளில் பிரபல்யமான பாடசாலைகள் இம் முகாம்களினால் ஆரம்பத்தில் ஓரளவு பாதிக்கப்பட்டன.

## நூலக எரிப்பு

இராணுவ நடவடிக்கைகளால் யாழ் பொது நூலகம் திட்டமிட்டு எரிக்கப்பட்டது போன்று பிரபல பாடசாலைகளின் நூலகங்கள் பல எரிக்கப்பட்டன.

பாடசாலைகள் மீது தாக்குதல்கள், மாணவர் கைது செய்யப்படுதல், மாணவர் படுகொலைகள் என்பன இராணுவ முகாமுக்கு அண்மையில் இயங்கிய பாடசாலைகளைச் செயல் இழக்கச் செய்தன.

தமிழ் மாணவர்களின் கல்வியினைக் கருவறுக்கும் செயல்களாக இவை உணரப்பட்டவை.

பாடசாலைகளில் பல அகதி முகாம்களாகவும் இராணுவ முகாம்களாகவும் மாற்றப்பட்டதோடு அரசாங்கத்தின் முகாம்களையும் கடற்கரைகளையும் அண்டிய 1000மீற்றர் பாதுகாப்பு வலயச் சட்டத்தினால் பல பாடசாலைகள் இடம்பெயர வேண்டிய நிலை ஏற்பட்டது. பருத்தித்துறையில் உள்ள பிரபல பாடசாலைகளான வடமாகாணம் ஹாட்லிக் கல்லூரி, மெதடிஸ் பெண்கள் கல்லூரி உட்பட பல பாடசாலைகள் செயலாற்ற முடியாது இடம் மாற்றப்பட்டன.

பலாலி முகாம் விஸ்தரிப்பினால் தமிழ்ப்பகுதியின் பிரதான ஆசிரிய பயிற்சிக் கல்லூரி மூடப்பட்டது. பலாலி அரசினர் தமிழ்க் கலவன் (சாதனா) பாடசாலை, வயாவிளான் ஸ்ரீ வேற்பிள்ளை வித்தியாலயம், மயிலிட்டி ஞானோதய வித்தியாலயம், மயிலிட்டி அரசினர் த. க. பாடசாலை, குரும்பசிட்டி பொன் பரமானந்தா என்பன முற்றாக மூடப்பட்டன.

பலாலி சித்திவிநாயகர் வித்தியாலயம், மயிலிட்டி கலைமகள் மகாவித்தியாலயம், ஊறணி கனிஷ்ட வித்தியாலயம், காங்கேசன்துறை றோ.க. பாடசாலை காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரி, காங்கேசன்துறை மகா வித்தியாலயம் என்பனவும் அண்மையில் உருவான சட்டுவன் முகாமினால் மூடப்பட்டன.

யாழ் மத்தியகல்லூரி வேம்படி மகளிர்கல்லூரி, என்பனவற்றில் தொடர்ச்சியான தாக்குதல்களால் உயிர் உடைமைச் சேதங்கள் ஏற்பட்டன. இதனால் மாணவர் வரவு முழுதாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

> ✱ பாடசாலையை விட்டு வெளியேறும் மாணவர் எண்ணிக்கை அதிகம்.
> ✱ பாடசாலை நூலக அழிப்பால் எதிர்காலக் கல்வியின் அத்திவாரம் ஆட்டம் கண்டுள்ளது.
> ✱ ஆசிரியர் மாணவர் அச்ச உணர்வு கல்வியைப் பாதித்துள்ளது.
> ✱ மாணவர் வெளிக்கள அறிவு குன்றியுள்ளது.

தொண்டமானாறு முகாமினால் தொண்டமானாறு வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலயம் இயங்க முடியாது மூடப்பட்டுள்ளதுடன் தனியார் கல்வி நிலையம் ஒன்றில் தற்காலிகமாக சில பிள்ளைகளுடன் மட்டும் இயங்குகிறது.

இடைக்காடு மகாவித்தியாலயம் இயங்கியும் இயங்காமலும், மாணவர்களின் வரவு மிகக் குறைந்தும் காணப்படுகின்றன.

அண்மையில் ஒட்டகப்புலம் றோ. க. பாடசாலையும் மூடப்பட்டுள்ளது. அச்சுவேலியில் புனித தெரேசாள் கல்லூரி அச்சுவேலி மகாவித்தியாலயம் என்பவற்றில் மாணவர் வருகை அரைவாசியாகக் குறைந்துள்ளது. வளலாய் அமெரிக்கன் மிசன் பாடசாலை, சதிரிப்பாய் ஸ்ரீ சுப்பிரமணியம் வித்தியாசாலை என்பவற்றிலும் மாணவர்கள் வரவு அண்மைக்கால நிகழ்வுகளால் மிகப் பாதிப்படைந்தன.

வயாவிளான் மத்திய மகாவித்தியாலயம், கட்டுவன் ஞானோதய வித்தியாலயம் என்பன முற்றாக முகாமாக்கப்பட்டுள்ளன.

காங்கேசன்துறைக் கல்வி வட்டாரத்தில் சட்டுவன் புலம் மகாவித்தியாலயம், வறுத்தலைவிளான் தமிழ் வித்தியாலயம், வீமன்காமம் மகாவித்தியாலயம் குப்பிளான் விக்னேஸ்வரா மகாவித்தியாலயம் என்பன மூன்றில் ஒரு பங்கு பிள்ளைகளுடன் இயங்குகின்றன. இவற்றிலும் 3500 மாணவர்கள் நேரடியாகவும் 2000 மாணவர்கள் மறைமுகமாகவும் பாதிப்படைந்துள்ளனர்.

வல்வெட்டித்துறை இராணுவ முகாமினால் வல்வெட்டித்துறை சிதம்பராக்கல்லூரி மூடப்பட்டதுடன் தனியார் கல்வி நிறுவனமான வல்வை கல்வி மன்றத்தில் குறைந்தளவு மாணவருடன் தற்காலிகமாக இயங்குகிறது.

**✱ எஸ். இராசதுரை ✱**

தீவுப்பகுதிப்பாடசாலைகளின் போக்குவரத்து வசதியீனங்களால் வட பகுதி ஆசிரியர்கள் செல்லமுடியாமையால் அவை சிரமமாக இயங்க முடியாதுபோயின.

## ஏனைய பிரதேசம்

கிழக்கு மாகாணத்தில் குறிப்பாகத் திருமலை மாவட்டத்தில் ஐம்பதிற்கும் மேற்பட்ட பாடசாலைகள் இயங்க முடியாத நிலையில் காணப்படுகின்றன. இவற்றில் கும்புறுப்பிட்டி, நிலாவெளி, தம்பலகாமம், கட்டைபறிச்சான், சேனையூர், சம்பூர், கூனித்தீவு, ஈச்சிலம்பத்தை, ஆலங்கேணி, பூனகரிப்பாடசாலைகள் அகதிகளின் முகாம்களாகவும், சதிரவெளி மற்றும் சில பாடசாலைகள் இராணுவ முகாம்களாகவும் ஆக்கப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களிலும் இதே நிலையே காணப்படுகின்றது. மன்னார், வவுனியா முல்லைத்தீவு மாவட்டங்களிலும் பல பாடசாலைகள் அகதிகளின் முகாம்களாக உள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் கொக்குளாய், கொக்குத்தொடுவாய், நாயாறு போன்ற இடங்களில் பாதுகாப்பு வலயம் காரணமாகப் பல பாடசாலைகள் இயங்க முடியாது உள்ளன.

மன்னார் மாவட்டத்தில் பரப்புக் கடந்தன் பாடசாலை குண்டு வீசி அழிக்கப்பட்டது.

கிளிநொச்சியில் பல பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன. இப்பாடசாலை (4-ஆம் பக்கம் பார்க்க)

# தேசியப் பார்வையே இல்லாத அரசுடன் பேச்சுக்கள் எதற்கு?

1983-ஆம் ஆண்டு நடைபெற்ற தமிழின ஒழிப்புக் கலவரத்தின் போது, 'போர் என்றால் போர்' என முழங்கியவர் மாண்புமிகு ஜனாதிபதி ஜே. ஆர் ஜெயவர்த்தன. அவரது முழக்கம் இன்றும் ஓயவில்லை. 'ஒரு பகுதியினர் வெற்றியடையும் வரை யுத்தம் நடைபெறும்' என யுத்தப் பிரகடனஞ் செய்திருக்கிறார் அவர்.

அரசாங்க நாடாளுமன்றக் குழு இராணுவ நடவடிக்கையைத் தொடருவதெனத் தீர்மானித்துள்ளதெனவும் யார் கண்டித்தாலும் அத்தீர்மானப்படியே அரசு செயற்படுமெனவும், பிரச்சினைக்கு வேறு வழியில் பரிகாரங் காண வேண்டுமென யாராவது கூறினால் அவர் நாட்டின் சத்துராதி எனவே கணிக்கப்படுவர் எனவும் மாண்புமிகு பிரதமர் திருவாய் மலர்ந்திருக்கிறார்.

இந்நிலையில் தேசிய ஐக்கியத்துக்கான பிரசைகள் குழு, இரு பகுதியினரையும் யுத்த நிறுத்தஞ் செய்யும்படியும், பிரச்சினையைத் தீர்ப்பதற்காகப் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்கும்படியும் வேண்டுகோள் விடுத்தது. இவ்வேண்டுகோளை 2-6-87 இரவும் 3-6-87 காலையும் இலங்கைஒலிபரப்புக்கூட்டுத்தாபனம் ஒலிபரப்பியது. மாண்புமிகு பிரதமரின் கருத்துப்படி, சத்துராதிகளின் வேண்டுகோளை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் துரோகத்தனமாக ஒலிபரப்பியது.

தேசிய ஐக்கியத்துக்கான பிரசைகள் குழுவின் வேண்டுகோளைப் பற்றிய அரசின் கருத்து வைத்த சாரணிகளில் இது முக்கியமானது.

அரசின் முன்னுக்குப் பின் முரணான பேச்சு, விட்டுக் கொடுக்காத போக்குக் காரணமாக 1983 ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை பிரச்சினை தீரவில்லை.

தேசிய ஐக்கியத்துக்கான பிரசைகள் குழுவின் வேண்டுகோளை இதுவரை அரசோ போராளிகளோ ஏற்கவில்லை.

**- மட்டுவில் ஆ. நடராசா -**

என்னவானாலும் தமிழ் மக்கள் பிரச்சினையைப் பேசித் தீர்க்கும்படி கோருவோரைச் சத்துராதிகள் எனக் கருதமாட்டார். பிரச்சினைகளைப் பேசித் தீர்த்துக் கொள்ள முடியும் என்னும் நம்பிக்கை காரணமாகவே, கடந்த காலங்களில் தமிழ்த் தலைவர்கள் சமரசப் பேச்சுக்களை நடத்திச் சிங்களத் தலைவர்களோடு ஒப்பந்தங்களைச் செய்தார்கள்.

சிங்களத் தலைவர்கள் ஒப்பந்தங்களை மீறியதன் மூலம், பிரச்சினைகளைப் பேசித் தீர்க்கலாம் எனத் தமிழ்பேசும் மக்கள் கொண்டிருந்த நம்பிக்கையைக் கெடுத்துவிட்டார்கள். தமிழரைத் தனிநாடு கோர நித்தம் நித்தங் கொன்றொழிக்கப்படும் இந்நிலை எப்போ நீங்குமென ஏங்கித் தவிக்கும், சமாதானத்தை விரும்பும் தமிழ் மக்கள் கூட இவ்வேண்டுகோளைப் பொருட்படுத்தவில்லை. இதற்குரிய முக்கிய காரணம் ஒன்றுண்டு. அதைத் தேசிய ஐக்கியத்தை விரும்பும் பிரசைகள் குழுவுக்குச் சுட்டிக் காட்ட வேண்டியது இன்றைய இக்கட்டான நிலையில் மிக மிக அவசியமாகும்.

## சிங்களப் பிரதேச வன்செயல்கள்

1987 . 04 . 17ல் ஹபரணை வீதியில் ஐந்து வாகனங்களில் வந்தவர்களில் 107 பேர் கொல்லப்பட்டனர். காயமடைந்த சிலர் பின்பும் உயிரிழந்தனர். ஆரம்பத்தில் உயிரிழந்த அனைவரும் பொதுமக்களே என அறிவித்த அரசு, பின்னர், அவர்களிற் சிலர் இராணுவத்தினர் எனக் கூறியது. அவர்கள் பிரயாணஞ் செய்த 'பஸ்' வண்டிகள் இராணுவத்தால் வாடகைக்கு அமர்த்தப்பட்டவை என்னும் உண்மை தெரிய வந்தது. அவர்களைக் கொன்றவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகள் என அரசு அறிவித்தது. அரசின் கூற்றைப் புலிகள் மறுத்தனர். உண்மைச் சம்பவத்தை அறிவதற்கு விரிவான அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படவில்லை; விசாரணைக்குழு எதுவும் நியமிக்கப்படவில்லை.

எது எப்படியிருந்தாலும் அச்சம்பவத்தில் அப்பாவி மக்களும் கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்களைக் கொலை செய்தவர்கள் கண்டிக்கப்பட வேண்டியவர்கள்.

இச்சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் இறுதிக் கிரியைகளைச் செய்வதற்கு அரசினால் நிதியுதவியும் அளிக்கப்பட்டது. அரசின் (6 ஆம் பக்கம் பார்க்க)

# மண்ணை நேசிக்காதவன் தன்னை நேசிக்காதவன்

சுன்னாகம் பிரஜைகள் குழுத் தலைவரான திரு. தி. மாணிக்கவாசகர் ஓர் ஓய்வுபெற்ற சிரேஷ்ட கல்வி அதிகாரி. கல்வித்துறையில் நீண்டகால அனுபவம்மிக்கவர். எமது பிரதேச கல்வி வளர்ச்சிக்கும் நல்ல பங்களிப்புச் செய்தவர். அவர் சஞ்சீவிக்கு அளித்த செவ்வி இதோ:-

## சமத்துவம்

நான் 1935ஆம்ஆண்டு முதல் 1939 ஆம் ஆண்டு வரை சென்ஜோன்ஸ் கல்லூரியில் படித்தேன்.

சிறுபிராயத்திலிருந்தே நான் சாதி - மதபேதமற்ற சமுதாயம் அமைய வேண்டும் என்ற எண்ணமுடையவனாக வளர்ந்தேன். விடுதி அனுமதி குறிப்பிட்ட ஒருசில இன மாணவர்களுக்கு மறுக்கபட்டதற்கும், விடுதியின் உணவுச் சாலையில் சமபந்தி போசனம் மறுக்கப்பட்டமைக்கும் கடும் எதிர்ப்பு தெரிவித்து நாம் நடத்திய போராட்டங்களின் பயனாக எமது கோரிக்கைகள் வெற்றி பெற்றன. அதற்கு உறுதுணையாக இருந்தவர் வரலாறு சமூகவியல் கற்பித்த எமது ஆசிரியரான பேராசிரியர் கு. நேசையா அவர்களே.

## பல்கலைக்கழகம்

வடமாநில கல்விப் பணிப்பாளராக இரு தடவைகள் கடமைபுரிந்தேன். 1-11-72 முதல் 23-7-74 வரை முதல் தடவையாகப் பணி செய்தபோது ஏற்பட்ட சம்பவம் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன்.

21-6-74ல் கல்வியமைச்சின் செயலாளர் திரு.பி உடகம அவர்கள் எழுதிய மடலில் 15-7-74க்கு முன்பதாக யாழ் பரமேஸ்வராக் கல்லூரியை மூடிவிடுவதுபற்றியும் அதை யாழ் வளாகம் ஆக்கும்முயற்சி பற்றியும் எனக்கு எழுதினர். அங்குள்ள மாணவர்களை அண்மையிலுள்ள ஏனைய பாடசாலைகளுக்கு அனுப்புமாறு பணித்திருந்தார். பரமேஸ்வராக் கல்லூரியை மூடுவதற்குப் பெரும் எதிர்ப்பு தெரிவித்து பலர் ஆர்ப்பாட்டங்களும் செய்தனர். யாழ்ப்பாண மக்களுக்கு ஒரு பல்கலைக் கழகம் கிடைக்கும் நல்ல முயற்சிக்கு பலர் தெரிந்தோ தெரியாமலோ

## இப்படிக் கூறுகிறார் ஓய்வுபெற்ற கல்விப்பணிப்பாளர் மாணிக்கவாசகர்

தெரிவித்த எதிர்ப்புக்கு மத்தியிலும் 15-7-74இல் பரமேஸ்வராக் கல்லூரியை நான் கையளிக்காது விட்டிருந்தால் மட்டக்களப்பில் நடந்ததுபோல யாழ் வளாகம் அமைவதும் தாமதப்பட்டிருக்கும். இது என் வாழ்வில் மறக்கமுடியாத மகிழ்ச்சியான சம்பவமாகும்.

## அவுஸ்திரேலிய அனுபவம்

1962இல கொழும்புத் திட்ட புலமைப் பரிசில்



பெற்று ஆங்கிலத்தை பிறமொழிப்பாடமாகக் கற்பிக்கும் குழுவில் இடம்பெற்ற ஒரேஒரு தமிழராக நான் அவுஸ்திரேலியாவுக்குச் சென்றேன்.

**செவ்வி: சபா. புஷ்பநாதன்**

அவுஸ்திரேலியாவின் சிட்னி பல்கலைக்கழகத்தில் விஞ்ஞானம், நுண்கலை, பொறியியல், மருத்துவம் முதலிய நெறிகளைபயில்வதற்கு உலகளாவிய மொழியான ஆங்கிலமே தேவையானதாகும்.

சிட்னி பல்கலைக்கழக விவாதக்குழுவில் பங்குபெற்ற முதலாவது ஆசிய நாட்டவர் நானே அவுஸ்திரேலிய மக்கள் போலி கௌரவங்களுக்கு மதிப்பளிக்காது எம்மைத் தமது வீடுகளுக்கு அழைத்து விருந்து தருவார்கள். கறுப்பர் வெள்ளையர் என்ற எவ்வித பாகுபாடுமின்றி எல்லோரையும் அவர்கள் சமத்துவமாக நடத்தியமை எனக்கு மிகவும் பிடித்தமானதொன்றாகும்.

## கல்வி அமைச்சின் தமிழ்ப்பிரிவு

1971 ஆம் ஆண்டு முதன்முதலாக தமிழ் பிரிவு 'Tamil Unit' சம்பிரதாய முறைப்படி அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. நானே அதன் முதல் தலைவராக நியமிக்கப்பட்டேன். ( 4-ஆம் பக்கம் பார்க்க )

# குழிகளும் இலாச்சமும் தமிழரின் நில அளவைகளே!

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தமிழகத்தில் தெளிவான நீட்டல் அளவுகள் இருந்துள்ளன. நீட்டல் அளவையை அளப்பதற்குக் கோல் எனும் கருவி பயன்படுத்தப்பட்டது. ஆசிரியர் கொடுமுடி ச. சண்முகன் ''அளகையியல்'' என்ற தனது நூலில் (தமிழில் இந்த ஒரே ஒரு நூல் தான் உண்டு) மாதவி ஆடிய அரங்கத்தின்அளவுகளைத் தரும் இளங்கோ அடிகளின் பின்வரும் பாடலைக் குறிப்பிட்டுக்காட்டியிருக்கிறார்.

நிலையை எய்தியவர். இவரின் கூற்றுப்படி ஒரு சாண் சராசரியாக 9அங்குலமெனக் கருதப்பட்டது அரசின் பாதத்திற்கும் (சிறிபாதா) சமனாகக் கருதப்பட்டது. இரு சாண்களை ஒரு முழமாக எடுத்து எட்டு முழங்கள் ஒரு கோலாக, அதாவது பன்னிரண்டு அடிகளாக புழக்கத்தில் பாவிக்கப்பட்டது.

கலாநிதி புரூஹியரின் கூற்றுப்படி ஒரு சதுரக்கோல், அதாவது 144 சதுர அடிகள் ஒரு குழியாகக் கணிக்கப்பட்டது. இதற்கு அவர்

> ''புண்ணிய நெடுவரைப் போகிய நெடுங்கழைக்
> கண்ணிடை ஒருசாண் வளர்ந்தது கொண்டு
> நூலெறி மரபின் அரங்கம் அளக்கும்
> கோல் அளவு இருபத்து நால்விரல் ஆக.''

இலங்கை தமிழ் மாவட்டங்களில் கலாநிதி ஆர். எல். புரூஹியர் (Dr. R. L. Brohier) தமிழர்களின் நில அளவைப் பரப்புகளைப்பற்றி ஆராய்ச்சி நடத்தியுள்ளார். இவர் நில அளவையாளராகத் தனது வாழ்க்கையை ஆரம்பித்து, காலப்போக்கில்

ஆதாரமாக, கொட்டியாரத்தில் சங்குவேலி என்ற கிராமத்தில் உள்ள சிவன் கோவிலின் கல்வெட்டு ஒன்றில், 13 — 14 நூற்றாண்டுக்காலங்களில், இந்த அளவை பொறிக்கப்பட்டுள்ளதாகக் கூறுகின்றார். மேலும் இந்தக் கணககிட்டிற்கு ராவ்பகதூர் கலாநிதி கே. ஐயங்

காட்டியுள்ளார். தமிழகத்தில் நூறு குழிகள் ஒரு ''மா'' ஆகவும், 20 ''மா''க்கள் ஒரு ''வேலி'' யாகவும் தற்போதும் வழக்கத்தில் உண்டு. ஆனால் இலங்கையில் குழிக்கு அடுத்தபடியாக இலாச்சத்தையே (Lachcham) பாவிக்கின்றோம். இந்த இலாச்சம் என்ற சொல்லின் உற்பத்தியை அறிவதற்கு எத்தனையோ பிரயத்தனங்கள் எடுத்தும் இன்று வரை முடியாமற் போய்விட்டது.

''இலாச்சம்'' என்ற சொல்லில் வேர் என்ன என்று கலாநிதி ஆர். எல். புரூஹியரிடம் வினவியிருந்தேன். யார் கொடுத்த பதில்:- ''இலாச்சம் என்றசொல்லைப் பற்றிய என்னிடம் இருந்த சில குறிப்புகளைத் தேடமுயன்றும் கிடைக்கவில்லை. எனது எண்பத்தைந்தாம் வயதில் உங்களுக்கு முன்பே தந்த விவரங்களை எப்படித் தேடி எடுத்தேன் என்பதை யோசிக்க ஆச்சயமாகவே இருக்கின்றது.'' இக்கடிதம் கிடைத்த

கலாநிதி புரூஹீயரின் கூற்றுப்படி ஒரு சாண் சராசரி 9''. 144 சதுர அடிகள் ஒரு குழி.

இதற்கு ஆதாரம் கொட்டியாபுரம் சங்குவேலி சிவன் கோயில் கல்வெட்டு.



Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

எழுதிய நூலில், ஒரு பழங்கவிதை இப்படி இருந்ததாக எழுதியுள்ளார்.

''குடியிருக்கும் வீடும் (மனை) தோட்டமும் 24 குழிகள். ஒரு இலாச்சம் வரகு செய்கை நிலம் 18 குழிகள். ஒரு இலாச்சம் நெற் செய்கை நிலம் 12 குழிகள். ஒரு கோல் எட்டு முழங்கள் நீளமுள்ள 12அடியுடையது. ஒரு குழியானது ஒரு கோல் நீளம், ஒருகோல் அகலம்.''

## பிரதேச வழக்குகள்

இது இவ்விதமிருக்க, இலங்கையில் சகல நில அளவைப் பதங்கள் பாவிக்கப்படுகின்றன. இந்த முறை அந்த அந்தப் பிரதேசங்களில் விதைக்கப்படும் தானியத் தொகையையும் சம்பந்தப்பட்ட இடப் பரப்பையும் பொறுத்திருக்கின்றது. உதாரணமாக முல்லைத்தீவு ஆறு மரக்கால் விதைநிலம் ஒரு ஏக்கருக்குச் சமனாகவும், மன்னாரில் இரண்டரைப் புசல் விதைநிலம் ஒரு ஏக்கராகவும் கருதப்படுகின்றது.

அளவையாளர் நாயகம், நில அளவை நிபுணர் என முன்பு கூறியிருந்தேன். இவர் 1949

## தமிழர் பிரதேசத்தில் புரூஹியர் ஆய்வு

சில மாதங்களில் இப்பெரியார் இறைவனடி எய்திவிட்டார். ஆனால் அவரின் கடிதத்தை ஒரு பொக்கிஷமாகப் பத்திரப்படுத்தி வருகின்றேன்.

இலங்கையில் உயர் நிர்வாகஸ்தராக இருந்த திரு. எச். டபிள் யூ. கொட்றிங்சன் H. W. Codrington (C. C. S.) இலங்கையின்

அளவைகளுக்கும் அளவையாளர் நாயகமே அளவை விடயங்களில் ஒரு நிபுணராகக் கருதப்படுகின்றார்.

இலங்கையில் பொதுவாக அந்தந்தப் பிரதேச வழமைப்படி பரப்புகள் கணக்கிடப்பட்டுள்ளன

இல் வடமாகாண அரசாங்க அதிபரிடம் யாழ்ப்பாண பரப்பளவைகளைப் பற்றி விசாரித்து இருக்கின்றார். அதிபர் இவ்விசாரணையை மணியகாரனிடம் அறிவிக்க, அவர் அனுபவ

**- ந. தேவராஜன் -**

## கவிதைக் கதம்பம்

### காகிதக் காதலியே!

காகிதமே!
அடங்காப்பிடாரிகள்
அத்தாணையும்—கரப்
பொத்தாணையும்-அடிக்கும்
ஆயுதமே!

சஞ்சிகை வடிவில்
சஞ்சரித்து
ஊர் வம்பு பேசுகையில்
எம்மினமாகிப் போகிறாய்
பாங்கிலிருந்து
பணமாகிப் போகையில்
மடியில் கனமாகிப்போகிறாய்

நான் பள்ளிப் பருவத்தில்
பட்டமாய் விட்டதும்
பல்கலைக்கழகத்தில்
பட்டமாய்ப் பெற்றதும்
உன்னைத்தானே!

பேருக்குப் பிள்ளைகள்
பெத்தெடுத்தாலும்
பலர் வயசான காலத்தில்
தத்தெடுத்ததும் உன்னைத்தானே!

கன்னியிடம் - காதலைக்
கெஞ்சலாய்க் கேட்டு
அஞ்சலாய்ப் போனதும்;
கன்னியின் கோபத்தால்
கஞ்சலாய்ப் போனதும்
நீதானே!

அதனால்;
உருவான காதல்
சருகாகிப் போனதும்;
கருவான கவிதை
பிரசவித்ததும்-அதை
பிரசுரித்ததும் நீதானே!

பத்திரம் எழுதவும்-அதைப்
பத்திரப் படுத்தவும்
சித்திரம் வரையவும் - அதை
சிந்தையில் நிறுத்தவும்
பலதாய்ப் பயன்படும்
விசித்திரப் பொருள் நீ

தட்டிகளில் ஒட்டிவிட்டு
விடயங்களை விதைத்துவிட்டு
வர்ண நீரை வாரியிறைத்து
எழுதுகோலால் உழுதுவிட்டால்
கால்நடைக் கண்களின்
மேய்ச்சல் நிலம் நீயே.

சினிமாப் போஸ்ரரில்
சிலுக்கின் வடிவில்,
உன்னைப் பார்க்கையில்
உதடு சிரிக்கிறது
உடம்பு சிவக்கிறது
உள்ளம் சிலிர்க்கிறது.

தராசுக்குப் பாரமே!—என்
தாலி கட்டாத்தாரமே!
எனக்கோ நீ காதலி
என் மனைவிக்கோசக்களத்தி.
காரணம்—
புதுமனைவி புக்ககத்தில்
புகுந்தவேளையிலும் - உன்
புத்தகத்தில் - முகம்
புதைத்தவன் நான்.

—எஸ்.ஜே.பி. ரட்ணதுரை—

★ ★ ★

### நினைவு நெஞ்சில் துயிலும்

கோலவிழி காட்டிக்
குறுநகை யூட்டிச்
சிலமுற வந்தென் முன்
செவ்விதழை நீட்டி(ப்)
பாலமுதம் தந்தாய்
பவ்மலராய் நின்றாய்!
(வேறு)
தாளடிக்கும் தட்டச்சுக் கைகள்
தத்துகின்ற இளவண்டுக் கண்கள்
ஆளடிக்கும் மையல் கொண்ட பார்வை
அன்பினால் போர்த்துகிறாய் போர்வை

சிலமுறு தேன் குளத்தில் பூத்த
செங்குவளை தோற்கு மிள நெற்றி!
மான் நடையைப் பழிக்க நடைபயிலும்
மங்கையிடை என் நெஞ்சில் துயிலும்

வான் மேகக் கூந்தலசைந் தாடும்
வற்றாத கடலலைபோல் ஓடும்—
தேன் நிலவு உனைக்கண்டு பாடும்
தென்றலது தழுவியுனைக் கூடும்;

—மு. வே. யோகேஸ்வரன்

★ ★ ★

### காவல் காக்கின்றாள்!

நாளைக்கு அவர் வாறார்
மூளைக்கு வேலையில்லை
எல்லைக்குக் கதியால்
பிள்ளைக்கு ஸ்கூலிங்
என்றெல்லாம் கவனிப்பார்-இனி
எனக்கு வேலையில்லை
தாலியும் கொண்டுவாறார்
என்றவள் சொல்லி
ஒரு நாள் ஆகவில்லை!

பூவையவள் அணிவதற்கு
தாலி ஒன்று கிட்டாமல்
வந்த பஸ்சை இடைமறித்து
செக்கிங் என்று சொல்லி
கியூவில் நிற்கப்பண்ணி
நாற்பதுடன் ஒன்று கூட்டி
அவளின் புருசனையும்
நாயைச் சுடுவதுபோல்

வேட்டுவைத்துச் சென்றாரே
ஒருகண நேரத்துள்
எல்லையற்ற கற்பனைக்குள்
மகிழ்ச்சியாய் வாழ்ந்துவிட்டாள்
இலைப்போதும் வாழ்வென்று
சிங்காரத் தமிழ் நங்கை
பூவிழந்து பொட்டிழந்து
கண்ணன சண்ணிழந்து
தமிழ் எல்லை வாசலிலே
காவல் காக்கின்றாள்!

—பொ. மகேந்திரசிங்கம்

# நாட்டின் விடுதலை நாடியவள் ஆர்க்
# வீர மரணத்தை பரிசாகப் பெற்றாள்!

**வீராங்கனை ஜோன் ஒவ் ஆர்க்**
**அத்தியாயம் 4**

அரசனுக்கு ஆத்திரம் மேலிட்டது. அரசன் ஆர்க் மேல் சீறிப்பாய்ந்தான். தெய்வக்கட்டளையைப் பலர் முன்னிலையில் சூட்டமுடியுமா என்று கேட்டான்.

தடையின்றிக் காட்டுவேன். பாருங்கள் எனக் கூறி ஆண்டவனைவேண்டினாள்.

''கார்லசு மன்னன் ரீம்சுக்குச்சென்று பொன் முடி சூட்டிக் கொள்வானாக'' என ஒரு வெண்கலக்குரல் ஒலித்தது. ஆர்க் அகமிக மகிழ்ந்தாள். ஆண்டவனை மேலும் மேலும் ஆராதித்தாள். பிரான்சு நாடு அந்நியராதிக்கத்தினின்றும் விடுதலை பெற வேண்டுமென்று வேண்டிக் கொண்டாள்.

அரசன் ஆங்கிலேயருக்கு அஞ்சி அதிககாலம் ரீம்சுக்குச் செல்லாது இருந்தான். ஆர்க்கின் வற்புறுத்தலாலும் தெய்வவாக்காலும் அரசனுக்குத் தைரியமேற்பட்டு அவன் அங்கு சென்றான். மக்கள் ஆர்க்கையும் அரசனையும் ஆரத்தழுவி மகிழ்ந்தனர். அங்கு கார்லசுக்கு பொன்முடி சூட்டப்

**புத்தொளி**

பெற்று மலர்மாரி சொரியப்பட்டது. மன்னனுக்கு மகிழ்ச்சி ஏற்பட்டது. ஆர்க்கை இளவரசன் பாராட்டினான்.

விடுதலை வீராங்கனையே! நமது நாட்டில் விடுதலைக்கு நீ செய்த தியாகம் வாய்விட்டுப் பாராட்ட முடியாதது. ஏட்டில் எழுத முடியாதது. நாடு உள்ளளவும் உன் புகழ் நிலைத்திருக்கும். நீ செய்த தியாகத்திற்கு நான் கைம்மாறு செய்யக் கருதுகின்றேன். உனக்கு வேண்டியதைக் கேள். நான் மனமுவந்து அதனை வழங்குகின்றேன்.

அரசே நீங்கள் கேட்டதற்கு மிக்க நன்றி. எனக்கெதுவும் வேண்டாம். நான் எனது நாட்டின் விடுதலைக்காகப் போரிட்டேன். வெற்றியும் பெற்றேன். எனது ஊரான டாம்ரிமிக்கு வரி நீக்கிவிட வேண்டும். என்றாள் ஆர்க். அரசனும் அவ்வாறே செய்தான்.

பிரான்சில் ஆங்கிலேயர் தோற்றதும் அவர்கள் வசமிருந்த நாடுகளுக்கு கார்லசு அரசனானதும் ஆர்க் படைத்தலைவியாய் இருந்ததும் பெட்போர்டு என்பவனுக்குப் பெருங்கவலையை ஏற்படுத்தியது. இங்கிலாந்து மன்னனான ஹென்றி என்பவன் குழந்தையாக இருந்தான். அதனால் ஸெட்போர்டு என்பவன் இராசப் பிரதிநிதியாக இங்கிலாந்தை ஆண்டு வந்தான். பிரான்சில் ஆங்கிலேயர் தோற்றது அவனுக்குப் பெருங்கவலையை ஏற்படுத்தியது. அவன் தினமும் திட்டமிட்டு ஐயாயிரம் போர் வீரரைப் பிரான்சுக்கு அனுப்பி கார்லசைப் பிடித்துவரக்கட்டளையிட்டான். அப்படை பாரிசை அடைந்து தாக்குதலை நடத்தியது.

அரசன் இவர்களுடன் போரிட அஞ்சி நாட்களைக்கடத்தினான். அதற்குள் ஆங்கிலேயர் தம் எதிரியைத் தாக்கப்பாரிசில் தக்க அரணை அமைத்துக் கொண்டனர்.

ஆர்க் தன் படைகளைக் கொண்டு ஆங்கிலேயரைத் தாக்கினாள். முன்னர் நடந்த போர்களை விட இப்போரில் அவள் சிறிது மிகுதியாகவே துன்புற்றாள். ஆர்க்கின் தொடையில் கூரிய அம்பொன்று பாய்ந்தது. இறுதியில் ஆங்கிலப் படை அல்லோலகல்லோலப்பட்டு ஓடியது. அன்றைய யுத்தத்தில் பாரிசின் சிறு பகுதியைத் தான் ஆர்க்கினால் மீட்க முடிந்தது.

கார்லசு அரசன் போரை நிறுத்திவிட்டுத் தன்னை வந்து சந்திக்குமாறு ஆணையிட்டான். ஆர்க் போரைத் தொடராது அரசனிடம் சென்றாள். கார்லசுக்குத் துணையாக ஆர்க்கை வருமாறு கட்டளையிட்டான். அவளும் அவ்வாறே செய்தாள்.

ஆர்க் பாரிசில் இல்லை என அறிந்த ஆங்கிலேயர் கொள்ளையிட்டனர். தீயிட்டுக்கொளுத்தினர். அவள் மீட்ட இடங்களை மீண்டும் கைப்பற்றினர். இச் செய்தி கேட்டு ஆர்க் துடிதுடித்தாள். மீண்டும் யுத்தம் செய்தாள். மௌஸ்டீர் என்னும் நகரை முற்றுகை இட்டாள். அங்குள்ள கோட்டையின் வன்மையையும், படையின் பெருக்கையும் பிரான்சியப் படை கண்டு அஞ்சியது. தாக்குதல் நடந்தது.

(5 ஆம் பக்கம் பார்க்க)

# மருத்துவம் கைவிட்ட போதும்
# தெய்வீகம் கைகொடுத்தது

'மம்மி என்னைக் கட்டிலிலிருந்து கீழே தூக்கிவிடு. நான் நடக்கப்போகின்றேன்' என்றான் அவளுடைய மகன்.

பாரிச வாதத்தால் பாதிக்கப்பட்டு என்றுமே நடக்கமுடியாத நிலையில் இருப்பது மகனுக்கு நன்கு விளங்குமென்பதால்; அவனுடைய வேண்டுகோள், தாய்க்கு விசித்திரமாக இருந்தது. மகனைச் சாந்தப்படுத்தி. ''நள்ளிரவு, நடக்கப் பழகிறதற்கு இது உகந்த நேரமல்ல. நீ கீழே விழுந்தால் உன்னைத் தூக்கிவிடவும் ஆட்கள் ஒருவருமில்லை, ஆகையால் படுத்து உறங்கு? விடிந்ததும் நான் உன்னை கீழே இறக்கி விடுகின்றேன்.'' என்று மகனுக்குப் புத்திமதி கூறினாள்.

மகனோ விடுவதாக இல்லை. ''இவ்வளவு நாளும் என் கால்கள் காற்றில்லாத உலதை பந்துபோல நசுங்கிக் கிடந்தது. இப்போ காற்று நிரம்பி அழுத்தமாக இருக்கிறது. மின் சாரம் என்கால்களுக்குள் பாய்வதுபோல் உணர்கிறேன். மம்மி தயவு செய்து ஒருதரம் என்னை இறக்கிவிட்டுப்பாரேன்.' என்று கெஞ்சும் குரலில் கூறித் தன் தாயைப் பரிதாபமாகப் பார்த்தான். மகனின் துயரத்தைத் தாங்காமல் அவனை நிலத்தில் இறக்கிவிட்டாள்.

அவன் நடந்தான். ஒருவரின் உதவியையும் அவன் நாடவில்லை. இயற்கை நடையாகவே தாய்க்குத் தென்பட்டது. பக்கத்துஅறைக்குள் நடந்து சென்றான். அங்கிருந்து அவனுடைய பாதணியை எடுத்து மாட்டினான். தாயை ஒரு உற்சாகத்தோடு பார்த்தான்.

''மம்மி நான் இப்போ மைலாப்பூரிலுள்ள பூங்காவிற்கு உலாவச் செல்லவேண்டும். நீயும் என்னுடன் துணையாக வா'' என்று தாயை நிர்ப்பந்தித்தான்.

தன் கண்களையே சிதா மகா இலட்சுமியால் நம்பமுடியவில்லை. ஒன்றும் விளங்காமல் திகைப்படைந்தாள். ''இது எவ்வாறு நடந்தது? பிரபல மருத்துவர்களே மகனால் இனி நடக்கமுடியாது என்று கைவிட்டுவிட்டிருந்தனர்'' மகனோ சுறுசுறுப்பாக அங்குமிங்கும் நடந்துகொண்டே இருந்தான். அவன் நடப்பதை உன்னிப்பாகக் கவனித்தாள். அவள் உடம்பு இன்பவெள்ளத்தில் மிதந்தது. மகனின் இருண்ட வாழ்வில் பாரிய திருப்பம் ஏற்பட்டு ஒளிவீசப்போவதை எண்ணிப் பெருமிதமடைந்தாள்.

> சாயி ஈசனை உண்மை அன்பினால் பிணைத்தால், ''அவன்'' நிழலைப்போல் பக்தர்களைப் பின்பற்றுவான். உண்மை, நற்குணம், நல்லொழுக்கம், தன்னலமற்ற தூய சமூகசேவையால் 'அவனை' ஆட்கொள்ளலாம். 'அவனால்' பெற்றுவரும் நன்மையெல்லாம் பேசிமுடியாது.

மகனை அன்புசுரக்க அணைத்து, விடிந்தபின் பூங்காவிற்கு உலாவச் செல்லலாமென்று பரிந்து கூறினாள்.

மகனோ பூங்காவிற்குச் செல்ல அடம்பிடித்தான். நீண்டகாலம் ஒதுங்கி ஓய்ந்திருந்து வாடிய மகனை வெறுப்பூட்ட அவள் விரும்பவில்லை. மகனின் விருப்பத்தைப் பூர்த்திசெய்யும் பொருட்டு, அதிகாலை நாலுமணிக்கே இருவரும் பூங்காவிற்கு உலாவச் சென்றனர்.

வீடு திரும்பும்போது, உற்றார், உறவினர் சிதா இலட்சுமியின் மகன் சுகப்பட்டதை அறிந்து இல்லம்வந்து தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்தனர். வைத்திய கலாநிதிகளுக்கு சிறுவன் கொடிய வியாதியிலிருந்து மீட்சிபெற்றது அதிசயமாக இருந்தது. மகா சிதா இலட்சுமி, மகன் கட்டிலில் சாய்ந்த நாள்முதல், ஆறுதலும், அமைதியுமற்ற வாழ்க்கையையே நடத்தினாள்.

கோட்டில் வேலைப் பழு, வீட்டில் பதிசேவை, இரவில் நித்திரையற்று மகனை உற்சாகப்படுத்தல்—இவ்வளவு வேலைச் சுமையுடன் பொதுநலச் சேவா மன்றங்களின் முன்னேற்றத்திற்கு அரும்பாடுபட்டு உழைத்தாள். இதனால் நரம்புத் தளர்ச்சி ஏற்பட்டு, உடம்பு மிகவும் மோசமான நிலையில் பாதிக்கப்பட்டிருந்தாள்.



#### இளைஞன் தரிசனம்

இந்தநிலையிலும் தேடி வந்து நோயைத் தீர்த்த புண்ணியனை தன் குடும்பத்துடன் நாடிச் சென்றாள். புட்டப்பர்த்தி ஈசனை நன்கு தெரியாத காலம் அது. சாய்பாபா என்றால் அப்பொழுது சிரடியானையே குறிக்கும். சிரடி, பம்பாய் நகருக்கு அருகாமையிலுள்ளது. நீண்ட பிரயாணத்தின் பின் சிரடி அடைந்தனர். அப்பொழுது இருட்டாகிவிட்டது. இரவை ஓர் விடுதியில் கழிக்க ஒழுங்கு செய்தனர்.

பிரயாணக் களைப்பாலும், உடம்பு நோவாலும் பாதிக்கப்பட்ட சிதா மகா இலட்சுமி விடுதியை அடைந்ததும் கட்டிலில் சாய்ந்து விட்டாள். சிறிது நேரத்தின் பின் ஒரு இருபதுவயது மதிக்கத்தக்க இளைஞன் அவர்களிருந்த விடுதியை அடைந்து ''சிதா மகா இலட்சுமி, எழுந்திரு. நான் உனக்காக தீர்த்தம் கொண்டு வந்திருக்கிறேன். தீர்த்தத்தைப் பருகு'' என்றான். அவளோ குழம்பிய நிலையிலிருந்தாள். அன்னிய இடம். தீர்த்தம் கொண்டு வந்தவர் முன்பின் தெரியாதவர். தான் அங்கிருப்பது இந்த நபருக்கு எவ்வாறு தெரிந்தது? இதனால் தீர்த்தத்தை ஏற்க பின்னடைந்தாள்.

வந்தவரோ அவளை விடுவதாக இல்லை. அவர் 'சிதா மகாஇலட்சுமியின் தேகம் நல்ல ஆரோக்கியமான நிலையிலிருப்பதாக எல்லோரும் நினைக்கிறார்கள். அவளின் சரீரம் தாங்கொணா வேதனையில் வருந்துகிறது. இந்தா இந்தத் தீர்த்தத்தைப் பருகு'' என்றார். வந்த இளைஞன் கூறியது உண்மையாதலால், அவளின் கணவனும், மகனும் அவளைத் தூக்கி உயர்த்தி, அவளின் இரு கைகளையும் நீட்டி தீர்த்தத்தைப் பெறச்செய்தனர்,

#### தீர்த்த மகிமை

தீர்த்தத்தைச் சுவைத்தவுடன்அவள் ''ஆ!நான் பருகியது தீர்த்தமல்ல, அமிர்தமல்லவா என் கையில் இடப்பட்டது'' என்றுகூறி அந்த இளைஞனுக்கு நன்றி கூறும் பொருட்டு அவன்பக்கம் திரும்பினாள். தீர்த்தம் கொண்டுவந்தவர் திடீரென மறைந்து விட்டார். அன்று இரவு முழுதும் சாய்பாபா தங்கள் மேல் காட்டும் தெய்வீக அன்பை நினைந்து நினைந்து கண்ணீர் விட்டார்.

விடிந்ததும் மகா சிதா இலட்சுமி வெகுஉற்சாகமாக எழுந்திருந்தாள். குடும்பத்துடன் சிரடி அய்யனின் சமாதிக்குச் சென்று அகமுருகித் தங்கள் பிரார்த்தனையைச் செலுத்தினர். என்றுமிலா மகிழ்ச்சியுடன் சென்னை திரும்பினர்.

'சாயீசனை, உண்மை அன்பினால் பிணைத்தால் அவன்' நிழலைப்போல் பக்தர்களைப் பின்பற்றுவான். உண்மை, நற்குணம், நல்லொழுக்கம், தன்னலற்ற தூய சமூக சேவையால் ''அவனை ஆட்கொள்ளலாம்.'' நாளாக நாளாக நம்மிடத்தே 'அவனுக்கு' பற்றுமிகுந்துவரும். 'அவனால்' பெற்றுவரும் நன்

(5 ஆம் பக்கம் பார்க்க)

**சமயம்**

★ சத்தியா ★

## மண்ணை நேசிக்காத...

(3ஆம் பக்க தொடர்ச்சி)

எனக்கு உதவியாக திரு. இரா. சிவலிங்கம் கல்வி அதிகாரியாக நியமிக்கப்பட்டார். தமிழ் போதனா மொழியாக உள்ள பாடசாலைகளின் நிர்வாகம், மேற்பார்வை முதலியன இவற்றுள் அடங்கும். இக்காலகட்டத்தினுள்தான் மலைநாட்டில் தமிழ் பாடசாலைகள் பலவற்றை அமைக்கவும் தோட்டப்பாடசாலைகளின் கல்வித் தரத்தை உயர்த்தவும் பல திட்டங்களை வரைந்து செயற்பட்டோம்.

### இலவசக்கல்வி

இலங்கையிலே முதன் முதலாக இலவசக்கல்வி ஆரம்பமானது புத்தூர் சோமாஸ்கந்த கல்லூரியிலேயே என்பது பலருக்கும் தெரியாது. புத்தூரிலும் அயற்கிராமங்களிலும் உள்ள வறிய பிள்ளைகளுக்கு இலவசமாகவே பாடபோதனையை திரு. மழவராயர் கந்தையாவினால் போதிக்கப்பட்டது.

1936 இல் உதவி நன்கொடைகள் அரசிடம் இருந்து பெறும் பாடசாலையாக்கப் பட்டது. 1942இல் எனது தகப்பனார் அமரத்துவம் எய்த காவல் குழு உறுப்பினரானேன். மிகப்பெரிய விளையாட்டு மைதானம் அமைத்தேன். விஞ்ஞான கூடம் அமைத்தேன். இதனால் முதலாம்தர பாடசாலையாக தரமுயர்த்தப்பட்டது. இதற்கு உறுதுணையாக உழைத்த அதிபர்கள் திரு. ச. வீரசிங்கமும், திரு. எஸ், குமாரசாமியும் செய்த சேவைகள் பாராட்டுக்குரியன.

எமது எதிரிகள் எங்களிடம் இருந்து எல்லா செல்வங்களையும் பறித்துவிடலாம், ஆனால் கல்விச் செல்வத்தைப் பறிக்கமுடியாது என்பது சரித்திரம் புகட்டும் உண்மை. எனவே கல்வி எங்கள் உயிர்நாடி.

தமிழ்மூலம் நெறிகளைப்பயிலும் இக்கால மாணவர்கள் ஆங்கிலத்தை விஷேடமாக கற்க வேண்டும்.

அதேவேளை மாணவர்களுக்குத் தமிழ்மொழிப் பற்று - தமிழ்கலை கலாசாரங்களைக் பேணிக் காப்பதில் உறுதியும் வேண்டும். தமிழ் மண்ணை [illegible] இது காதல் [illegible] மண்ணை நேசிக்காதவன் தன்னை நேசிக்காதவனாகவே கரு

## அண்மைக் கால...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

களில் கற்பித்து வந்த வெளிமாவட்ட ஆசிரியர்கள் அங்கு செல்ல முடியாதுள்ளனர்.

இந் நிகழ்வுகளால் 25 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் நேரடியாகவும், 1 இலட்சத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் மறைமுகமாகவும் பாதிக்கப்பட்டனர்.

உளவியல்ரீதியாகவும், உடலியல் ரீதியாகவும் ஏற்பட்ட இத்தாக்கத்தில் இருந்து மாணவர்கள் மீள முடியாதுள்ளனர்.

மாணவர்களது I. Q. எனப்படும் விவேக ஈவு அளவு இவற்றால் மோசமாகப் பாதிக்கப்பட்டதனை ஆய்வுகள் நிரூபிக்கின்றன.

இலங்கையில் பல்கலைக்கழக நுழைவுப் பிரச்சினையானது இனப்பிரச்சினையாக்கப்பட்டு சப்பாத்திற்கு அளவாக காலை நறுக்கியதற் கொப்ப ''இரண்டும்கெட்டான்'' நிலையை [illegible] இன்று அனுபவப்படுகின்றது.

### பாதிப்புகள்

தமிழ் மக்களைப் பொருளாதாரத்தில் இனப் பிரச்சினை கல்வியியல் பிரச்சினையாகி தமிழ் இனத்தினைப் பின்வருமாறு நேரடியாகப்பாதிக்கின்றது.

தமிழ் மாணவர்களில் கல்வியை இடையில் நிறுத்திப் பாடசாலையை விட்டு வெளியேறும் மாணவர் தொகை மிகக் கூடுதலாக அதிகரித்துள்ளது.

கல்விப் பாரம்பரியத்தினைப் பேணும் கல்விக் கூடங்கள் பல செயலிழந்தன.

பாடசாலையின் நூலகங்கள், பொது நூலகங்கள் அழிக்கப்பட்டதால் எதிர்காலத்துக்கான கல்விவளர்ச்சியின் அத்திவாரம் ஆட்டம் கண்டுள்ளது.

ஆசிரியர்களது அச்ச உணர்வு கற்பித்தலை அதிகளவு பாதித்துள்ளது.

மாணவர்கள் வெளிக்கள அறிவு பெறமுடியாது தனியே பரீட்சைக் குப்பாடத்தினை ஒப்புவிக்குப் புத்தகக் கல்வியை மட்டுமே பெறமுடிகின்றது. ★

## குழிக...

(3ஆம் பக்க தொடர்ச்சி)

யிடம் விசாரித்துள்ளார். திரு. பிள்ளை கொடுத்த பதில்:- ஒரு குழி சமன் 353 சதுர இலிங்குகள் என்பதே (அதாவது 153 . 77 சதுர அடிகள்) இது அரசாங்க அதிபரால் நில அளவையாளர் நாயகத்திற்குத் தெரிவிக்கப்பட்டு, ஒரு குழி 144 சதுர அடிகள் என்ற வழக்கத்தில் இருந்து 153.77 சதுர அடிகளாக நிலஅளவை நாயகத்தின் கவனத்தை ஈர்ந்தது.

இம்மாற்றம் டச்சுக்காரர்களால் ஏற்பட்டு இருக்கலாம் என நம்புகின்றேன். பல ஆண்டுகளாக யாழ்ப்பாணத்தில் நில அளவையாளர்களால் காணியின் பரப்பு ஒரு குழி 153. 77 என்ற விகிதத்திலேயே கணிக்கப்படுகின்றது. கலாநிதி புரோஹீயரின் 'காணிப் படங்களும் அளவைகளும்' என்ற இரண்டாம் தொகுதி நூலில் ஒரு குழி 353 சதுர இலிங்குகளுக்கு சமம் என்பதற்கும் ஆதாரம் உண்டு எனலாம்.

நாலு மோர்ஜென் (Morg n இது ஒரு ஒல்லாந்து பரப்பளவு சொல்) நிலம் 200 நெல் விதைப்பு இலாச்சங்களுக்குச் சமன் என்கின்றார். ஒரு மோர்ஜென் 2 . 12 ஏக்கர் எனவும் சொல்லப்பட்டுள்ளது. எனவே 200 நெற்பரப்பு சமன் 8 . 48 ஏக்கர். இதன்படி தற்போது உபயோகத்தில் இருக்கும் ஒரு குழி சமன் 153 . 77 சதுர அடிகள் சமன் 353 சதுர இலிங்குகளுக்குச் சரி என ஏற்கலாம்.

திரு. தி. சிறீ இராமனுதன் எழுதிய 'தேச வழமை' எனும் நூலின்படி பண்டைக்காலத்தில் நெல், குரக்கன், கொள்ளு, அரிசி ஒரே விலையுடையதாக இருந்தன. ஆனால் எவராவது வரகை நெல்லுடன் பரிமாற்றம் செய்வதாயின், ஒரு பறை நெல்லிற்கு ஒன்றரைப்பறை வரகு கொடுத்தேயாக வேண்டும். இதன்படி வரகிலும் பார்க்க நெல்லிற்கு கூடிய பெறுமதி இருந்திருக்கின்றது. எனது அபிப்பிராயப்படி இந்தக் காரணத்திற்காகத் தான் நெற்பரப்பு பன்னிரண்டு குழிகளாகவும், நிலப்பரப்பு பதினெட்டுக் குழிகளாகவும் தீர்மானிக்கப்பட்டிருக்க வேண்டும். குழிகள் யாவும் ஒரே சதுர அளவுகளையுடையன என்பதை நாம் மனதில் வைத்திருத்தல் வேண்டும். ★

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# கடவுளும் ஒரு முறை யாழ்ப்பாணம் வருகிறார்!

## மக்கள் அவலம் கண்டு மனம் குமுறுகிறார்!!

பூலோகத்தை இரண்டு நாளாவது சுற்றிப் பார்க்க வேண்டுமென்ற ஆவல் எனக்குத் திடீரெனப் பிறந்தது. எனது ஆழ்ந்த யோசனையைப் பார்த்த துணைவியார் ''என்ன தலை போகிற யோசனை?'' என்று கேட்டார்.

''அவதாரம் எடுக்க அதிகநாள் இருக்கிறது. ஒருமுறை பூலோகம் சென்று நிலைமைகளை அவதானித்து வர ஆசை''

''மீண்டும் பிரிவதா என்றால் தாங்கமுடியாது. நானும் கூட வருகின்றேன்.''

''நான் ஓரிரு நாளில் திரும்பி வந்து விடுவேன். அந்தப்பிரிவையும் தாங்க முடியாதா?. பூலோக நிலைமையை அறிந்துவர வேண்டும்.''

ஒருவாறு சமாதானம் செய்ததும் எந்த நாட்டிற்குப் போவது என்று பிரச்சினை எழுந்தது. மனைவியிடமே ஆலோசனை கேட்டேன். நீண்ட நேரச் சிந்தனையின் பின்பு ''யாழ்ப்பாணம் போவதுதான் சிறந்தது. அங்குதான் நிறைய விசேடம் இருப்பதாகவும் எம்மை வழிபடும் ஸ்தலங்கள் இருப்பதாகவும்'' அருள்மொழி பகர்ந்தார். யாழ்ப்பாணம் அன்று இரவே போவதாகக் நான் தீர்மானித்தேன்.

### வெடிச் சத்தம்

நள்ளிரவு பன்னிரண்டு மணிக்குப் பெருமாள் கோவில்அருகில் சாரமும் சேர்ட்டுடனும் மானிடனாகத் தோன்றினேன். அவரது திருவடி புவியில் பதிந்ததுதான் தாமதம் பயங்கர வெடிச்சத்தங்கள் எங்கும் ஒலித்தன.-

''நான் வருவதாக யாருக்கும் தெரியாதே. அப்படியிருக்க இந்த நள்ளிரவில் என்னை வெடி கொளுத்தி வரவேற்பார்கள் என்று நான் நினைக்கவில்லை. யாழ்ப்பாண மக்களின் வரவேற்பையிட்டு அளவில்லா மகிழ்ச்சி அடைந்தேன்.

நானும் சத்தம் வந்த திக்கை நோக்கிச் சென்றேன். என் வரவு அறிந்து ஊர்வலம் வருகிறதோ என்று பார்க்க நான் சென்ற வீதியின் அருகிலிருந்த வீட்டிற்குள்ளே பயங்கர வெடிச்சத்தம். வீடு உடைந்து விழுகிறது காதே அடைத்து விட்டது போன்ற பிரமை. வெடியை யாரும் வீட்டிற்குள் கொளுத்துவார்களோ யாழ்ப்பாணத் தமிழர் புத்திசாலிகள் இப்படிச் செய்வார்களா?

திடீரென வீட்டிலிருந்து அவலக்குரல். உள்ளேபோய் பார்க்கின்றேன். உயிர் இழந்தோரும் அங்கம் துண்டிக்கப்பட்டோரும் இரத்த வெள்ளத்தில் கிடக்கின்றனர். அவர்களுக்கு உதவிசெய்கிறேன். என்ன நடந்தது என்று கேட்க நேரமில்லை. கூட்டம் கூடுகிறது. யாரைக் கேட்பது. அவர்களின் பதசழிப்பு, மீண்டும் கோவிலுக்கு வந்துவிட்டேன். நித்திரை கொள்ளமுடியவில்லை, ஒரே வெடிச் சத்தம். கோழித்தூக்கம் போட்டேன்.

விடிந்ததும் விடியாததுமாக எழுந்தேன். இரவு ஒன்றும் நடவாதது போல் மக்கள் நடமாட்டம். நான் கண்டது கனவோ. வெளிக்கிட்டு யாழ்ப்பாணம் நோக்கிப் போனேன். போகும் வழியில் உடைந்த வீடுகள். சிதைந்த மதில்கள். வீட்டைக்கட்டி யாரும் உடைப்பார்களா? சில வேளை உடைப்பது நாகரிகமோ, கலியுகத்தில் எல்லாம் மாறுபாடுதான் கோவில்கள் உடைபட்டு எரிந்து கிடந்தன. புனித ஸ்தலங்களை இப்படிச் செய்கிறார்களே.

### யாழ் ஆஸ்பத்திரி

யாழ்ப்பாண ஆஸ்பத்திரியின் பின்பக்கமாகச் செல்கின்றேன். ஆஸ்பத்திரியும் உடைந்து போய்ச் சிதைந்து கிடக்கிறது. ஆஸ்பத்திரியை உடைப்பதற்கு யாழ்ப்பாணத் தமிழனுக்கு மூளைகுழம்பி விட்டதா. யாரைக் கேட்பது. கேட்டால் புதியவன்என்று தெரிந்து விடும். என்னைக் காட்டிக் கொடுக்க விரும்பவில்லை.

பஸ் நிலையத்தை நோக்கி நடந்தேன். வெறிச்சோடிக் கிடந்தது. கடைகள் பூட்டுகளை இழந்து காணப்பட்டன. ஆள் நடமாட்டம் குறைவு. திடீரென ஆகாயத்தில் பேரிரைச்சல். நிமிர்ந்து பார்க்கின்றேன். கருட வாகனம் மாதிரி நான்கைந்து வட்டமிடுகின்றன. அதன் அழகை ரசிக்கின்றேன். என்னை யாரோ இடித்துக்கொண்டு ஓடுகின்றார். எல்லோரும் தலை தெறிக்க ஓடி ஒளிக்கின்றார்கள். வாகனங்கள் ஆட்கள் இன்றியே ஓடுகின்றன. ஒரே களேபரம். அவை வட்டமிட்டு உயர்ந்து தாழ்ந்து விளையாடுகின்றன. நான் ரசிக்கின்றேன். என்னைக் கட்டடத்திற்கு கீழ்வருமாறு அழைக்கிறார்கள். அதை நான் பொருட்படுத்தவில்லை. தாழப் பறந்த கருடவாகனம் இருவாணங்களைப் புஸ் எனத் தள்ளுகிறது. கீழே விழுந்து பயங்கர ஓசையுடன் வெடிப்பது கேட்கின்றது.

### வாண விளையாட்டு

வாணங்களை ஆகாயத்தை நோக்கித்தான் விடுவார்கள். இது என்ன அதிசயம். ஆகாயத்தில் நின்றும் பூமிக்கு விடுவது எல்லாம் தொடர்ந்து வாணவிளையாட்டுச் செய்தன. ஒவ்வொன்றும் இடிமுழக்கம். மக்கள் வாழும் பகுதியில் வாணவிளையாட்டா. வெளியான பகுதியிலல்லவா வாணவிளையாட்டு நடத்துவது. யாழ்ப்பாண மக்களின் புத்தி இப்படியா போக வேண்டும். அரைமணி நேரத்தில் ஓய்ந்தது. கருட வாகனங்கள் மறைந்தன. தும்பி உருவிலான வாகனம் பறந்து வந்தது. சுற்றிச் சுழன்றது. கோர்வைச் சின வெடி கொளுத்தியது.

'அதுவும் மறைய மக்கள் மறைவிலிருந்து வந்தனர். மனோகரா தியேட்டருக்குக் கிட்டத்தான் அடிச்சிருப்பார்கள். யார் யார் இறந்தினமோ எத்தனை வீடுகள் சேதமோ' என்றனர். 'ஆகாயத்திலிருந்து வாணவிளையாட்டு கீழே விட்டால் என்ன நடக்கும் என்று தெரியாதோ' என்று எனக்குள்ளே சொல்லிக் கொண்டு வவுனியா பஸ்ஸைப் பிடிப்பதற்கு ஆரியகுளம் சந்தியை நோக்கி நடையைக் கட்டினேன்.

பஸ் புறப்படத் தயாரானது. ஓடிப்போய் தொற்றிக் கொண்டேன். தேரில் போன அநுபவம் உண்டு. புதிய வாகனம். பரவாயில்லை. நல்ல வேகம், கோணர் சிற், இரவும் உறக்கமில்லை. குளிர் காற்று கண்ணை இறுக்கியது.

எவ்வளவு நேரம் பள்ளி கொண்டேனோ தெரியவில்லை. யாரோ தட்டி எழும்பினார். பஸ் கொண்டக்ரர் தான். 'ஆனையிறவு தடை முகாம் இறங்கி வரிசையில் போ' எனக்கு ஒன்றும் விளங்கவில்லை. 'ஏன் இறங்க வேண்டும்' 'நீர் என்ன ஊருக்கு புதுசா. இதிலை செக்கிங் இருக்கிறது' கைக்குழந்தையோடு சில தாய்மார் மட்டும் இருந்தனர். இறங்கிப் போனேன்.

தூரத்தில் பைகளைத் திறந்து காட்டினர். என்னிடம் ஏது பை. ஜாலியாக நடந்து போனேன். என்னைக் கெதியாக வரச் சொல்லி சைகை காட்டினர். அவர்கள் முன் சென்றேன். ஆயுதத்தோடு நின்றவர்கள் 'காட்டு' என்றனர். 'என்ன' என்று திருப்பிக் கேட்டேன். 'அடையாளக் காட்டு' இல்லையா?

இவன் என்ன மடையனா. என்னுடைய நிறத்திலே அடையாளம் இருப்பதே தெரியாது. இவனுக்கு எதனைக் காட்டுவது. 'அடையாளம் இல்லை என்றேன். உடனே ஐந்தாறுபேர் கூடிவிட்டார்கள். புதுமையாக இருந்தது. 'பேர் என்ன' என்றான். ஒரு நாமம் ஒருருவம் இல்லார்க்கு, ஆயிரந் திருநாமம் என்றேன்.

அவர்கள் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தது. ஏதோ கருவியில் யாருடனோ கதைத்தார்கள். என்னை வரச் சொன்னார்கள். பலத்த பாதுகாப்பு. இராஜ மரியாதை நடப்பதாக நினைத்தேன். எல்லோரும் அநுதாபத்தோடு பார்த்தனர். எனக்குப் புரியவில்லை.

வழி நெடுகிலும் வாகனங்கள். பார்த்து ரசித்தேன். மேலதிகாரி முன்னே விட்டார்கள். 'பேர் என்ன' வரிசையாகச் சொன்னேன். அவரது முகம் கறுத்தது. உனக்கு 'கொட்டியா' தெரியுமா? இவன் என்ன கேட்கிறான். தமிழில் கொட்டியா என்ற சொல்லே இல்லை. 'தெரியாது' என்றேன்.

'நீ ஒரு புலியா'. இவனுக்கு நாலுகால் மிருகத்திற்கும் மனுசனுக்கும் வித்தியாசம் தெரியவில்லையா. 'நான் புலியில்லை. 'மனுசன்'. பளார் என்று அறைந்தான். எனக்கு அதிர்ச்சி. உண்மையிலே இவன் மூளைக் கோளாறு உள்ளவனோ?

'உனக்குப் புலிகளைத் தெரியுமா?' 'ஓம் நன்றாகத் தெரியும். கரும்புலி, வரிப்புலி, கழுதைப்புலி, சிறுத்தைப் புலி எனப் பல புலி தெரியும்' அவனுக்கு விளங்கவில்லை, எல்லோரும் நொருக்கி விட்டார்கள்.

'எங்களுக்குப் புலிகளைக் காட்டுவியா, நாலு கால் புலி காட்டுக்குப் போனால் சாணலாம்' 'அந்தப் புலியில்லே' யாழ்ப்பாணமில்லே அங்கேதான் 'பொடியன் புலி' தெரியுமா? மூளை குழம்பிவிடும் போல் இருந்தது, 'எனக்குத் தெரியாது'

மேலதிகாரி 'சரியான பைத்தியத்தைக் கொண்டு வந்திருக்கிறாய். காலையில் ஆளை விடு. 'நான் உண்மையைச் சொல்கின்றேன். என்னைப் பைத்தியம் என்கிறார்கள். பூலோகத்தில் உண்மை சொன்னால் பைத்தியமோ. முழு முட்டாள்களாக இருக்கிறார்களே.

நல்ல இரவுச் சாப்பாடு கிடைத்தது. இவர்கள் என்னை விடுவதா? நள்ளிரவில் மறைந்து விட்டேன். ★

- லோகன் -

# ஒருவர் பொறை இருவர் நட்பு; குறள் காட்டும் வாழ்வு அதுவே

பொறுமை கடலிலும் பெரியது. பொறுமை என்னும் நகை அணிந்து பெருமை கொள்ள வேண்டும். பொறுத்தார் அரசாள்வார். ஒருவர் பொறை இருவர் நட்பு. சகித்தாலும் இணங்குதலும் ஜனநாயகத்தின் வெற்றிக்கான வித்துகள். இவை பெற்றோர்களும், மதத் தலைவர்களும், அரசியல் வாதிகளும் மக்களுக்குக் கூறும் உபதேசம். இக் கோட்பாடுகளைப்பின் பற்றினால் வீட்டிலும் நாட்டிலும் அமைதி நிலவும். இம்மையிலும் மறுமையிலும் ஈடேற வழிபிறக்கும். இது பின்பற்றுவதற்கு இலகுவானதாகத் தோன்றுகின்றது.

ஆனால் இவை நடைமுறையில் முழுமையாகப் பின்பற்றப்படுவதில்லை. ஒருவனோ, ஒருத்தியோ வாழ்வில் மகன், சகோதரன், கணவன், மருமகன், மைத்துனன், தந்தை, பேரன் ஆகவும் மகள் சகோதரி, மனைவி, மருமகள், மைத்துனி, தாய், பேத்தி ஆகவும் பல்வேறு காலங்களில் குடும்ப சுற்றுவட்டத்திற்குள் திகழவேண்டியிருக்கின்றது. மேலும் சமூக மட்டத்தில் அயலவராகவும், அதிகாரத்துக்குட்படுவோராகவும் உறவுச் சங்கிலி சுழல்கிறது.

இவ்வாறான மனித உறவு சுற்றுவட்டத்திற்குள் ஒருவன் தன்னிலும் வயது கூடியவருடனும் குறைந்தவயதுடையவருடனும், ஒத்தவயதுடையவருடனும் சேர்ந்துவாழ வேண்டியிருக்கின்றது.

பொறுமை இழப்பிற்குக் காரணிகள் பல. கோபம், அகங்காரம், வறுமை, அறியாமை போன்றவை சில. பொதுவாக மதவிரோத சிந்தனை ஆணிவேர் எனக் கொள்ளலாம். சிந்தனையிலிருந்து செயல் பிறக்கின்றது. மதவிரோத சிந்தனையிலிருந்து மதவிரோத செயல்பிறக்கின்றது.

ஒவ்வொருவரும் காலையில் நித்திரை விட்டு எழுந்தநேரம் தொடக்கம் இரவு நித்திரைக்குப் போகும் நேரம் வரைக்கும் எத்தனையோ முடிவுகளை எடுக்கின்றார்கள்; செயற்படுத்துகின்றார்கள். இவ்வாறு செயற்படுத்தும் முடிவுகளை மத சார்பானவை, மத விரோதமானவை என வகுக்கலாம். எவ்வகையான செயல்கள் மதசார்பானவை எவ்வகையான செயல்கள் மாறானவை என்பதைப் பலன்களிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

வீட்டிலுள்ள உறுப்பினர்களிடையே அமைதி, அன்பு, இன்பம் முதலியன நிலைபெறுமானால் மதசார்பான சிந்தனை, ஜனநாயக சிந்தனை, செயல் மேலோங்கி இருப்பதாகக் கொள்ளலாம். பல வீடுகள் சேர்ந்து நாடு உருவாகுவதனால் நாட்டு அமைதி வீடுகளில் தங்கியுள்ளது.

எனவே வீட்டிலுள்ளவர்கள் தோத்திரங்கள் ஓதுதல், கோவிலுக்குப் போதல், சமய சடங்குகளில் பங்கு பற்றுதல் மட்டும் மதசார்பான வாழ்வாகாது.

'நான் எனது என்னும் கோட்பாட்டிற்குப் பதிலாக நாங்கள், எங்களுடையது' என்னும் கோட்பாடு வாழ்க்கை நெறியாக ஏற்றுவாழ்தல் வேண்டும், அடக்குமுறையின் சாயல் எதிலும் இருக்கக்கூடாது.

> 'நான் எனது என்னும் கோட்பாட்டிற்குப் பதிலாக நாங்கள், எங்களுடையது' என்னும் கோட்பாட்டை நெறியாக ஏற்று வாழ்தல் வேண்டும். அடக்குமுறையின் சாயல் எதிலும் இருக்கக்கூடாது.

இவ்வாறான தன்மைகள் மதசார்பான வாழ்வின் உள்ளடக்கத்தைக் கொண்டுள்ளன, உள்ளடக்கமில்லாத உருவம் நன்மை தராது. அத்துடன் அது தீமையை விளைவிக்கும்.

இன்று எண்ணிக்கையில் கூடுதலான நாட்டுத் தலைவர்களும், மக்களும் மதசார்பான வாழ்க்கை நெறியைப் போற்றுகின்றார்கள். ஆனால் மதசார்பான வாழ்வின் பெறுபேறுகள் அவர்களின் சிந்தனையில், வாழ்வில் உரிய முறையில் பிரதிபலிக்கவில்லை. இதனை உலக நாடுகளின் நிகழ்வுகள் ஒப்புவிக்கின்றன.

அமைதியானவாழ்வை உத்தரவாதப்படுத்துவதில் பெரும்பங்களிப்பு வயதில் கூடியவரையும், அறிவு மட்டம், அனுபவம் கூடியவரையும், அதிகாரம் செலுத்துவோரையும் சாரும். இவர்களின் முன் உதாரணம் ஏனையோரை வழி நடத்தும்.

துறவறம் பூணுவோர் மக்களின் மதிப்பைப் பெறுவர். இவ்வாறான துறவிகளுள் சிலர் ஒழுக்கம் தவறி நடப்பதும் உண்டு. அவ்வாறு தவறு செய்பவர்கள் துறவி வேடம் பூண்டிருப்பதால் மக்கள் ஏமாற்றப்பட்டுத் துன்பமடைகிறார்கள்.

இது காட்டிலே புதர்களுக்குப் பின்னால் வேடுவன் மறைந்து இருந்து பறவைகளை வலைவீசிப் பிடிப்பதற்கு ஒத்தது. எனவே உள்ளடக்கமில்லாத உருவம் அபாயகரமானது என்பது புலனாகின்றது. ★

''தவ மறைந்து அல்லவை செய்தல் புதர் மறைந்து வேட்டுவன் புள்சிமிழ்த் தற்று''

[குறள். 274]

- சி. இராமச்சந்திரா -

## பொன்மாலைப் பொழுது!

அந்த வியாழக்கிழமை யூன் 4<br>
எம்மவர்க்குப் பொன்மாலைப் பொழுது<br>
பாரிய அந்தத் தொண்டு விமானங்கள்<br>
ஒன்றன்பின் ஒன்றாக......<br>
வருவது கண்டு எம்மவர்<br>
குண்டு விமானங்கள் என்றெண்ணி<br>
செய்வதறியாது திகைத்தனர் அல்லோ!<br>
ஓ......தம் உயிர்களைக் காப்பாற்ற...<br>
''ஆ ஓடி ஒளித்தவர்கள் எத்தனை மனிதர்''<br>
இவை குண்டு விமானங்கள் அல்ல,<br>
தொண்டு விமானங்கள் என்றதும்<br>
எனக்கு மட்டுமா? இல்லை இல்லை<br>
ஒடுக்கப்படும் எம்மினத்திற்கே<br>
விடியலை எதிர்பார்க்கும் நெஞ்சகலா<br>
அந்த மாலைப்பொழுது எமக்குப்<br>
பொன்மாலைப் பொழுதல்லோ!

கிருபா சிவானந்தன்

# புகலிடம் தேடித் தமிழகம் நாடுவோர்

## நடுவழி சென்று திரும்பிடும் அவலம்

ஜூன் 8ஆம் திகதி மாலைநேரம்.

கொழும்புத்துறை மணியம் தோட்டக் கடற்கரை. படகொன்று எழுபது பேருடன் கரையிலிருந்து மெல்லமெல்ல நடுக்கடலை நோக்கி நகர்கிறது.

அன்று திரைகடல் ஓடித் திரவியம் தேடிய தமிழர் இன்று புகலிடம் தேடிப் புறப்பட்டனர்.

யாழ்ப்பாணத்தில் தமது வாழ்க்கைப் படகை ஓட்ட முடியாததால் இந்தியாவை நோக்கிப் படகில் பயணமானார்கள் அவர்கள்.

அரசின் இராணுவ நடவடிக்கைகளால் குடாநாடு குறுகிக் கொண்டதால் இந்தியாவிற்குப் பயணமாகினர்.

அவர்களிற் பலர் தமிழ்ப் பிரதேசத்தில் அகதிகளாக அங்கும் இங்கும் அலைகடல் துரும்பாய் அலைக்கழிக்கப்பட்டவர்கள்.

படகிலிருந்தவர்களின் மனதைப்போல் கடலும் கொந்தளித்துக் காணப்படுகிறது.

### முதற் பயணம்

அனைவருக்கும் அதுதான் முதற் கடல் பயணம். வழியில் கடற்படையினர் குறுக்கிட்டால் இதுதான் வாழ்க்கையின் இறுதிப் பயணமாகுமோ என்று பலருக்குப் பயம்.

படகிலிருந்த ஒருவர் அந்தப் பயத்தைப் பக்கத்திலிருந்தவரிடம் கேட்டுக் கொண்டார்.

'ஏன் அண்ணை! வழியிலை நேவிக்காரங்கள் ஏதும் செய்வாங்களே?

மனதில் எழுந்த பயம் அடங்கிக் கொள்கிறது.

ஆனால் கடல் அடங்கிக் கொள்வதாய் இல்லை. கடலின் கொந்தளிப்பில் படகு கவிழும் போல் ஆகிவிடுகிறது.

படகோட்டியோ படகைச் சமாளிக்கப் படகின் நுனி முதல் அடிவரை ஆட்களின்மேல் ஏறி மிதித்தபடி ஓடுகின்றான்.

படகினுள் தண்ணீர் புகுகின்றது. பயணிகள் மனதிலும் பயம் புகுகின்றது.

ஒவ்வொருவரும் தத்தமது தெய்வத்தை வேண்டிக் கொண்டனர்.

ஒருவர் புறுபுறுத்துக் கொண்டார்; 30 பேர் ஏறுகிற படகிலை 70 பேரை ஏத்தினால்... எல்லாம் காசாசை... சீ... அலுத்துக் கொள்கிறார்.

அவரை நோக்கிப் படகோட்டியின் வாயிலிருந்து தூஷண வார்த்தைகள் வருகின்றன. கூடவே சாராய நெடியும் வருகின்றது.

### வாந்தி

குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் வாந்தி எடுக்கின்றனர். பலர் பயத்தில் மயங்கினர். தொடர்ந்து பயணம் போகத் தயங்கினர்; படகோட்டிகளோ தொடர்ந்து இயங்கினர்.

### மேலதிகப் பயணிகள்

அளவிற்கு மிஞ்சி ஆட்களை ஏற்றியதால் வள்ளம் பதிந்து, ஒரு பள்ளம் போல் கடல் தண்ணீரை வாங்கிக் கொள்கிறது. படகைத் திருப்பும்படி பலரும் கேட்டுக் கொள்கின்றனர். படகோட்டிகளின் தூஷண வார்த்தைகளுடன் படகு கரைக்குத் திரும்புகின்றது. 'நாளை மீண்டும் பயணம் தொடங்கும் எல்லோரும் வாங்கோ' படகோட்டி பயணிகளிடம் சொல்லி அனுப்புகின்றார்.

### ஏமாற்றம்

அகதிகள் பொதிச் சுமைகளுடனும் மனச் சுமைகளுடனும் வீடுகளுக்குத் திரும்புகின்றனர்.

மறுநாள், அதற்கு மறுநாள் என்று தினமும் கடற்கரைக்கு வந்து பார்த்தனர்.

அவர்களுக்காய் படகு எதுவும் காத்திருக்கவில்லை. மாறாக ஏமாற்றமே காத்திருந்தது.

அவர்களிடம் ஆளுக்கு ஆயிரத்து ஐந்நூறு ரூபா வாங்கியவரோ கம்பி நீட்டிவிட்டார். அவர் இப்போது வேலணைத் துறையில் ஆட்களை ஏற்றுவதாக அறிய வருகிறது. அவரிடம் கடைசிக் காசையாவது வாங்கலாம் என்று அவரைத் தேடிப் போகிறேன்.

—இவ்வாறு தமது அனுபவத்தைக் கூறினார் ஒரு நல்லூர் சங்கிலியன் முகாம் அகதி.

வேலணையில் பல தமிழ் மக்கள் இந்தியா செல்வதற்காகச் சென்று ஏமாற்றப்பட்டு அலைக் [illegible] அகதிகள் இங்கு இருப்பதாக அறிந்தேன். அவர்களை வேலணைத் துறையில் சந்திக்கச் சென்றபோதே வழியில் மினிபஸ்ஸில் என் கூட வந்த அந்த அகதி அன்பர் தமது இந்தியாப் பயணக் கதையைக் கூறினார்.

### வேலணை அனுபவம்

வேலணைக்குச் சென்றதும் வேதனையின் விளிம்பிற்கே சென்றேன்.

அங்கே இந்தியா செல்வதற்காக தங்கி நின்ற பலரின் கதைகள் என்னைக் கலங்க வைத்தன.

வேலணைத் துறையிலுள்ள பாடசாலைக் கட்டடம், மண்டபம், மரநிழல் என்று பல இடங்களில் அகதிகள் ஆங்காங்கே தங்கியிருந்தனர்.

அவர்களில் ஒரு குடும்பம் திருபலையிலிருந்து அகதியாகி அச்சுவேலியில் தங்கியிருந்தவர்கள்.

தந்தையை இழந்த அந்தக் குடும்பத்து மூத்தமகன் ஐஸ்பழ வியாபாரம் செய்பவர்.

அச்சுவேலியில் நடைபெற்ற அசம்பாவிதங்களைத் தொடர்ந்து [illegible] ஐஸ்பழப் பெட்டியையும் சைக்கிளையும் விற்றுப் படகிற்குப் பணம் கட்டியிருந்தார்.

அவர் பணம் கட்டிய படகுக்காரர் அவரை எட்டு நாட்களாக ஏமாற்றித் திரிகிறார்.

அடுத்த நேர உணவுக்குக்கூட அவதிப்படும் நிலையில் இந்திய மண்டப முகாமை மனதில் நினைத்தபடி ஒரு மர நிழலில் அவரது குடும்பம் சோர்ந்துபடுத்திருந்தது.

இவ்வாறு இவர்களைப் போல் ஏமாற்றப்பட்டவர்கள் பலர். பலர் தமது வெக்கக்கேட்டை வெளியே சொல்ல முடியாத நிலையில் உள்ளே புழுங்கிப் போய்க் கிடந்தனர்.

### படகு வெடித்தது

இன்னொரு வேலணைவாசி. வீட்டில் ஓர் அகதிக் குடும்பம் ஏமாற்றப்பட்டு தங்கியிருந்தது. அவர்களின் கதை அதிசோகமானது. அவர்களை ஏற்றிச் சென்ற படகு நெடுந்தீவில் அவர்களை ஏமாற்றி இறக்கி விட்டுச் சென்று விட்டது.

நெடுந்தீவுக்கும் இந்தியாவிற்கும் வேறுபாடு தெரியாததால் ஏற்பட்ட நிலை. பாடசாலை ஒன்றில் தங்கியிருந்த ஒரு குடும்பத்தினரைச் சந்தித்தேன். ''நாங்கள் சென்ற படகு வெடித்து உள்ளே தண்ணீர் புகுந்ததால் படகை அண்மையிலுள்ள கரையம்பிட்டி தீவில் நிறுத்தி விட்டனர்.

அதில் சென்றவர்களை தீவில் இறக்கிவிட்டு ஒரு சிலருடன் படகு திரும்பி விட்டது.

### எண் சோதிடம்

இன்று 8ஆம் திகதி நாள் கூடாது என்று சொல்லி தீவில் இருந்தவர்களை அப்படியே இருக்கவிட்டு வந்துவிட்டனர்.

அவர்களை நாளை படகில் சென்று அழைத்துப் போவதாகக் கூறியுள்ளனர்.'' என்றார்.

ஒரு படகுச் சொந்தக்காரரை சந்தித்தபோது அவர் கூறியதாவது:-

முன்னர் வெளிநாட்டு முகவர்கள் எமது இளைஞர்களை ஏமாற்றியது போல் பல பாவிகள் தமிழ் மக்களை ஏமாற்றிப் பணம் பறிக்கின்றனர். பண ஆசையில் 30 பேர் ஏற்றும் படகில் 70பேரை ஏற்றி வழியில் மூழ்கடிக்கின்றனர்.

### மது போதை

படகோட்டி ஒருவரைச் சந்தித்த போது அவர் கூறியதாவது-

நான் 12 வயதிலேயே சுக்கான் பிடித்தவன்.

5 முறை கடலில் நீர் இவந்துள்ளேன். 4 தடவை [illegible] வாங்கியுள்ளேன்.

படகில் ஏறும்போது ஒரு போதும் படகோட்டிகள் குடித்திருக்கக் கூடாது.

ஆனால் இன்று இந்தியாவுக்கு அகதிகளை ஏற்றிச் செல்வது ஒரு 'பிஸ்னஸ்' ஆகிவிட்டது.

மினிபஸ்ஸில் இன்று நடத்துனராக இருப்பவர் நாளை சாரதியாவதைப்போல், படகைக் கண்டவன் எல்லாம் படகோட்டியாகி விட்டனர்.

அண்மையில் மண்டைதீவில் இருந்து புறப்பட்டுச்சென்ற படகை ஓட்டியவர் குடிபோதையில் இருந்தார்.

### கடற்படையுடன் மோதல்

மது வெறியில் அவர் தமது படகைக் கடற்படையினரின் ரோந்துக் கப்பலுடன் மோதிவிட்டார்.

படகோட்டி கடலில் பாய்ந்து தப்பிக் கொண்டார்.

ஆனால் படகிலிருந்த 7 ஆண்கள் படையினரிடம் பிடிபட்டுக் கொல்லப்பட்டனர். பெண்களை படையினர் எச்சரித்து அனுப்பினர்.

இது உயிருக்கு அஞ்சி அகதிகளாகச் செல்வோரின் பயணம். இவர்களின் உயிர் போனால்...?

இவ்வாறு கேள்விக்குறியுடன் கதையைக் கூறி முடித்தார் அந்தப் பட

- ரட்ணு

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இந்திய ஜனாதிபதித் தேர்தல் களத்தில்
# வெங்கட்ராமனுக்கு உள்ள வாய்ப்பு

இந்திய ஜனாதிபதி இந்திய தேசியத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்துபவர்.

அவர் சர்ச்சைக்கு அப்பாற்பட்டவராக இருந்து அந்த உயர் பதவிக்கு உரிய மதிப்பையும் கௌரவத்தையும் மக்களிடம் இருந்து பெற வேண்டியவர்.

இருப்பினும் ஜனாதிபதி - பிரதமர் பதவி வழி அதிகாரங்கள் தொடர்பாக ஷெயில் சிங், ராஜீவ் இடையே தோன்றிய கருத்து வேறுபாடுகள் ஊர்வாய்-GOSSIP-ஆகப் போய்விட்டன.

இதன் காரணமாக இந்தியாவின் எட்டாவது ஜனாதிபதி தேர்தல் மிகவும் பிரபல்யம் பெற்றுள்ளது.

இந்தப் பின்னணியில் பிரதமர் ராஜீவ் 77 வயதுடைய வெங்கட்ராமனைத் தமது கட்சி வேட்பாளராக அறிவித்துள்ளார்.

### காந்தியவாதி

காந்தியப் பாரம்பரியம் பல மூத்த தலைவர்களின் மறைவினால் அழிந்து போகிறது என்ற அச்சம் தலைதூக்கி உள்ள காலப் பின்னணியில் காந்தீயத்தில் ஊறிப் போய்ச் சுதந்திரப் போராட்டக் காலத்தில் சிறை சென்ற விடுதலை வீரரான இவர் வேட்பாளராகி உள்ளார்.

உபஜனாதிபதியாக இருந்து ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படும் பேறு இந்திய வரலாற்றில் மூவருக்குக் கிட்டியது. டாக்டர் இராதாகிருஷ்ணன், டாக்டர் ஸகிர் ஹுசைன், வி.வி. கிரி ஆகியோரே அம்மூவராகும். உபஜனாதிபதியாக இருக்கும் வெங்கட்ராமனும் ஜனாதிபதி ஆகும்போது ஓர் அனுபவஸ்தராக இருப்பார்.

### பாதுகாப்பு அனுபவம்

இந்திய உபகண்டத்தைச் சுற்றிப் பல்வேறு வகைகளில் அச்சுறுத்தல் தோன்றியுள்ள ஒரு கால கட்டத்தில் முன்னர் பாதுகாப்பு அமைச்சராக இருந்து பாதுகாப்பு விடயங்களை நன்றாகத் தெரிந்தவர் இப்பதவிக்கு முன்மொழியப்பட்டுள்ளார்.

இந்திய ராஜ்யசபைத் தலைவரான இவர் அதன் அமர்வுகளில் சர்ச்சைகள் தோன்றிச் சூடுபிடித்தால் அமளிகள் ஏற்படாதவாறு செயற்பட்டுள்ளார்.

புகைப் படப்பிடிப்பு, இசை ஆகிய கலைத்துறைகளில் ஈடுபாடு கொண்ட இவர் இப்பதவியை ஏற்றால் இந்தியஅரசியல்நடப்பியலில் வீண் சூடுபிடித்து அமளி ஏற்படாது காப்பார் என்று நம்பப்படுகிறது.

### தொழிற்சங்கவாதி

வெங்கட்ராமன் தனது ஐம்பதாண்டு கால அரசியல் பொது வாழ்வில் நீண்டகாலம் ஒரு தொழிற்சங்கவாதியாகத் திகழ்ந்தவர்.

முன்னர் ஒரு முறை தொழிற் சங்கவாதியான வி. வி. கிரி ஜனாதிபதி ஆனதும் தொழிலாளர் நலனுக்குக் குந்தகமான ஒரு சட்டம் கொண்டு வரப்பட்ட போது கொதித்து எழுந்தார்.

இந்த வகையில், வெங்கட்ராமன் தெரிவானால் தமது மேம்பாடு பேணப்படும் என்று இந்திய தொழிலாளர் வர்க்கம் நம்பிக்கை கொண்டுள்ளது.

### ஒருமைப்பாடு உணர்வு

இந்தியாவின் மதசார்பற்ற ஜனநாயகப்பண்புகளுக்கு ஏற்பப் பல்வேறு இனங்கள், மொழி பேசுபவர்கள், வடக்குத் தெற்கு என்ற வேறுபாடின்றி ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள் என்பது வரலாறு. இந்த வழியிலே இவர் பெயர் முன்வைக்கப்பட்டுள்ளது. இந்திய தேசிய ஒருமைப்பாடு இதனால் மேலும் உறுதி அடையும்.

வெங்கட்ராமன் நாடறிந்த நல்ல வழக்கறிஞர். மலேயா சிங்கப்பூர் நாடுகளில் ஜப்பானிய ஆக்கிரமிப்பின்போது அவர்களுடன் ஒத்துழைப்பு நல்கிய மைக்காசப் பல இந்தியர்களுக்கு எதிராக வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டபோது இந்திய அரசினால் நியமிக்கப்பட்ட வழக்கறிஞர் குழுவில் இடம் பெற்றவர்.

ஜனாதிபதி - பிரதமர் அதிகாரம் தொடர்பாகச் சட்டரீதியில் சரியான பார்வை வழக்கறிஞரான இவருக்கு உண்டு என்பதும் எதிர்பார்ப்பாகும்.

### ஆளுமை பலம்

இந்தியாவிடம் எத்தகைய பலம் இருப்பினும் ஒரு வல்லரசு போன்ற சக்தி இருப்பினும், இந்திராகாந்தியின் மறைவின் பின்பு அதன் ஆளுமை பலம் குன்றிவிட்டதோ என்று அரசியல் அவதானிகள் அஞ்சுகின்ற பின்னணியில்,

1953, 55, 58,61 ஆம் ஆண்டுகளில் ஐக்கிய நாடுகள் பொதுச்சபைக் கூட்டங்களில் பங்கு பெற்றும்—

அதன் அமைப்புக்களில் அங்கத்தவராகச் செயற்பட்டும்,

பலநாடுகளுக்கு இந்திய உபஜனாதிபதி என்ற தோரணையில் விஜயஞ் செய்தும் சர்வதேச நல்லுறவையும் செல்வாக்கையும் பெற்றவர் வெங்கட்ராமன். இதனால் இப்பதவியை அலங்கரிக்கும்போது நாட்டின் ஆளுமைப்பலம் அதிகரிக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

- வே. வரதசுந்தரம் -

### தமிழரின் மகிழ்ச்சி

இவை எல்லாவற்றுக்கும் மேலாக இலங்கையின் இனப்பிரச்சினை காரணமாக அல்லலுறும் ஈழத்தமிழ் மக்களுக்கும், இது காரணமாக பதற்றமடைந்துள்ள தமிழக மக்களுக்கும் மட்டுமன்றி உலகம் தழுவிய தமிழர்கள் யாவருக்கும் இவர் ஜனாதிபதியாகப் போட்டியிடுவது மனவுறுதியை, நம்பிக்கையை தரும் இனிய செய்தியாகும்.

இந்தக் கோணத்தில் அடுத்தமாதம் 13 இல் நடைபெறும் இந்திய ஜனாதிபதித் தேர்தலை நோக்குமிடத்து ராஜீவின் தலைமைத்துவப் பண்பினை, ''ஸ்டேட்ஸ் மன்ஷிப்பை''— Statesmanship-நாம் பாராட்ட வேண்டும்.

### வாக்குப் பெறுமானம்

இந்திய ஜனாதிபதித் தேர்தல்முறை, அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் முறையிலிருந்து முற்றிலும் வேறுபட்டது.

இந்திய ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் நேரடியாகப் பங்குபெறுவிடினும், தேர்தல் குழு மக்கள், வாக்குகள், வாக்குப் பெறுமானம் என்ற ஏற்பாடுகள்மூலம் மக்கள் பங்குபெறல் நிர்ணயிக்கப்படுவதை இந்திய அரசியல் சட்டத்தில் நாம் காண்கிறோம்.

இந்திய நாடாளுமன்றத்தின் இருசபைகளிலும் உள்ள தெரிவுசெய்யப்பட்ட அங்கத்தவர்கள்— 24 மாநில அரசுகளின் சட்டசபைகளது தெரிவு செய்யப்பட்ட அங்கத்தவர்கள் — ஆகியோரினால் ஜனாதிபதி தெரிவு செய்யப்படுகிறார்.

ஆனால் இச்சபைகளின் நியமன அங்கத்தவர்கள், யூனியன் பிரதேச சட்டசபை உறுப்பினர்கள் ஆகியோர் இத்தேர்தலில் வாக்களிக்க முடியாது.



வெங்கட்ராமன்

மாநில அரச சட்ட சபை உறுப்பினர்களின் வாக்குப்பெறுமானத்தை நிர்ணயிக்க மாநில சனத்தொகையை தெரிவு செய்யப்பட்ட சட்டசபை உறுப்பினர்களின் எண்ணிக்கையாலும் ஆயிரத்தினாலும் பிரிக்கின்றார்கள். பின்னர் 500க்குக் குறைவாக எஞ்சியிருப்பின் ஒருவரின் வாக்கு மேலும் ஒன்றாக அதிகரிக்கும்.

அதே வேளை இரு சபைகளையும் சேர்ந்த தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களின் வாக்குப்பெறுமானம் பின்வருமாறு கணிக்கப்படுகிறது.

எல்லா மாநில சட்டசபைகளின் உறுப்பினர்களுக்கும் ஒதுக்கப்பட்டுள்ள வாக்குகளை, இருசபைகளின் பிரதிநிதிகளின் மொத்த எண்ணிக்கையினால் வகுத்து வாக்குப் பெறுமானத்தைத் தீர்மானிக்கிறார்கள்.

மாநில அரச சட்டசபைகளில் ஆளுங்காங்கிரஸ் கட்சிக்கும் அதன் நேச அணிகளுக்குமாக 307,215 வாக்குப் பெறுமானம்.

அதேவேளை எதிர்க்கட்சிகளுக்கு 234, 800 வாக்குப் பெறுமானம் உண்டு.

லோக்சபா, இராஜ்ய சபா ஆகிய இரு சபைகளிலும் ஆளும் காங்ரஸ் — நேச அணிகளுக்கு 417,582 வாக்குப் பெறுமானம் உண்டு. ஆனால் எதிர்க்கட்சி அணிகளுக்கு 126,540 வாக்குப் பெறுமானம் மட்டுமே உண்டு.

வெங்கட்ராமனின் பெயரை முன்வைக்க முன்னர் ராஜீவ் காந்தி எதிர்க்கட்சிகளுடன் இணக்கம் காண ஆலோசனை நடத்தினார்.

எது எப்படி இருப்பினும் வாக்குப் பெறுமானப் பின்னணியை அவதானிக்கும்போது வெங்கட்ராமன் வெற்றி பெறும் வாய்ப்பு நிறைய உண்டு எனலாம். ★

# சிகரட் துண்டுக்குப் பலியான அமைச்சர்

191 பேர் உயிரிழந்தனர். 221 பேர் படுகாயமடைந்தனர்.

10 ஆயிரத்து 807 குடும்பங்கள் பாதிக்கப்பட்டன. 56 ஆயிரத்து 92 பேர் வீடிழந்தனர்.

431 ட்ரக்குகள், டிராக்டர்கள், 6 லட்சத்து 40 ஆயிரம் சதுர மீட்டர் பிரதேசம் நாசமாகின.

சிகரெட்டினால் ஏற்பட்ட அனர்த்தங்கள் இவை.

அப்படியா என்று ஆச்சரியப்படாதீர்கள்.

நடந்த சம்பவம் இதுதான்.

உலகில் அதிக சனத்தொகை கொண்ட நாடு சீனா. சுமார் நூறு கோடிக்கு மேல் மக்கள் வாழ்கின்றனர்.

அங்கு வடகிழக்கில் டா ஷிங்லங்கிங் மலைப் பிரதேசம் அமைந்துள்ளது. வடஹீலோன் ஜியாங் மாகாணத்தினுள் இது வருகின்றது.

செழிப்பான காடுகளைக் கொண்ட மாகாணம் அது. காடுகளைப் பராமரிக்கத் தனி அமைச்சின் கீழ் பலர் பணியாற்றுகின்றனர்.

அவர்களில் சிலர் சிகரெட் புகைப்பவர்கள். புகைத்துவிட்டு அணைக்க மறந்து சிகரெட் துண்டுகளை காட்டுக்குள் போட்டு விட்டார்கள்.

> தீ பரவட்டும்— இப்படிக் கூறாமல் தான் சிலர் சிகரெட் துண்டுகளை வீசுகின்றனர்.
>
> ஆனால் அது பெரும் காட்டுத் தீயாக மாறிப் பேரழிவை ஏற்படுத்துகின்றது.

அவ்வளவுதான். கடந்த மே மாதம் 6 ஆம் திகதி, ஐந்து இடங்களில் தீப்பற்றியது. பின்னர் காட்டுத்தீயாக மாறியது.

அந்தக் காட்டுத் தீ 2 லட்சத்து 20 ஆயிரம் சதுர கிலோ மீட்டர் பிரதேசத்தையே சாம்பராக்கியது.

அப்போது ஏற்பட்ட அழிவுகள் தான் மேலே கூறப்பட்டவை.

தீயை அணைக்க 42 ஆயிரம் படைவீரர்கள் போராடினர்.

தீயணைப்புக் கருவிகள் 3 ஆயிரத்து 600 ஹெலிக்கொப்டர்கள் மூலம் கொண்டு போய் இறக்கப்பட்டுப் பயன்படுத்தப்பட்டன.

ஆகாயக் கண்காணிப்புடன் செய்மதி மூலம் எடுக்கப்பட்ட படங்களின் துணையும் தீயணைப்புக்கு பயன்படுத்தப்பட்டது.

செயற்கை மழையும் பொழிய வைக்கப்பட்டது.

தீயணைப்புப் போராட்டத்தை நடத்த மே 10 இல் விசேட கமிட்டி ஒன்று நியமிக்கப்பட்டது. மோஹே என்ற பட்டினத்தில் 11 கட்டடங்களைத் தவிர ஏனையவை தீக்கு இரையாகின.

இப்பதினொரு கட்டடங்களில் ஒன்று வெடிமருந்துகள் சேமித்து வைத்த கட்டடம். மற்றது எண்ணெய்க்குதம்.

இந்த இரண்டு கட்டடங்களும் மேலும் தண்ணீரில் தோய்த்து எடுக்கப்பட்ட பஞ்சு மெத்தைகளினால் மூடப்பட்டன. அதற்கு மேல் படைவீரர்கள் படுத்து இருந்தனர். அவர்களின் உடல்கள் தண்ணீரினால் குளிப்பாட்டியபடியே இருந்தன.

அப்படி இருந்தபடி பரவிவரும் தீச்சுவாலையை அணைத்தனர்.

இப்படித்தான் அந்த இரண்டு கட்டடங்களும் காப்பாற்றப்பட்டன.

மோஹேயில் பணியாற்றிய அரசு ஊழியர்கள், அலுவலகங்களில் இருந்த தஸ்தாவேஜுகளைக் காப்பாற்றுவதில் ஈடுபட்டிருந்தனரே ஒழிய சொந்த வீடுவாசல்களைக் காப்பாற்றவில்லை.

பின்னர் தீ தாஹே பட்டினத்தை நோக்கி நகரத்தொடங்கியது.

இந்த நூற்றாண்டிலேயே சீனாவை அதிரச் செய்த இந்தக் காட்டுத் தீ, இறுதியாக மே,30ஆம் திகதியளவில் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

இப்பேரழிவுக்குக் காலான சிகரெட் அடித்துண்டுகளை காட்டுக்குள் வீசிய ஐந்து காடு வளர்ப்பு ஊழியர்கள் கைது செய்யப்பட்டனர்.

சிகரெட்டைச் சரிவர அணைக்காமல் வீசியது— இப்படி அவர்கள்மீது சுமத்தப்பட்ட குற்றப் பத்திரிகை கூறுகின்றது.

- தீன்ராஜா -

எல்லாவற்றுக்கும் மேலாக காடுவளர்ப்பு, பராமரிப்பு அமைச்சர் பதவி இழந்தார்.

இந்த காட்டுத்தீயைச் சீன அரசு பெரிய விஷயமாகக் கருதி, அமைச்சரை பதவியிலிருந்து விலக்கியது.

சிகரெட் துண்டுக்கு பலியான அமைச்சர் என்றும் அவரைக் கூறலாம் அல்லவா! ★

# கலியுகமா இல்லை கிலியுகமா?

சரித்திர காலத்தில் இடம்பெற்ற போராட்டங்களை சிந்தித்துப் பார்க்கும்போது எமது உள்ளத்தில் வியப்புதான் ஏற்படுகின்றது.

போராடப் புறப்பட்ட சைனிய முதல்வருக்கு பிறப்பிக்கப்பட்ட கட்டளைகளைப் பார்க்கும் போது யுத்தத்திலும் தர்மம் கடைப்பிடிக்கப்பட்டிருக்கின்றது என்பதை நாம் மறந்துவிட முடியாது.

போர்ப்படைகள் ஓரிடத்தை முற்றுகையிடும் பொழுது:

கனிதரும் மரங்கள், நீர், வழங்கும் சுனைகள், வணக்கத்துக்குரிய ஸ்தலங்கள், இளைப்பாறும் மடங்கள், மருத்துவ சாலைகள், கல்விகற்கும் கூடங்கள், இவைகளுடன் வயோதிபர்கள், கர்ப்பஸ்திரீகள், குழந்தைகள், ஊனமுற்றோர்கள் இளையதலைமுறையினர் தவிர்க்கப்படவேண்டுமென்பது யுத்த சாஸ்திரம்.

இவ்வழியினைப் பின்பற்றியே போரிட்டான் அசோக சக்கரவர்த்தி. சாம்ராஜ்ய வெறி பிடித்தவன் என குற்றமும் சாட்டப்பட்ட அசோகன் போரிட்ட

- யோகரிஷி -

போர்த்திடலை நேரில் பார்த்தபோது அவன் மனம் மாறிய பெருமை பௌத்த துறவிக்கே சாரும்.

பொம்மர்களும், ஹெலியும், சீப்ளேனும், அவ்ரோ பிளேனும் இன்றி போராடிய அசோக சக்கரவர்த்தியின் கண்களுக்கு இரத்த வெள்ளமும், வேல் காயங்களும் விகாரமாகத் தென்பட்டன.

அந்த விரக்தியான மனநிலைக்கு—

அன்புதான் உலக ஊற்று.

அன்புதான் உலக ஜோதி.

அன்புதான் உலகமகா சக்தி.

—என்ற பௌத்த தாரக மந்திரத்தினை பௌத்த துறவி தேனாக ஊற்ற அரசனின் மனம் மாறி தானும் பௌத்தனாக மாறினான்.

பௌத்தன், அல்லாத ஒரு சாம்ராஜ்ய சக்கரவர்த்திக்கே கொல்லாமைதான் உலகில் தலைசிறந்தது என்ற ஞானக்கண் திறந்தது.

ஆனால் எங்கள் பௌத்த நாட்டிலோ...? ★

### நீரின் மேல் படகு

நீரில் படகு தங்குகிறது. ஆனால் படகுக்குள் தண்ணீர் புகும்படி விடக்கூடாது. புகவிட்டால் ஓடம் முழுகிப் போகும். அப்படியே தான் உலக வாழ்க்கையில் இருக்கும் பக்தர்களின் நிலையும். உலக வாழ்க்கைக்கு வேண்டிய காரியங்களைச் செய்து கொண்டிருக்கலாம். ஆனால் உள்ளத்துக்குள் உலகத்தைப் பாயவிடக் கூடாது. விட்டால் படகு கவிழ்ந்து போகும்.

—சுவாமி இராம கிருஷ்ணர்.

# தேசியப் பார்வையே...

(3-ஆம் பக்க தொடர்ச்சி) செயல் பாராட்டுக்குரியது.

1987.04.21ல் புறக்கோட்டையில் வெடித்த குண்டு உடனடியாக 104 பேரைப் பலி கொண்டது.

புலனாய்வுத் துறையினர் கொலையாளிகளைக் கண்டுபிடிக்க முன்பே, இப்படுகொலைக்குத் தமிழீழ விடுதலைப் புலிகளும் ஈரோஸ் இயக்கமுமே பொறுப்பென அரசின் பொறுப்பு வாய்ந்த அமைச்சர் அறிவித்தார். பத்தேகம நாடாளுமன்ற உறுப்பினர் அமரசிறி, படுகொலைகளின் பின்னணியில் இஸ்ரேலின் கரம் உண்டு எனக் கூறினார்.

இச்சம்பவத்தில் இறந்தவர்களின் மரணச் சடங்குகளைச் செய்ய அரசு நிதியுதவி அளித்தது; அமெரிக்க அரசாங்கம் மனிதாபிமான அடிப்படையில் பணங் கொடுத்தது. இச்செயல்களைப் பாராட்டுகிறோம்.

### தமிழ்ப் பிரதேச வன்செயல்

தங்கவேலாயுதபுரத்தில் 60பேரும், மண்டைதீவில் 34 மீனவர்களும். கிளிநொச்சிப் புகையிரத நிலையத்தில் சித்தசுவாதீனமற்ற இராணுவ வீரனால் 11 பிரயாணிகளும், மூதூரில் 67 பேரும் நெடுங்கேணியில் 15 பஸ் பிரயாணிகளும், கொக்கட்டிச்சோலையில் செரண்டிப் கடலுணவுத் தொழிற்சாலையில் வேலை செய்த 23பேரும், கோட்டை வங்கிக்கு ஓய்வூதியம் பெறச்சென்ற 3 முதியவர்களும், வதிரியில் இராணுவத்தினரின் அறிவித்தலுக்கமைவாகி ஆலயத்திற் சரணடைந்த 17 பேரும், குமுதினிப் படகில் வந்த பயணிகளும்,... இன்னும் எத்தனையோ தமிழர் கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். சின்னஞ்சிறு குழந்தைகளிலிருந்து குடுகுடு கிழவர்வரை வெவ்வேறு வயதினரான இவர்கள் அனைவரும் பயங்கரவாதிகள்!

1983.03.30 யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை தாக்கப்பட்டது, 8 நோயாளிகளும் 1 வைத்தியசாலை ஊழியரும் இறந்தனர். இவர்களின் கொலைக்கு இராணுவமே பொறுப்பு என யாழ்ப்பாண நீதிபதி தீர்ப்பளித்தார். அரசு, பயங்கரவாதிகள் கோட்டை முகாமை நோக்கி ஏவிய குண்டுகளால் வைத்தியசாலை தாக்கப்பட்டு உயிரிழப்பு நிகழ்ந்தது எனக் கூறுகிறது. வைத்திய நிலையங்களைத் தாக்குவதும் நோயாளிகளைக் கொலை செய்வதும் உலகில் எந்த நாட்டிலும் இடம்பெறாத காட்டுமிராண்டித்தனம். இக்காட்டுமிராண்டித்தனத்துக்கு யார் பொறுப்பாகவிருந்தாலும். இது காரணமாக இறந்தவர்களுக்காக மாண்புமிகு அதி உத்தமர், சம்பிரதாயத்துக்காகவாவது; அனுதாபத்தையாவது தெரிவிக்கவில்லை. அவர்களின் மரணச்சடங்குக்காக ஒரு சதத்தைதக் கூடக் கொடுக்கவில்லை.

1987.06.02ல் அம்பாறை மாவட்டத்தில் அரந்தலாவ என்னும் இடத்தில் புத்தகுருமார் கொலை செய்யப்பட்ட அநாகரிகச் சம்பவம் நிகழ்ந்தது. இப்புத்த குருமாருக்கு மரியாதை செலுத்துமுகமாக ஒரு நாள் (1987. 06. 05) தேசிய துக்கதினமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

செல்வச் சந்நிதியில் ஆலயப் பூசகரும், வண்ணை வைத்தீஸ்வரன் கோயில் தர்மகர்த்தாவும் கொலைசெய்யப்பட்டனர். தோலகட்டியில் கிறிஸ்தவ மதகுரு கொல்லப்பட்டார். மன்னாரில் கத்தோலிக்க மதகுரு மேரி வஸ்ரியான் கொல்லப்பட்டு அவருடைய பூதவுடலும் எடுத்துச் செல்லப்பட்டது. நல்லை ஆதீன முதல்வர், குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் ஹெலிக்கொப்டர் தாக்குதல் காரணமாகக் காயமடைந்தார். இச்சம்பவங்களுக்காக அரசோ தர்மிஷ்ட ஜனாதிபதியோ உலகை ஏமாற்றுவதற்காகவாவது வருத்தந் தெரிவிக்கவில்லை. காரணம் இவர்கள் அனைவருந் தமிழர்.

மேலே கூறப்பட்ட நிகழ்ச்சிகள், மாண்புமிகு அதியுத்தமர், தர் [illegible] அவரது அரசும், சிங்கள [illegible] லர்களாகவும், தமிழினத்தை ஒழிப்பவர்களாகவும் செயற்படுவதை ஐயத்துக்கிடமின்றி எடுத்துக்காட்டுகின்றன

### ஒரு வேண்டுகோள்

இச்சந்தர்ப்பத்தில் தேசிய ஐக்கியத்துக்கான பிரசைகள் குழுவுக்கு மிகுந்த மரியாதையுடன் கூறக்கூடியதுஒன்றுண்டு. தன்னைச்சேர்ந்தவர்களின் நலத்துக்காகத் தன்னை வெட்டுபவனுடன் கொலையை எதிர்நோக்கும்ஆடு பேச்சுவார்த்தை நடத்திப் பிரயோசனமில்லை. தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டவனும் அவனைத் தூக்கிலிடும் அலுகோசும்-தூக்குத் தண்டனையை நிறைவேற்றுவோன் - பேச்சுவார்த்தை நடத்திப் பிரயோசனமில்லை. அதுபோலவே தானே உருவாக்கிய அரசியலமைப்பு, தமக்களிக்கும் அதிகாரத்துக்குக்கமைவாக யுத்தப் பிரகடனஞ் செய்திருக்கும் ஜனாதிபதியோடு, அழிக்கப்படுந் தமிழினம் பேச்சுவார்த்தை நடத்திப்பிரயோசனமில்லை. மாண்புமிகு ஜனாதிபதி அவர்கள் செய்துள்ள யுத்தப்பிரகடனத்தைத் திரும்பப் பெறுவிப்பதும், சிங்கள மக்களின் ஜனாதிபதி என்னும் நிலையிலிருந்து விலகி, இலங்கையின் ஜனாதிபதியாக அவரை இயங்கச் செய்வதும் உங்கள் தலையாய கடனாகும்.

அதன்பின்பு பிரச்சினை [illegible] த் தீர்க்கலாம். ★

### மருத்துவம்---

(4ஆம் பக்க தொடர்ச்சி) மையெல்லாம் பேசிமுடியாது.''

சென்னையடைந்த சில நாட்களில் சீதா மகாலட்சுமி ஒரு கனவு கண்டாள். ஒரு பெண் தன்னை மலைகள் நிறைந்த இடத்திற்கு அழைத்துச் சென்றதாகவும், அங்கு தெய்வீகக்களை வீசும் இளம் வாலிபரை தான் கண்டதாகவும் அந்தக் கனவு அமைந்திருந்தது. கனவுகண்ட மறுநாள் தன் சிநேகிதி ஸ்ரீமதி அனுமந்தராவ் இல்லத்திற்கு தன் மகனுடன் சென்றபொழுது, மாடிப்படியில் அதே தெய்வீக இளைஞனை நேரில் சந்திக்க நேர்ந்தது.

இந்த இளைஞன் வேறு யாருமல்ல, சாட்சாத் ஸ்ரீ சத்திய சாயி பாபாவே. அப்பொழுது அவருக்கு வயது இருபது.

மகா சீதா இலட்சுமியைப் பார்த்து பாபா ''நேற்று இரவு கனவில் ஒருமுறைஎன்னைப்பார்த்தாயல்லவா!'' என்று கூறித் தாய்க்கும் மகனுக்கும் பிரசாதம் வழங்கினார். தாய் அன்று கட்டுக்கடங்காத பரவசம் அடைந்தாள். இதுதான் இவர்களின் முதல் சந்திப்பு. ★

# நாட்டின் விடுதலை---

(4 ம்பக்கத் தொடர்ச்சி) பலர் மாண்டனர். ஆர்க்குடன் எஞ்சிய வீரர்கள் நான்கைந்து பேர்தான். ஆனாலும் ஆர்க் மனம் தளரவில்லை. உள்ளம் தளராது ஊக்கம் குன்றாது கடுமையாகப் போர் செய்து மௌஸ் டீரில் பிரெஞ்சுக் கொடியைப் பறக்கவிட்டாள். அந்த நகரைக் கொள்ளையிட பிரெஞ்சு வீரர் ஆர்க்கிடம் உத்தரவு கேட்டனர். ''இந்நகரத்துக் குடிகள் எம்பகைவர்களல்லர். அவர்களது பொருளைக் கொள்ளையடிப்பது பெரும்பாவமாகும்'' என்று கூறித் தடுத்துவிட்டாள்.

அடுத்தயுத்தத்தில் பாரிசை மீட்கத் திட்டமிட்டாள். இந் நேரத்தில் பாரிசிலிருந்த பலர் ஆங்கிலேயருடன் சேர்ந்து விட்டனர். அதனைக்கண்டு ஆர்க் மிகவும்வருந்தினாள். ஜோன் ஒவ் ஆர்க்பகைவர்களால் சிறைப்படுத்தப்படுவாள் 'என்று அசரீரி கூறியது..

உலகம் சுழல்வது போல் அவருக்கிருந்தது. ''எல்லா உயிர்களையும் கோயிலாகக் கொண்ட இறைவா! நான் சிறைப்படுத்தப்பட்டால் உடனே இறக்கும்படி அருள்தருக!'' என்று வேண்டினாள்.

பர்கண்டி நாட்டுச் சிற்றரசன் காம்பீன் என்னும் நகரைத் தாக்கினான். அது ஜோனுக்குப் பெரும் கவலையைத் தந்தது. உடனே அவ்வரசனோடு போரிட்டாள். போர் மிகக் கடுமையாக நடந்தது. பகல் எல்லாம் யுத்த களத்தில் நூற்றுக்கணக்கான வீரரை அவள் வெட்டிக் கொன்றாள். இடைவிடாத போரினால் அவள் களைப்படைந்திருந்தாள்.

பகைவர் அவளைக் கைது செய்தனர். கைதி ஆர்க் விசாரிக்கப்பட்டாள். தீர்ப்பு குற்றவாளி எனக் கிடைத்தது. லக்சம்பார்க் என்னும் ஆங்கிலேயன் அவளை விலைக்கு வாங்கி அழைத்துச் சென்றான்.

அவன் ஆர்க்கை ஆங்கிலேயருக்கு விற்று விட்டான்.

### மரண தண்டனை

பௌரிவாயர் என்னுமிடத்தில் அவள் சிறை வைக்கப்பட்டாள். ஆர்க்கின் உள்ளம் கொதித்து ''சிறையிலிருந்து சித்திரவதை செய்யப்படுவதைவிட நான் இறந்து இறைவனிடம் சென்றுவிடுவேன்'' என முடிவு செய்தாள்.

அங்கிருந்த உயர்ந்த கோபுரத்தினின்றும் ஆர்க் கீழே குதித்தாள். ஆனால் அவள்சாகவில்லை. உடலும் ஊனமுறவில்லை. உணர்ச்சியற்றுக் கிடந்த அவளைக் காவலர் பிடித்து நீதிமன்றத்தில் நிறுத்தினர். நீதிமன்றம் கூடியது எல்லா வினாக்களுக்கும் அவள் விடையளிக்கவில்லை.

அவள் ஆண்டவனைப் பழிக்கிறாள் என்பது அவள் மேல் சுமத்திய முதற் குற்றம். இரண்டாவது குற்றம் அவள் பேயோடு தொடர்பு கொண்டிருக்கிறாள் என்பது. அவள் ஆணுடை உடுத்தது மூன்றாவது குற்றம். தற்கொலை செய்ய முயன்றது நான்காவது குற்றம்.

குற்றச் சாட்டுகளின் பின் அவளுக்கு மரண தண்டனை வழங்கப்பட்டது.

தண்டனையைக் கேட்ட ஆர்க் வாய்விட்டுச் சிரித்தாள். அவள் நாட்டின் மீது காட்டிய அன்புக்குப் பரிசுதான் மரண தண்டனை!

மக்கள் கூடினர். கழுமரத்தில் ஜோன் ஒவ் ஆர்க் இறுகக் கட்டப்பட்டாள். கீழே பாரிய விறகுக் கட்டைகள் அடுக்கப்பட்டன. தீ வைக்கப்பட்டது. உயிருடன் தீ வைக்கப்பட்டாள் ஆர்க்.

''அருட்பெருஞ் சோதியான ஆண்டவரே! அடியாளை உம்மிடத்துச் சேர்த்துக் கொள்ளும்!'' என்று ஜோன் ஒவ் ஆர்க் வேண்டிக்கொண்டாள்.

கொடுந்தீ அவளது உடையைப்பற்றி; உடலைப்பற்றி, உயிரைப் போக்கிற்று.

நாட்டுக்காகச் சிறு வயதிலே தன்னைத் தியாகத் தீயில் புடமிட்ட வீராங்கனை பலநூறு ஆண்டுகளுக்குப் பின்னரும் மக்கள் உள்ளங்களில் வாழ்கிறாள். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரே பார்வையில் வர்த்தக ஸ்தாபனங்களின் இடம்மாற்றங்கள்

## புடைவைக் கடைகள்

**T. குமாரசாமி ரெக்ஸ்ரைல்ஸ்**
272 (352) நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

சிமா டி ஜுவுளி சமுத்திரம்
(முட்டை புறேயிலர்ஸ் பான்ஸி குட்ஸ்)
**சுமங்கலி**
பிரபல ஜுவுளி வியாபாரி
531, பலாலி வீதி, திருநெல்வேலி.
(யாழ். பல்கலைக் கழகம் அருகில்)

**அரஸ் ஜுவுளியகம்**
550/8 A கே. கே. எஸ். வீதி,
(தட்டாதெரு சந்திக்கு அண்மையில்)
யாழ்ப்பாணம்.

**ரவி & ராஜ் சில்க்**
34, செட்டித்தெரு ஒழுங்கை,
நல்லூர், யாழ்ப்பாணம்.

**மயூரா சென்ரர்**
ஆர். ஜி. பில்டிங்,
70, ஸ்டான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

**ஜி. எஸ். லிங்கநாதன் & கோ.**
424, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

**சிவகணேசன் ஸ்டோர்**
536/2 1ம் மாடி,
கே. கே. எஸ். வீதி (புனிதா பில்டிங்)
யாழ்ப்பாணம்.
குறிப்பு:
யாழ். மனோகரா தியேட்டர், நாவலர் வித்தியாலயத்திற்கு அருகில் அமைந்துள்ளது.

**காவேரி ரெக்ஸ் சென்ரர்**
இல: 768, பருத்தித்துறை வீதி,
(முத்திரைச் சந்திக்கு அருகாமையில்)
நல்லூர்.

## பலசரக்குக் கடைகள்

**பெட்டா எசன்ஸ் சப்ளையர்ஸ்**
333, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

**குகன் ஸ்ரோர்ஸ்**
1/18, கைலாச பிள்ளையார் கோவிலடி,
நல்லூர்.

**விநாயகர் ஸ்ரோர்ஸ்**
115, ஓட்டுமடம் வீதி,
சிவலிங்கப்புளியடி,
(யாழ். இந்து அருகாமை)
யாழ்ப்பாணம்.

**முகமதலி அப்துலலி**
(கிளை ஸ்தாபனம்)
351, (589), நாவலர் வீதி,
(கைலாச பிள்ளையார் கோவில் சந்தி)
நல்லூர்.

**அனஸ் ஸ்ரோர்ஸ்**
205, மானிப்பாய் வீதி,
(வைத்தீஸ்வர வித்தியாலய சந்தி)
யாழ்ப்பாணம்.
குறிப்பு: முன்பு இல. 1 நவீன சந்தை யாழ்ப்பாணம் அனஸ் பிரதர்ஸ் ஆக இயங்கியது.

**ஞானம்ஸ் றேடஸ்**
(மலிபன் பிஸ்கற் விநியோகத்தர்கள்)
நாவலர் வீதி,
(கைலாசபிள்ளையார் கோவிலுக்கு அருகில்)
யாழ்ப்பாணம்.

## வினோதப் பொருட்கள்

**HANIF CO. CENTRE**
119, NAVALAR ROAD,
( Five Junction )
JAFFNA.

**ஜெயா பென்ஸி ஹவுஸ்**
788, பருத்தித்துறை றோட்,
(சங்கிலியன் சிலைக்கு அருகாமை)
முத்திரைச் சந்தி,
நல்லூர்.

**றேடியோஸ்பதி**
766, பருத்தித்துறை வீதி,
நல்லூர்.

**அம்பிகாபதி பென்சி குட்ஸ்**
159, கன்னாதிட்டி றோட்,
( பெருமாள் கோவில் அருகாமை )
யாழ்ப்பாணம்.

## மருந்துக் கடைகள்

**ஆ. இராசையா அன் சன்ஸ்**
மருந்துக் கடை
347, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
(மனோகரா தியேட்டருக்கு அருகாமையில்)

**ரட்ணம் பார்மஸி அன் குரேசரீஸ்**
383, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

**எஸ். சுப்பிரமணியம் & கொம்பனி**
34, ஆடிய பாதம் வீதி,
(நல்லூர் சந்தையில் இருந்து 100யார் தூரத்தில்)
கல்வியங்காடு.

**க. செ. கைலாசம்பிள்ளை & சன்ஸ்**
4, பலாலி வீதி, 2ம் ஒழுங்கை,
(ஆரியகுளம் சந்திக்கு அருகாமை)
யாழ்ப்பாணம்.

## காகிதாதிகள் விற்பனையாளர்

**அம்பலவாணர் & சன்ஸ்**
200, அரசடி வீதி,
யாழ்ப்பாணம்.

**ஹாஜி அப்பாஸ் சன்**
54, ஹாதி அபூபக்கர் வீதி,
(கதீஜா கல்லூரி முன்பாக)
சோனக தெரு, யாழ்ப்பாணம்.
✶ முன்னர் ரகுநாதன் பதிப்பகத்தில் இயங்கியது.

## நிதிநிறுவனங்கள்

**"ஷப்ரு" நிதி நிறுவனம்**
230, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

**மேர்ச்சன்ட் பினான்ஸ் லிமிட்டெட்,**
555, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

**UNION TRUST & Investments Ltd**
145, MAIN STREET,
JAFFNA.

**HORIZON ENTERPRISE**
97, பருத்தித்துறை வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
கல்வியங்காடு,
யாழ்ப்பாணம்.

# வாடிக்கையாளர்களுக்கு வசதிகள் பல!

பணப்புழக்கம் குறைந்துவிட்ட குடாநாட்டில் வாடிக்கையாளர் நலன் கருதிப் பல வசதிகளைச் செய்திருப்பவர்கள் நிதித்துறையில் உங்கள் நண்பனான "ஷப்ரு" யுனிக்கோ பினான்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தார் மட்டுமே!

- ✶ உங்கள் முதலீடுகளுக்குரிய வட்டியை பணமாகவும் விரும்பினால் காசோலையாகவும் பெறலாம்.
- ✶ நீங்கள் முதலீடு செய்ய விரும்பினால் அதையும் காசோலையாகவும் பணமாகவும் செலுத்தலாம்.
- ✶ யாழ். நகரிலும் சரி, மானிப்பாயிலும் சரி பாதுகாப்பான சூழ்நிலையில் உங்கள் அலுவல்களை மனப்பதற்றமின்றிக் கவனிக்கலாம்.
- ✶ மானிப்பாயில் உள்ள "ஷப்ரு" அலுவலகத்தில் இப்போது முதலீடுகளை ஏற்றுக்கொள்வதற்கும் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. அங்கு வழமைபோல வட்டிப் பணமும் வழங்கப்படுகிறது.
- ✶ உங்கள் வசதி கருதி நெருக்கடிக் காலத்திற்கு முன்னர் இருந்தது போலவே காலை 9-00 மணி தொடக்கம் பி. ப. 3-00 மணி வரையும் அலுவல்களைக் கவனிக்கவசதி செய்யப்பட்டுள்ளது.

**★ "ஷப்ரு" யுனிக்கோ பினான்ஸ் லிமிட்டெட் ★**

230, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். யாழ்ப்பாண வீதி, (இலங்கை வங்கிக்கு சமீபமாக) மானிப்பாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்சாண் உடம்பிற்கு தலையே பிரதானம்
தலை பாதுகாப்பிற்கு பருத்தி நூலில்
தயாரித்த தொப்பி பாவியுங்கள்

100 மில்க்வைற் நீலசோப் அல்லது
10 .. பார்சோட் மேலுறைகளைக்
கொடுத்துப் பெற்றுக்கொள்ளலாம்.

**மில்க்வைற் - யாழ்ப்பாணம்.**



# சஞ்சீவி

20 - 06 - 1987 சனிக்கிழமை



தொப்பி இனம்



மில்க்வைற் யாழ்ப்பாணம்.


# சின்னத்தம்பி விடயத்தில் பெரியதம்பி; பெரியதம்பி பிரச்சினையில் பெரியஅண்ணு

தலையிடலாமா ?— 1983 ஜூலை முடிவில் இப்படி அன்னை இந்திரா கேட்டார்.

ஆயிரக்கணக்கான தமிழர் அன்று கொல்லப்பட்ட பின்னர் இந்திரா இப்படிக் கேட்டார்— இந்தியா சேட்டது.

உலகத்தின் வெறுப்புக்கு ஆளான நிலையில் இருந்த ஸ்ரீலங்கா—

ஆம்— என்று பதில் அளித்தது.

அதன்பின்னர் நான்கு ஆண்டுகள் கழிந்தன. எவ்வளவோ மாற்றங்கள் ஏற்பட்டன.

ஆள், அணிகளை ஸ்ரீலங்கா சேர்த்துக்கொண்டது.

1983 ஜூலையில் தனி நபர்கள் திட்டமிட்டு நடத்திய வன்செயல்கள இன்று சட்டபூர்வ அந்தஸ்துடன் நடத்தப்பட்டுவருகின்றன.

இந்த நிலையில் –பாதிக்கப்பட்டுள்ள தமிழருக்கு நிவாரண உதவிகளுடன் வரப்போகின்ருேம். அனுமதியுங்கள் — இப்படி இந்தியா கேட்டுக்கொண்டது.

ஆள், அணி, பட்டாளம் சேர்த்துக்கொண்ட நிலையில் உள்ள ஸ்ரீலங்கா, இறைமை, பிரதேச கௌரவம், தேசிய சுதந்திரம் என்று எல்லாம் பேசியது; தலையிட அனுமதிக்க மாட்டோம் என்று திருப்பிக் கூறியது.

## கேட்காமல் வந்தது

திரும்பிச் சென்ற இந்தியா, 'தலையிடலாமா' என்று கேட்காமல், விமானமூலம் வந்தது.

இதன் மூலம் சொல்ல வேண்டிய செய்தியைத் தெரிவித்தது.

செய்தியின் உள்ளார்த்தத்தைப் புரிந்துகொண்ட ஸ்ரீலங்கா இப்பொழுது 'தலையிடலாம்' என்று உடன்பாடு கண்டுள்ளது.

வெறும் வாய் மூலம் உடன்பாடு அல்ல; இருதரப்பும் கையொப்பம் இட்டு ஏற்படுத்திக்கொண்ட உடன்பாடு.

சுருங்கச் சொல்லின்— அன்று மத்தியஸ்த ரீதியில் தலையிட்ட இந்தியா,

இன்று மனிதாபிமான ரீதியில் தலையிட எழுத்து மூல அனுமதி பெற்றுவிட்டது.

இந்திய நிவாரண உதவி விநியோகம் ஸ்ரீலங்காவுக்கு ஒரு மானப்பிரச்சினை; இந்தியாவுக்கு மனிதாபிமான பிரச்சினை.

மானமா? மனிதாபிமானமா?

இப்போட்டியில் மனிதாபிமானம் வெற்றி கண்டுவிட்டது.

மானப் பிரச்சினை என்று கருதிய ஸ்ரீலங்கா ஏன் இறுதியில் விட்டுக் கொடுத்தது?

கொழும்பு அரசின் பொதுசன தொடர்பு சாதனங்கள் வெளியிடும் தகவல்களின் அடிப்படையில் பார்த்தால் 'உலகமே' ஸ்ரீலங்காவுடன் நிற்கின்றது.

அப்படியான நிலைமையில் ஸ்ரீலங்கா ஏன் விட்டுக் கொடுக்க வேண்டும்? உண்மை, ஊமையாக இருக்க முடியாது என்பதைப் புலப்படுத்துவதாக ஸ்ரீலங்காவின் நடவடிக்கை அமைந்து உள்ளது என்று கருதலாம் அல்லவா?

இந்தியாவை 'பெரிய அண்ணு' (Big Brother) என்று கொழும்பு அரசு

**உள்ளும் புறமும்** (குருமணி)

தொடர்பு சாதனங்கள் கிண்டலாக வர்ணிக்கின்றன.

பெரிய அண்ணு மிரட்டுகிருர் (Big Brother Bullyng) என்றும் அவை கூறுகின்றன.

ஸ்ரீலங்காவின் 'பெரிய தம்பி சின்னத்தம்பி'— பிரச்சினையில் 'பெரிய அண்ணு' எப்படி நடந்து கொள்ளலாம்? அதை விளக்குவதாக இந்தியாவின் நடவடிக்கை அமைந்துள்ளது என்று கூறக்கூடாதா?

## தலையீடு தொடங்கியது எப்போது?

தலையீடு, தலையீடு என்று எல்லாம் பெரிதாகப் பேசுகின்றது ஸ்ரீலங்கா.

தலையீடு எப்போது தொடங்கியது என்று சிந்தித்துப் பார்த்தால்......

பல இனங்கள் வாழும் நாட்டில் பெரிய இனம் சிறிய இனத்தின் விஷயங்களில் தலையிடலாமா?

ஓர் இனம் இன்ன மொழியில் தான் அரசுடன்தொடர்பு கொள்ள வேண்டும் என்று சட்டம் இயற்றுவது தலையீடு இல்லையா?

பெரிய இனத்தின் மொழியை படித்துத் தகுதி பெற்ருல்தான் உத்தியோக உயர்வு என்று கூறுவது சிறிய இனத்தின் உரிமையில் தலையிடுவதாக இல்லையா? சிறிய இனத்துக்குரிய மண்ணை பெரிய இனம் பிடித்துக் கொள்வது அந்தச் சிறிய இனத்தின் பிரதேச சுதந்திரத்தில் தலையிடுவதாக இல்லையா?

இவற்றுக்கு எல்லாம் பதில் காணப்படும்போது தான் பெரிய நாடு சிறிய நாட்டுக்குள் தலையிடலாமா? என்ற கேள்விக்கான பதிலும் கிடைக்கும்.

## மனிதாபிமான ரீதியில் தலையீடு

எப்படியோ ஸ்ரீலங்காவின் சம்மதத்துடன் மனிதாபிமான ரீதியில் தலையிட்டாயிற்று.

நிவாரண உதவிகள் வருகின்றனவோ என்னவோ உடன்பாடு கையெழுத்தாயிற்று.

இதன் மூலம் —

★ தமிழ் மக்கள்மீது பொருளாதார முற்றுகை போடப்பட்டது.

★ இதனுல் தமிழர் வாழ்வு மிகவும் பாதிக்கப்பட்டது; பட்டினி நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

★ பின்னர் நடத்தப்பட்ட இராணுவத்தாக்குதலால் தமிழ் மக்கள் இனக்கொலைக்கு ஆளாகினர்.

★ அவர்களுக்கு உடன் நிவாரண உதவிகள் அளிக்கப்படவேண்டும்.

★ எல்லாவற்றிற்கும் மேலாகப் பெரிய இனம் சிறிய இனத்தை, மனித உரிமைகளுக்கு முரணுக அடக்குமுறைக்கு ஆளாக்கியது –

இவற்றை எல்லாம் ஸ்ரீலங்கா ஒப்புக்கொள்ளாமல் ஒப்புக்கொண்டு விட்டது என்று கொழும்பு அரசியல் வட்டாரங்கள் விமர்சிக்கத் தொடங்கியுள்ளன.

நிவாரண உதவிப் பொருள்களை ஸ்ரீலங்கா பாரபட்சமற்ற முறையில் விநியோகிக்குமா? என்ற இந்தியாவின் சந்தேகத்தையும் நியாயப்படுத்துவதாக இந்த உடன்பாடு அமைந்துவிட்டது.

இறைமை, பிரதேச கௌரவம் என்று எல்லாம் ஒரு பக்கம் பேசிக்கொண்டு,

மறுபக்கம் அனைத்தையும் அடகு வைக்கும் உடன்பாடு ஒன்றில் அல்லவா ஸ்ரீலங்கா கையெழுத்திட்டுள்ளது?

இப்படி கொழும்பு அரசுக்கு எதிரானவர்கள் கேட்கின்ருர்கள்.

இப்போது மனிதாபிமான ரீதியான உடன்பாடு. பின்னர் என்ன விதமான உடன்பாடு வருமோ?— இப்படி கொழும்பில் அரசு வட்டாரங்கள் சில கலங்கி உள்ளதாம்.

1957 இல் ஏற்பட்ட பண்டா– செல்வா உடன்பாடு கிழித்தெறியப்படாமல் இருந்திருந்தால் இது போன்ற உடன்பாடுகள் வந்திருக்குமா?— இப்படி கொழும்பில் உள்ளவர்கள் இப்போது வாயை மெல்லுவதில் என்ன பிரயோசனம்!

எல்லாம் ''அவரால்'' வந்தவினை என்று தலையில் குட்டிக்கொண்டு நடப்பதைப் பார்க்க வேண்டியதுதான். ★

# புதுடில்லியில் இன்று தேவிலால் பதவிஏற்பு

புதுடில்லி ஜூன் 20

ஹரியாறு மாநிலத்தின் புதிய முதலமைச்சர் தேவிலால் இன்று சனி புதுடில்லியில் பதவி ஏற்பார்.

லோக்தள் எம். எல். ஏ க்கள் இன்று காலை சண்டிகாரில் கூடி புதிய முதலமைச்சரைத் தெரிவுசெய்வர்.

அதன் பின்னர் புதிய முதலமைச்சர் புதுடில்லியில் பதவி ஏற்பார்.

சுகவீனம் காரணமாக புதுடில்லியில் அனுமதிக்கப்பட்டிருக்கும் திரு. தேவிலாலே புதிய முதலமைச்சராவர் என்பதை இது உறுதிப்படுத்துகின்றது.

ஹரியாறுமாநிலசட்டசபைத்தேர்தலில் லோக்தள், பாரதிய ஜனதா கூட்டணி 72 தொகுதிகளில் வெற்றியீட்டியது.

84 தொகுதிகளின் முடிவுகள் வெளிவந்துள்ளன.

இத்தேர்தலில்இந்திரா காங்கிரஸ் வேட்பாளர்களாகப் போட்டியிட்ட முதலமைச்சர் பன்ஸிலால் உட்பட 15 அமைச்சர்கள் தோல்வி அடைந்தனர். ஓர் அமைச்சர் மட்டு மே வெற்றிபெற்ருர். (உ–எ)

## பஹுகுண புதிய தலைவர்

புதுடில்லி, ஜூன் 20

லோக்தள் கட்சியின் புதிய தலைவராக திரு. எச். எம். பஹுகுண ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார்.

இத்தெரிவு நேற்று புதுடில்லி மத்திய,மாநில கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் இடம்பெற்றது.

இதுவரை தலைவராக இருந்த திரு. தேவிலாவின் ஒப்புதலுடன் இத்தெரிவு நடந்ததாக கட்சிப் பிரமுகர் காபூர் தக்கூர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

(உ–எ)

## தேவிலால் ஆஸ்பத்திரியில்

புதுடில்லி, ஜூன் 19

ஹரியாறுவில் பெரு வெற்றியீட்டிய லோக்தள் கட்சியின் மாநிலத் தலைவரும், முதலமைச்சராக தேர்ந்தெடுக்கப்படுவார் என எதிர்பார்க்கப்படுபவருமான தேவிலால் நேற்று புதுடில்லி ஆஸ்பத்திரி ஒன்றில் அனுமதிக்சப்பட்டார்.

மூச்சுத் திணறல் காரணமாக அவர் அனுமதிக்கப்பட்டார் என்று ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன. (உ–எ

## இந்திய - - - - - - - - -

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்குடாநாடு மீது உணவுப் பொதிகள் போட்ட சம்பவம் பற்றி செய்தியாளர்கள் கேட்ட போது,

'இச் சம்பவம் இரண்டு நாடுகளின் உறவுகளைப் பாதிக்காது' – என்று அமைச்சர் ஹமீது பதிலளித்தார்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண இந்திய மத்தியஸ்தத்தை ஸ்ரீலங்கா மீண்டும் நாடுமா? – இப்படி ஒரு செய்தியாளர் கேட்டார்.

அமைச்சர் ஹமீது பதிலளிக்கையில், இனப்பிரச்சினைக்கு நிரந்தர அரசியல் தீர்வு ஒன்றைக் காணுவதற்கு இந்தியாவின் மத்தியஸ்தம் இன்றியமையாதது.

இந்தியாவின் மத்தியஸ்தத்தை ஸ்ரீ லங்கா இப்போது கூட மீண்டும் ஏற்கத் தயாராக இருக்கிறது.

டிசம்பர் 19 யோசனைகள் பேச்சுக்களை மீண்டும் தொடங்குவதற்கு நல்ல அடிப்படை என்பதே என் கருத்து.

இனப்பிரச்சினையில் இந்தியா வழங்கி வரும் நல்லெண்ண உதவிகள் நியாயமானவையாக உள்ளன.–என்று அமைச்சர் சாகுல் ஹமீது தெரிவித்தார். (அ–எ)

## மீண்டும் மட்டுநகர் சேவை

வட பிராந்திய போக்குவரத்துச் சபையின் யாழ்-மட்டக்களப்பு பஸ் சேவைகள் நாளை முதல் மீண்டும் ஆரம்பமாகின்றன.

நீண்ட நாட்களாக இச்சேவை நிறுத்தப்பட்டிருந்தது தெரிந்ததே.

பயணிகள் முன் கூட்டியே ஆசனப் பதிவுகளை செய்து கொள்ளலாம் என்று தற்போது அறிவிக்சப்பட்டுள்ளது.

நாளை காலை ஐந்து மணிக்குஇந்தபஸ்சேவை யாழ் பஸ் நிலையத்தில் இருந்து ஆரம்பமாகும். (உ–10)

## ஸ்ரீலங்காவின் - - -

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

கின்றேன்.

கேள்வி:– மத்திய அரசின் உதவியுடன் தமிழ் நாடு அரசு இலங்கைத் தமிழருக்கு நிதி உதவி அளித்தது போன்று வெளியார் பஞ்சாப்புக்கு உதவி அளித்தால்......?

பிரதமர் காந்தி: இரண்டையும் சமமாகப் பார்க்க முடியாது.

சீக்கியர்கள் அரசுக்கு எதிரானவர்கள் அல்லர். அவர்களுடன் நாம் சண்டை போடவில்லை. முழு மக்களையும் விமானம் மூலம் குண்டு போட்டு நாம் அழிக்கவில்லை.

அவர்களுக்கு உணவுப் பொருள்கள் செல்வதை நாம் நிறுத்தவில்லை; மருத்துவ உதவிகளை நாம் மறுக்கவில்லை.

இவற்றை எல்லாம் ஸ்ரீலங்கா அரசு தனது சொந்த மக்களுக்குச் செய்கின்றது.

இதன் காரணமாகத்தான் துன்பப்படும் அம்மக்களுக்கு உதவ நாம் தீர்மானித்தோம்.

எமது நிவாரண உதவிகளில் மறைப்பதற்கு ஒன்றும் இல்லை. எவரும் பரிசோதனை செய்யக் கூடியதாகவே இருக்கின்றது.

கேள்வி: ஸ்ரீலங்காப் பிரச்சினையில் ஒருவரும் எமக்கு ஆதரவளிக்க வரவில்லையே?

பிரதமர் காந்தி: நாம் மனிதாபிமான நிவாரண உதவிகளை வழங்குவதில் அக்கறை காட்டுகின்ருேம் என்பதை சர்வதேச சமூகம் நன்கு விளங்கிக்கொண்டுள்ளது.

ஸ்ரீலங்காவின் பிரச்சினைகள், பேச்சுக்கள் மூலம் தான் தீர்க்கப்பட இதில்தான் ஈடுபட்டுள்ளது. இனப் பிரச்சினை எம்மைப் பெருமளவு பாதிக்கின்றது. இது எமக்குக் கவலையைத் தருகின்றது.

ஆகவே தான் நாம் இருதரப்பு முறையில் கையாண்டு வருகின்ருேம். இந்த முறையில் தான் நாம் தொடருவோம்.

### ஈழத்தை ஆதரியோம்

கேள்வி: ஸ்ரீலங்காவில் நிலைமை இந்தியாவுக்குப் பாதகமாக மாறியுள்ளது என்பதை நீங்கள் ஏற்றுக் கொள்கின்றீர்களா?

பிரதமர் காந்தி:இல்லை. நிலைமை மாறவில்லை. ஸ்ரீலங்காவுடனுன எமது அடிப்படைக் கொள்கை அப்படியே தான் உள்ளது. பேச்சுக்கள் மூலம் தீர்வு காணப்பட வேண்டும். ஈழம் நிலைப்பாட்டை நாம் ஆதரிக்கமாட்டோம்.

கேள்வி: தமிழ்ப் பிரிவினை வாதிகளுக்கு தமிழ் நாடு அரசு நிதி உதவி அளிப்பதை நீங்கள் ஆதரிக்கின்றீர்களா?

பிரதமர் காந்தி: நிவாரண முகாம்களை நடத்த மனிதாபிமான அடிப்படையில் எம். ஜி. ஆர். உதவி வழங்கியுள்ளார். ஒரு லட்சத்துக்கு அதிகமான தமிழ் அகதிகள் இந்தியாவில் உள்ளனர்.

ஸ்ரீலங்காவில் உள்ள தமிழர் தங்களைத் தாங்களே பார்த்துக்கொள்வர் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு. பொருளாதார முற்றுகை,உணவுப் பொருள் நிறுத்தம் அவர்களுக்கு பெரும் பிரச்சினைகளை ஏற்படுத்தியுள்ளன. அதனுல் தான் நாம் நிவாரணப் பொருட்களை அனுப்புகின்ருேம்.

— இப்படி பிரதமர்

## ஸ்ரீலங்கா- - -

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கொல்வது, வெடிமருந்துகளை உபயோகிப்பது- இவையே அரசியல் சார்பற்ற பயங்கரவாதச் செயல்கள் என்று நிபுணத்துவ குழு பரிந்துரை செய்திருந்தது.

### ஸ்ரீலங்கா – இந்தியா முரண்பாடு

இப்பயங்கரவாதச் செயல்கள் அரசியல் ரீதியானதா, இல்லையா என்பதைத் தீர்மானிக்கும் உரிமை எந்த நாட்டில் குற்றம் இழைக்கப்பட்டதோ அந்த நாட்டின் அரசிடம் வழங்கப்படவேண்டும் என்று ஸ்ரீ லங்கா இந்த மாநாட்டில் வற்புறுத்தியது.

ஆனுல் இந்தியாவோ இதை ஏற்றுக் கொள்ளவில்லை.

குற்றமிழைத்ததாகக் கூறப்படுபவர் எந்த நாட்டில் தஞ்சம் அடைந்திருக்கின்ருரோ அந்த நாடு தான் அது பற்றி தீர்மானிக்க வேண்டும்- இப்படி இந்தியா கூறியது.

இப்பிரச்சினை இப்போது சட்டத்துறை நிபுணர் குழுவின் பரிசிலனைக்கு விடப்பட்டுள்ளது என்று தெரிகிறது. (உ–எ)

## பாக் - ஸ்ரீ---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சர் லலித் அத்துலத்முதலி அப்போது எடுத்துச் சென்று பாகிஸ்தான் ஜனுதிபதியிடம் கையளித்தார்.

பாகிஸ்தானுடன் நட்புறவு உடன்படிக்கை ஒன்றைச்செய்துகொள்ள ஸ்ரீலங்கா எடுத்து வரும் முயற்சிக்கு அமெரிக்கா ஆதரவு தெரிவித்திருக்கின்றது.

—இப்படி ராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன.

பாகிஸ்தான் ஜனுதிபதி, பிரதமர் மற்றும் அமைச்சர்களுடன் பேச்சுக்களை நடத்திய பின்னர் அமைச்சர் அத்துலத்முதலி லண்டன் வழியாக அமெரிக்கா சென்றிருக்கின்ருர் என்பது குறிப்பிடத்தக்கது.

(உ–ஜ–எ)

## மேலும்------

(1ம் பக்கத் தொடர்ச்சி)

திணைக்களத்திற்கு அனுப்பிவைக்சப்பட்டுள்ளதாக கல்வியமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன

இந்த இடமாற்றங்கள் அடுத்த மாதம் முதலாம் திகதி முதல் அமுலுக்கு வரும்.

இடமாற்றம் பெற்றுள்ளோரின் விபரப் பட்டியல் அடுத்த வாரமளவில் யாழ். கல்விப் பணிமனைக்குக் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. (உ–119)

## ஹெலி வேட்டு

யாழ்ப்பாணம், ஜூன்20

யாழ்ப்பாணத்தில் நேற்று ஹெலிக்கொப்டர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டது.

நேற்று மாலை 6–30 மணி அளவில் நகரப் பகுதிக்கு வந்த ஹெலிக்கொப்டர் ஒன்று திடீரென தாழப்பறந்து நோட்டமிட்டது.

இதனையடுத்து போராளிகள் ஹெலிக்கொப்டர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர்.

போராளிகளின் துப்பாக்கிப் பிரயோகத்தையடுத்து உயரப் பறந்த ஹெலிக்கொப்டர் நகர்ப் பகுதியை நோக்கி சரமாரியான வேட்டுகளைத் தீர்க்கது. (உ-10)

ஈழத்தைவிட்டு ஓடினுல்

# எமது மண்ணும் பலஸ்தீனமாகும்

## ஈழவர் முன்னணி பிரமுகர் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன்20

ஈழவர்களின் இறுதி இலட்சியம் ஈழமே. இந்தப் போராட்டத்தில் விட்டுக் கொடுப்பதற்கே இடமில்லை.

சுயலாபத்திற்காக எமது மண்ணை விட்டு ஓடுவது பெருந்தவருகும். எமது மண்ணை விட்டு நாம் வெளியேறி அதனை எதிரியிடம் பறிகொடுத்தால் எமது மண் மற்ருெரு பலஸ்தீனமாகும்.

பலஸ்தீனியர்கள் தமது மண்ணை பறிகொடுத்துவிட்டுப் போராடுவது போல் போராட வேண்டிய நிலைக்கு நாம் தள்ளப்படுவோம்.

–இப்படி நேற்று சுன்னுகம் சந்தை வெளியில் ஈழவர் முன்னணி நடத்திய பொதுக்கூட்டத்தில் உரை நிகழ்த்திய முன்னணியின் பிரமுகர் திரு. எட்வேர்ட் கூறினுர்.

கிழக்கும், வன்னியும் தமது கட்டுப்பாட்டில் என்கிறது அரசு. ஆனுல் அங்கு போராளிகள் வெற்றிகரமாகத் தமது தாக்குதல்களைத்தொடர்கின்றனர். இப்படி எட்வேர்ட் மேலும் கூறினுர்.

கூட்டத்திற்கு முன்னணிப் பிரமுகர் திரு. செல்வநாயகம் தலைமை வகித்தார். மொகமட், தனபாலசிங்கம் ஆகியோரும் உரைநிகழ்த்தினர். (உ)

## மீண்டும் நாதஸ்வர வகுப்புகள்

காங்கேசன்துறை, ஜூன் 20

யாழ். மாவட்டக் கலாசார பேரவையின் ஆதரவில் நடைபெறும் நாதஸ்வர,தவில் பயிற்சி வகுப்புகள் நாளைமுதல் மீண்டும் ஆரம்பமாகி நடைபெறும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஊரடங்கு நிலை, அகதிகள் பெருக்கம் ஆகியவை காரணமாக தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தானத்தில் இடம் பெற்று வந்த இந்த வகுப்பு கடந்த சிலதினங்கள்தடைப்பட்டிருந்தது. உ-11)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**பவளன் கிறிஸ்ரி**

பிறப்பு:- 09 - 08 - 1957

இறப்பு:- 20 - 06 - 1986

வான் புகழ் கொண்ட வள்ளுவன் தருவழி
மாண்புடன் வாழ்ந்து மறைந்த எம் கிறிஸ்ரி-ஓர்
ஆண்டுடன் யுகங்கள் பலவாய் பெருகினும்
ஈராண்டு உன் மலர்முகம் அகல் விளக்காய்
ஒளிர்விடும்

உங்கள் பிரிவால் துயருறும்

**மனைவி, மகள், உறவினர், நண்பர்கள்**

(1435)

## இதய அஞ்சலி



தோற்றம்: 02 . 01 . 1923

★ ★

மறைவு: 17 06 . 1987

**எஸ். ரி சாறி** பி. எஸ்ஸி.

எமது சங்கத்தின் முன்னுள்
தலைவரின் மறைவுக்கு
எமது இதய அஞ்சலி.

யாழ்ப்பாணம். 20–06–1987.

யாழ். பாடசாலைகள் விளையாட்டுச் சங்கம்


இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேற்) லிமிடெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி: 20-06-1987.

Printed and Published by New Uthayan Publications (Pvt) Ltd at 292/2 Navalar



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org